
KALKI 6.3.2005
ரூ.6.00


கல்கி



ஆன்மிகச் சிறப்பிதழ்







இப்போது ஜயேந்திரர்!



Solid Wood Indian Furniture

simply™
FURNITURE
The way of life!


sunidra Rs. 10050/-
(without storage & side table)



nisha Rs. 8650/-
(without storage & side table)



triveni
Rs. 4580/-



chhota-bada
Rs. 9120/-



vividha
Rs. 5670/-



daawat Rs. 13230/-
(without fingertip)



daawat Rs. 17150/-
(without fingertip)



*prices excluding accessories

Manufactured By :

Ekbote's Logs & Lumbers Pvt. Ltd.

CHENNAI : 37 G. N. Chetty Road, Next to Sun Plaza, Near Anna Flyover
Chennai : 600006. **Tel. 52129031 / 52129032** E-mail: ekbote@vsnl.com Website : www.ekbotefurniture.com

Time : 10.00 am to 8.30 pm / Monday Closed



கோயில் பழசு; கோலம் புதுசு!

34ம் - பக்கத்தில் வெளியாகியுள்ள மேலச்செவல் கிருஷ்ணர் கோயில் கட்டுரையைப் படியுங்க...

உங்க ஏரியாவிலும் இதுபோல ஊர் மக்கள் ஒன்று கூடி பழம் பெரும் கோயிலைப் புதுப்பித்து அழகு படுத்தியிருந்தால், அது பற்றி தகுந்த படங்களுடன் எழுதி அனுப்புங்க...

பரிசு உண்டு....

சர்ச்சை சர்வே 1

டியர் வாசகாஸ்....

4-8 பக்கங்களில் வெளியாகியுள்ள கட்டுரையைப் படியுங்க! அது தொடர்பான 'சர்ச்சை சர்வே போட்டி' உங்களுக்காகக் காத்திருக்கிறது.

"தொகுதிகள் மறுசீரமைப்பு என்ற பெயரில், தி.மு.க. வழக்கமாக வெற்றி பெறும் தொகுதிகளை பலவீனமாக்க முயற்சி நடக்கிறது. அதை முறியடிப்போம்" என்கிறார் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினரும், மறுசீரமைப்பு கமிஷன் உறுப்பினருமான பொன்முடி!

"எதற்காக இந்த தொகுதி மறு சீரமைப்பு?"

"2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னர், அதன் அடிப்படையில் சட்டமன்றத் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்தது. இதற்குக் காரணம், ஒரு தொகுதியில் மிக, மிக அதிகமான எண்ணிக்கையில் வாக்காளர்கள் இருக்கிறார்கள். பரப்பளவும் அதிகமாக இருக்கிறது.



"சதியை முறியடிப்போம்!"

பொன்முடி

மற்றொரு தொகுதியைப் பார்த்தால், மிகக் குறைவான வாக்காளர் எண்ணிக்கை கொண்டதாக இருக்கிறது. ஆகவே மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையை, தமிழகத்தில் இப்போதுள்ள மொத்தத் தொகுதியான 234ஆல் வகுத்து, ஒரு தொகுதிக்கு இவ்வளவுதான் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். இப்படி வரும் சராசரி எண்ணிக்கையில் பத்து சத விகிதம் கூடவோ குறையவோ செய்யலாம். இது தவிர இப்போதுள்ள தலித் தொகுதியில், தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்குமானால், அதை அந்தப் பிரிவிலிருந்து நீக்க வேண்டும். புதிதாக ஒரு தொகுதியில் அவர்களது எண்ணிக்கை அதிகமாகி இருந்தால், அந்தத் தொகுதியை தலித் தொகுதியாக அறிவிக்க வேண்டும். ஒரு தொகுதி இரண்டு மாவட்டங்களில் இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட மாற்றங்கள் தேவைப்படுவதால்தான் இந்த மறுசீரமைப்பு."

ஆளுங் கட்சி எந்த விதத்தில் தலையிடுகிறது?

"உள்ளாட்சித் தேர்தல் நடத்தும் பொறுப்பில் உள்ள மாநில தேர்தல் கமிஷனர் இங்குள்ள அரசுக்குக் கட்டுப்பட்டவர். பதவி காரணமாக இவர் மறுசீரமைப்பு கமிஷன் உறுப்பினர். 'தமிழகத்தில் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு விட்டன. அது குறித்த நோட்டீஸ் தாலுகா அலுவலகங்களில் ஒட்டப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் மாநிலத்

‘நாள்தோறும் ஆண்டவனை வணங்கி, வாழ்தல் வேண்டும். இல்லையேல் உலகத்தில், உயிர்களிடத்தில் அன்பும், அருளும் இரக்கமும் ஒரு சிறிதேனும் ஏற்படாது.’

- ஸ்ரீ ராமலிங்க வள்ளலார்



தேர்தல் கமிஷனர் அறிக்கை விட்டார். அவருக்கு இதைச் செய்வதற்கெல்லாம் உரிமை கிடையாது. பல தாலுகாக்களில் தொகுதி சீரமைப்பு நோட்டீஸ் போட்டார்கள். நாங்கள் குல்தீப் சிங் அவர்களின் கவனத்துக்கு இதைக் கொண்டு வந்தோம். அவர் நவம்பர் 5, 2004ம் வருடம் "மாநிலத் தேர்தல் கமிஷனர் பத்திரிகைகளுக்கு மறுசீரமைப்பு குறித்து பேட்டி கொடுக்கக் கூடாதென்றும், சீரமைப்பைப் பற்றி முடிவு செய்ய அவருக்கு எந்த உரிமையும் இல்லை" என்றும் தெளிவாகக் கடிதம் எழுதி விட்டார். நாங்கள் சரியான நேரத்தில் விழித்துக் கொண்டு விட்டோம்.

2001ல் மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படையில், ஆண்டிப்பட்டி தலித் தொகுதி ஆக வேண்டும். ஆனால் அது முதல்வர் போட்டியிடும் தொகுதி என்பதால், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகம் கொண்ட பகுதியை பக்கத்துத் தொகுதியில் இணைத்து விட்டு, ஆண்டிப்பட்டியை பொதுத் தொகுதியாகவே நீட்டிக்க பரிந்துரைத்தார்கள். வெற்றி பெறும் தொகுதிகளை பலவீனமாக்கி, கழகத்தின் வெற்றி வாய்ப்பைக் குலைக்கும் முயற்சி தொடர்ந்து நடக்கிறது. ஆனால் அதை நாங்கள் முறியடிப்போம்."

இந்த மறுசீரமைப்பினால் தமிழகத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உயருமா?

மொத்த எண்ணிக்கை உயராது. மாவட்டங்களுக்குள் தொகுதி எண்ணிக்கை ஏறவும், இறங்கவும் கூடும்.

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **ராஜன்**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் சேவைக்கு

இப்போது

கலவை.

ஓசைப்படாமல் இருந்த சாதாரணமான ஊர், திடீர் என்று அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. பத்தாயிரத்துக்கும் குறைவான ஜனத்தொகை. ஊரில் எந்த விதமான பரபரப்பும் காணப்படவில்லை. வெயில் கொளுத்தும் பஸ் நிலையம், அரசாங்க பள்ளிக்கூடம், இரண்டு சினிமா தியேட்டர்கள், சிவன், பெருமாள், மாரி அம்மன் கோயில்கள், இதற்கு மேல் சொல்லும்படியாக வேறு ஏதுமில்லை.

''இப்போதான் ஒரு மொபைல் போன் டவர் கட்டியிருக்காங்க. இன்னும் சர்வீஸ் ஆரம்பிக்கவில்லை'' என்று பஸ் ஸ்டாண்டில் சந்தித்த உள்ளூர்க்காரரான கோட்டி சொன்னதும்தான் கவனித்தோம், நமது மொபைல் போனுக்கு சிக்னல் கிடைக்கவில்லை என்பதை.

பஸ் நிலையத்தை ஒட்டினாற்போல லோக்கல் பா.ஜ.க. ஆசாமி ஒருவர் நிறுவிய வரவேற்பு வளைவு, வருகிறவர்களுக்கு நல்வரவு சொல்கிறது. பாசி படிந்த குளத்தைத் தாண்டி திரும்பினால், புதிதாக உயர்த்திக்கட்டப்பட்டு, வெள்ளை அடிக்கப்பட்ட சுற்றுச்சுவர். மூடி வைக்கப்பட்ட மெயின் நுழை வாயில். பக்கத்தில் ஒற்றை கிரில் கேட் கொண்ட வழி. ஒட்டினாற்போல ஒரு சிறு கொட்டகையில் தனியார் செக்யூரிட்டி ஆட்கள்.

உள்ளே நுழையும் ஒவ்வொருவரையும் கேள்விகள் கேட்டு, விசிட்டிங் கார்டை வாங்கிப் பார்த்துவிட்டு, சங்கராச்சாரியாரை தரிசிக்க வந்திருக்கும் பக்தர்கள் என்று திருப்திப்பட்ட பின்னரே உள்ளே அனுப்புகிறார்கள். பத்திரிகைக்காரர்களுக்கு பொதுவாக அனுமதி இல்லை. நாம் விசிட்டிங் கார்டைக் கொடுத்து விட்டு, சம்பந்தப்பட்டவர்களுடன் பேசிய பின், செல்ஃபோன், கேமரா இன்னபிற ஐட்டங்களை வாங்கி வைத்துக் கொண்டு உள்ளே செல்ல அனுமதித்தார்கள்.



நுழையுமிடத்தில் கொஞ்சம் கெடுபிடி என்றாலும், பக்தர்கள் திரளாக தினமும் வரவே செய்கிறார்கள். எந்த நேரமும் கலவை பிருந்தாவனத்துக்கு வெளியில் கார்களும், வேன்களும் நிற்கின்றன. ஆற்காடு, செய்யாறு, காஞ்சிபுரம் என்று அக்கம் பக்கத்து நகரங்களிலிருந்து கலவைக்கு பஸ் வசதி இருப்பதால், புதிதாக ஒரு பஸ் கால அட்டவணை எழுதிவைத்திருக்கிறார்கள். பிருந்தாவன வளாகத்தினுள் சிற்சில







ஜயேந்திரர்!

• பழமையான சிவன் கோவில்


புதுச் சுவர்கள் எழுந்துள்ளன. புதிதாய்க் கீற்றுக் கொட்டகைகள் போடப்பட்டுள்ளன. சந்திரமௌளீஸ்வரர் பூஜைக்கு ஒரு ஹால், தரிசனத்துக்குத் தனி இடம், பக்தர்கள் காத்திருக்க இடம், சாப்பிடும் இடம் என்று காஞ்சி மடம் போலவே இங்கேயும் இருக்கின்றன.

நாம் போன சமயம், சந்திரமௌளீஸ்வரர் பூஜை செய்து கொண்டிருந்தார் ஸ்ரீ ஜயேந்திரர். திரைச்சீலை மூடப்பட்டு, பக்தர்கள் 'ஹரஹர சங்கர; ஜய ஜய சங்கர' கோஷம் எழுப்பியபடி அமர்ந்திருந்தனர். இடை இடையே சில பெண்மணிகள் பக்திப்பாடல்களைப் பாடினார்கள். பூஜை முடிந்து தீபாராதனையை அடுத்த சில நிமிடங்களில் ஸ்ரீ ஜயேந்திரர் வெளியில் வந்தார்.

பக்கத்திலேயே அறுபத்து ஆறாவது மற்றும் அறுபத்தி ஏழாவது காஞ்சி பீடாதிபதிகளின் சமாதிகள் இருக்கின்றன. அங்கே தினசரி பூஜை நடைபெறுகிறது. தீர்த்தப்பிரசாதம் வழங்கப்படுகிறது. ஸ்ரீ ஜயேந்திரர் அங்கு சென்று வணங்கி விட்டுத் திரும்பினார். சந்திரமௌளீஸ்வரர் பூஜையின் தீர்த்தப் பிரசாதம் வழங்கி முடிக்கப்பட்ட சிறிது நேரத்தில், பக்தர்களுக்கு தரிசனம் அளித்து ஆசிவழங்கினார் சங்கராச்சாரியார்.

பிருந்தாவனத்தின் இன்னொரு பகுதியில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது. இந்த கலவை பிருந்தாவன வளாகத்தில் தான், மகா பெரியவர் தமது பதிமூன்றாவது வயதில் சன்னியாசம் ஏற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மடத்தினுள்ளே ஒருவருக்கொருவர்



• ரமேஷ்



• கோட்டி



• ராஜேந்திரன்



• ராஜா மணிதன்

கலவையிலிருந்து சென்னை திரும்பிய கையோடு, ஸ்ரீ விஜயேந்திரர் தங்கி இருக்கும் காமாட்சி அம்மன் கோயிலுக்கும் ஒரு விசிட் அடித்தோம். கிரீன்வேஸ் சாலையில் துர்கா பாய் தேஷ் முக் ஆஸ்பத்திரிக்கு எதிர் ரோடில், உள்ளடங்கினாற் போல இருக்கிறது காமாட்சி அம்மன் கோயில். மேடை போன்ற மண்டபத்தின் ஒரு புறத்தில் கண்மூடி அமர்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தார் ஸ்ரீ விஜயேந்திரர். கணிசமான பக்தர் கூட்டம் தரிசனத் துக்குக் காத்திருந்தது. காஞ்சி மடத்தைச் சேர்ந்த, வேதம் படிக்கும் மாணவர்கள் உடன் இருக்கிறார்கள். தினமும் வேதபாராயணம் நடக்கிறது - காலையில் ஏழரை முதல் பதினொரு மணி வரை பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார் பால பெரியவர். மீண்டும் மாலை ஐந்து மணியிலிருந்து தொடங்கி எட்டு வரை தரிசனம் தொடர்கிறது.

உரக்கப் பேசுவதில்லை. சலசலப்பு கிடையாது. ஒரு வித இறுக்கமான சூழ்நிலையே நிலவுகிறது.

சென்னையிலிருந்து வேன் மூலம் கலவையில் ஸ்ரீ ஜயேந்திரரை தரிசிக்க வந்திருந்தது பக்தர்கள் குழு ஒன்று. காஞ்சிபுரம் போல கலவைக்கு அதிக அளவில் பஸ் வசதி இல்லை என்பதாலும், காஞ்சிபுரத்தைவிட கலவை தூரம் அதிகம் என்பதாலும், சென்னையில் இருக்கும் காசி பீடத்தின் அமைப்புகள் சில, சென்னையிலிருந்து கலவை மற்றும் காஞ்சிக்குச் சென்றுவர, வேன் வசதி செய்து கொடுப்பது தெரியவந்தது. மயிலை கபாலீஸ்வரர் கோவிலிருந்து புறப் பட்டால், தி.நகர் திருப்பதி தேவஸ்தானத்தில் ஒரு பிக் அப் பாயிண்ட். அதேபோல மேற்கு மாம்பலம் சங்கர மடத்தி லிருந்தும் கலவைக்குச் சென்று வர ஏற்பாடு செய்கிறார்கள். இதற்கு பக்தர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு.

கலவையில், சங்கர மடம் ஒரு முதியோர் இல்லத்தையும் நிர்வகித்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இந்த முதியோர் இல்லத்தில், நூற்றுக்கும் அதிகமான ஆதரவற்ற முதியவர்கள் பராமரிக்கப்படு கிறார்கள். கூடவே உடல் ஊனமுற்றவர்களுக்கான இல்லமும் இங்கே செயல்பட்டு வருகிறது.

மீண்டும் பஸ் நிலையத்தை அடைந்து, ஆட்டோ பிடித்து, கலவையை ஒரு சுற்றுச் சுற்றி வந்தோம். ஊருக்குச் சற்று வெளியில் அமைந்துள்ளது ஒரு சிவன் கோவில். ஊரில் இதனை கோட்டை கோவில் என்கிறார்கள். உபயம்: பிரம் மாண்டமான சுற்றுச் சுவர். நானூறு வருஷ பழைமை வாய்ந்தது. உள்ளே சில இளவட்டங்கள் வெயில் வீணாய்ப் போகாதபடி கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள். கலவையின் கும்ளே பந்து வீச, திராவிட் விளாசிக் கொண்டிருந்தார். தவிர ஊரில் பெருமாள் கோவில், பிள்ளையார் கோவில், அங்காள பரமேஸ்வரி கோவில், கமலக்கண்ணி கோவில் என்று பக்திக்குக் குறைவில்லை. அங்காள பரமேஸ்வரி கோவிலில் ஒரு விசித்திரமான



தண்ணீருக்கடியில்
வருஷக்கணக்காக
இருந்து
40 ஆண்டுகளுக்கு
ஒரு முறையே
வெளியில் வந்து
தரிசனம் தரும்
அதி அபூர்வமான
அத்திவரதர்
பற்றி நீங்கள்
தெரிந்து கொள்ள
வேண்டாமா?
இந்த இதழ்

3 இணைப்புகள்

நலமும் வளமும் தரும்
நமசிவாய துதிகள்
தனிப் புத்தகம்

பிரதோஷத்தின் கதை மினி புத்தகம்.

வாஸ்து தோஷம் போக்கும்
ஸ்வர்ண அலங்கார பெருமாள்
புகைப்படம்

மாதம் இருமுறை


குமுதம் பக்தி ஸ்பெஷல்

மார்ச் 1, 2005

பாருங்கள்



• கலவை பஸ் நிலையம்



• கலவையின் கும்பளே

நிறையப் பேர் வந்து போகிறார்கள்'' என்றார் பஸ் ஸ்டாண்டில் சந்தித்த ஆட்டோ டிரைவர் ராஜேந்திரன். ''அவர் இங்க தங்கி இருக்கிற சமயத்துல ஊருக்கு ஏதானா வசதி வந்துச் சின்னா நல்லா இருக்கும்'' என்றார் கலவை ரமேஷ்.

''விசாரணை எல்லாம் முடிஞ்சு, நிரபராதினு வெளியே வருவாருங்க. அதுக்கப்புறம், தமது சமுதாயப்பணியை, குறிப்பாக தலித் மக்களுக்கான சேவையை இன்னும் விஸ்தரித்து, மக்கள் இயக்கமாக மாற்றுவாரு. அவசியம்னா அரசியலுக்கும் வருவாரு... வரணும் இதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பும் கூட'' என்றார் பள்ளிக் கரணையைச் சேர்ந்த ராஜா மனிதன்.

சர்ச்சை சர்வே!

'ஜயேந்திரர் அரசியலுக்கு வரணுமா? வேண்டாமா? - உங்கள் கருத்து என்ன? அஞ்சலட்டையில் ஆம் / இல்லை என்று எழுதி, நான்கே வரிகளில் காரணத்தை விளக்கி அனுப்பி வையுங்கள். 'சர்ச்சை சர்வே - 1' எனக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

கடைசித் தேதி : 12.3.05

நம்பிக்கை. திருமணம், பிள்ளைப் பேறு, படிப்பு, உடல் நலம் என்று எந்தப் பிரச்னை என்றாலும் சம்பந்தப்பட்டவர்களின் போட்டோவை பிரேம் போட்டு இந்தக் கோவிலின் உள்ளே கொண்டு வந்து மாட்டி வைத்து விடுகிறார்கள். கோயிலின் சுவர்கள் எங்கும் போட்டோ மயம்.

ஸ்ரீ ஜயேந்திரர், கலவைக்கு வந்தவுடன் முதலில் சில நாட்கள் உள்ளூர் மக்கள் அவரைச் சென்று பார்த்துவிட்டு வந்தனர். ''வெளியூர்களி லிருந்துதான் தினமும்

- எஸ். சந்திரமௌலி

படங்கள்: **யோகா, அரவிந்த்**

காஞ்சிமட படங்கள்: **www.kanchi_sathya.org**



சால்ட்டு கண்ணழகி!

• மனிதன் தன்னுடைய 30வது வயதிலிருந்து சுருங்கத் தொடங்கிவிடுகிறான்.

• ஒருவன்/ள் தன் வாழ்நாளில் சுமார் 40 பவுண்ட் புழுதியை சுவாசிக்கிறான்.

• மனித நுரையீரலின் தளம் ஒரு டென்னிஸ் கோர்ட்டின் அளவினுடையது.

• நம் மூக்குதான் நம்முடைய பர்ஸனல் ஏர்-கண்டிஷனர். குளிர் காற்றை உஷ்ணமாக்கி, உஷ்ணக் காற்றை குளிர்ப்படுத்தி அழுக்குகளை ஃபில்டர் பண்ணி விடுகிறது.

• நமக்குள் 70 சதவிகிதம் நீர்.

• ஒரு புன்னகை செய்தால் போதும், குறைந்தது 30 தசைகளேனும் உடற்பயிற்சி செய்கின்றன.

• நாம் எதையேனும் ஸ்பரிசித்தால் நம்முடைய மூளைக்கு 124 MPH கதியில் செய்தி அனுப்பப்படுகிறது.

• ஒவ்வொரு நாளும் நாம் 100 பில்லியன் சிவப்பு அணுக்களை உற்பத்தி செய்கிறோம்.

• நம் இதயம் ஒரு நாளைக்குத் துடிப்பது சுமார் 10,000 தடவை.

• மனித உடலில் இருக்கும் கரிப் பொருளை (கார்பன்) சேமித்தால் சுமார் 9,000 பென்சில்கள் செய்ய உபயோகிக்கலாம்.

• மனிதன் வெட்கப்பட்டு முகம் சிவந்தால், கூடவே அவனுள் இருக்கும் வயிற்றின் உட்பகுதியும் சிவந்து போகும்.

• ஒரு கம்பளிப் பூச்சியைவிட மனிதனுக்கு தசைகள் குறைவு.

• நம் வாயிலிருக்கும் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட நம் நாட்டின் ஜனத்தொகையளவு!

• நம் கருவிழிகளில் மூன்றரை சதவிகிதம் உப்பு. (சினிமாப் பாடலாசிரியர் கவனிக்க)

• ஒரு சராசரி மனிதன் தன் வாழ்நாளில் சுமார் 16,000 காலன் தண்ணீர் குடிக்கிறான்.

• ஒவ்வொரு முறை தும்மும் போதும் நம் உடல் உறுப்புகள் வேலை செய்வதை நிறுத்தி விடுகின்றன. - இதயம் உட்பட!

• 18 ஏக்கர் அளவு பிட்ஸாவை ஒவ்வொரு நாளும் அமெரிக்கர்கள் விழுங்குகிறார்கள்.

- லதா சேகர்

சின்னான் செய்திகள்



நான் சொல்லப்போற கடைசி நியூஸைக் கேட்டு பல பேர் அலறப்போறீங்க. (நானே ஆடிப் போயிருக்கேன்)...ம் போலாம்!

அப்பாட் - ஆஸ்திரேலிய அமைச்சர். அவரோட பத்தொன்பதாவது வயசுல டேனியலுக்குத் தந்தையாகிட்டார். அதனால டேனியலை தத்துக் கொடுத்திட்டார். இப்போ 27 வருஷம் கழிச்சு, தான் வேலை பாக்குற அதே கட்டடத்துல தன் மகனை சந்திச்சிருக்காரு. ஆஹா... அப்ப ரெண்டு பேரும் 'குடும்பப்பாட்டு' ஒண்ணு பாடியிருந்தா இப்படி இருந்திருக்கும்.

'நேற்று வரை நீ யாரோ, நான் யாரோ!

இன்று முதல் நீ என் கங்காரு! நான் உன் அப்பா காரு!'



போன வாரம் கரூருக்குப் போய் இறங்கியிருக்காரு மருத்துவர் இராமதாசு. ரயில் நிலையத்தில் ஆர்வக்கோளாறு தொண்டர் ஒருத்தர், 'டாக்டர் வாழ்க'ன்னு கத்த, வைத்தியர்... ச்சீ... மருத்துவர் கடுப்பாகி, ஸ்பாட்லயே... ச்சீ... அந்த இடத்துலயே நூறு ரூபாய் அபராதம் போட்டாராம். அதெல்லாம் ஓ.கே. அந்த நூறு ரூபா யாருக்குப் போச்சு? (மருத்துவர் சார், ஆங்கில டைட்டிலை விடுங்க. 'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு'ன்னு ஒரு படத்துக்கு தமிழ்லயே தப்பா டைட்டில் வைச்சிருக்காங்க... என்ன செய்யப் போறீங்க?)

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் கமீலாவோட 'மாப்பிள்ளை களை'யோட அலையறார். ஆனா அவரோட ரெண்டாவது பையன் ஹாரி, 'வாழ்வே மாயம்... இந்த வாழ்வே மாயம்'னு மப்புல இருக்காராம். ஏன்னா ஹாரியோட காதலி செல்சி. இவங்க ரெண்டு பேரோட 'ரொமான்ஸ்' அங்க 'காதல்' படம் மாதிரி செம ஹிட். ஆனா இப்ப இந்தக் காதலுக்கு அரசு குடும்பத்துல 'தடா' வர, நிலைமை இப்படி ஆயிடுச்சு. ஏம்ப்பா... அப்பாக்கு ஒரு நியாயம், பிள்ளைக்கு ஒரு நியாயமா? 'காதல் தேவதை' டயானாவோட ஆவிதான் கேவிக் கேவி அழுற ஹாரியோட காதலுக்கு வழி காட்டணும்!

தோல் வியாதி, பசியின்மை, தலைசுற்றல், இலேசான மயக்கம், மன அழுத்தம், தலைவலி, ஜலதோஷம், சுவாசக் கோளாறு... இதெல்லாம் வரும். எப்போ? அதிகமா சென்ட், டியோடரண்ட் பயன்படுத்தினா வரும். இதனால கனடாவில பல இடங்களில் இதுக்குத் தடையே போட்டுட்டாங்களாம். நம்மூர்ல? தண்ணிக் கஷ்டத்துல பல பேர் (விவேக் சொல்ற மாதிரி) கம்மங் காட்டுக்குள்ள / கக்கத்துல சென்ட் பேக்டரியோடதான் அலையறோம்!

ஸ்ரீ டிராவல்ஸ்

194/a, ஓவது மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph: 044 - 55345081/ 082/ 083; 55870482; 28516799.
Web: www.sreetravels.com; E - Mail: sritrave@satyam.net.in

திருக்கைலாய யாத்திரை

சென்ற ஆண்டில் எமது வெற்றிகரமான 4 பயணங்களுடன்

ரயில் மூலம் : ரூ. 50,000/-
விமானம் மூலம் : ரூ. 59,000/-

மே 17, 31, ஜீன் 16, ஜீலை 17. 19 நாட்கள்

{20 பேர் கொண்ட குழுவாக வருபவர்களுக்கு பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்படும்}

ஹெலிகாப்டர் மூலம்: ரூ.96,000/-

★ பூரி - புவனேஷ்வர் - கயா - புத்தகயா - காசி - அயோத்தியா - அலகாபாத் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - ஜம்மு - வைஷ்ணவி - புது டில்லி - ஆக்ரா - மதுரா - விருந்தாவன்.
ரூ. 8,900/- டிக்கெட்டுடன்

★ நேபாளம் - முக்திநாத் - போக்ரா
ரூ. 18,500/- (ஹெலிகாப்டர் பயணத்துடன்)

LTC மற்றும் கோடைக்கால சுற்றுலாக்கள்

★ சிம்லா - மணாலி - அமிர்தசரஸ் - டில்லி
ரூ. 5,800/- + ரயில் டிக்கெட்

★ கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்டாக்
ரூ. 6,500/- + ரயில் டிக்கெட்
கூடுதலாக காத்மாண்டு - போக்ரா - வாரணாசி. ரூ. 5,000/- + டிக்கெட்

★ காஷ்மீர் - அமிர்தசரஸ்
ரூ. 7,900/- டிக்கெட்டுடன்

★ அமிர்தசரஸ் - டல்ஹவுசி - தரம்சாலா - சிந்தபூரணி - ஜ்வாலமுகி - காங்ரா
ரூ. 6,900/- + ரயில் டிக்கெட்

★ முசௌரி - அல்மோரா - நைனிடால்
ரூ. 6,900/- + ரயில் டிக்கெட்

★ பத்ரி - கேதார் யாத்திரை
ரூ. 6,500/- டிக்கெட்டுடன்

★ பஞ்சதுவாரகை யாத்திரை
ரூ. 8,900/- டிக்கெட்டுடன் (A/C பஸ் வசதியுடன்)

4 பேர் அல்லது அதற்கு மேல் குழுவாக வருபவர்களுக்கு தாங்கள் விரும்பும் தேதியில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்து தரப்படும்/ அனைத்து சுற்றுலாக்களுக்கும் அருமையான தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு/ வைக்கிங் பஸ் வசதி உள்பட/ அனைத்து பேங்க் கார்டுகள் ஏற்கப்படும்/ LTC மற்றும் டிராவல் லோன் வசதி உண்டு.

மூலிகைமணி Dr. க. வேங்கடேசனின்

வஜ்ர தேகம்

மூலிகைத் தைலக்காப்பு சிகிச்சை மையம்

B.P., நீரிழிவு, மூட்டுவலி, உடல் அசதி, உடல் பெருக்கம், உடல் இளைப்பு, முதுமை ஆகிய கோளாறுகளால் உடல் சீர்கேடு அடைந்தவர்கள் எமது பாரம்பரிய மூலிகைத் தைலக்காப்பு சிகிச்சையை (இது மசாஜ் அல்ல) மாதம் 1 நாள், மாதம் 7 நாள், 15 நாள் என நோய்நிலைகளுக்கேற்ப பெற்றிட, கட்டான உடலமைப்பு பெறலாம். மேற்கண்ட நோய்களும் கட்டுப்படும். எல்லோருக்கும் ஏற்ற தைலக்காப்பு மாதம் 1 நாள் ஆகும். இதன்மூலம் நிலையான ஆரோக்கியமும், நீடித்த ஆயுளும் பெறலாம். விவரங்கட்கு:-

சென்னை : வஜ்ர தேகம், எண்: 23, Flat No.9, BBC Manor, துரைசாமி ரோடு, தி. நகர், சென்னை-600 017. ✆: 24331494.

சேலம் : வஜ்ர தேகம், ஷாங்ரீலா, எட்டிக்குட்டை ரோட், கல்லிட்டேரி, பேளுக்குறிச்சி, (Via) ராசிபுரம், ✆: (04286) 246886.

கோவை : வஜ்ர தேகம், எண்: 175, நேரு வீதி, ராம்நகர், சிங்கப்பூர் பிளாசா பின்புறம், கோவை-641 009. ✆:(0422) 2234808.



ஓடி விளையாடு தாத்தா!

மூன்று மாதங்களில் எட்டாயிரம் பொம்மைகள் விற்றுத் தீர்ந்துள்ளன! பொம்மை என்றால் மண் அல்லது பிளாஸ்டிக் பொம்மை அல்ல... கட்டிக் கொஞ்சுகிற அளவுக்குப் பெரிய, நிஜப் பாப்பாக்களைப் போன்ற செலுலாய்ட் வார்ப்புகள். இந்தப் பொம்மைகளுக்குப் பொருத்தமான படுக்கை, விரிப்பு, தலையணை என்று தூங்க வைக்கத் தேவையான சாதனங்களும் கூடவே 'செட்டாக' விற்கப்படுகின்றன.

இவற்றை வரிந்து கட்டிக் கொண்டு வாங்குவோர் யார் என்று நினைக்கிறீர்கள்? வயது முதிர்ந்த தாத்தா - பாட்டிகள்! ஜப்பானில் நடந்து கொண்டிருக்கிறது இந்த அதிசயம்!

மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் இந்நாட்டில் குறைந்து கொண்டே போய் 0.05 சதவிகிதத்துக்கு இறங்கிவிட்டது. நேர்மாறாக, ஜப்பானியரின் சராசரி ஆயுட்காலம் மிக அதிகரித்து வர, நூறு வயதுக்கும் மேற்பட்டவர்கள் மட்டும் 23,000 பேர் உள்ளனர் அந்நாட்டில்! இவர்களில் பெரும்பாலோர் தனியாக வசிக்கின்றனர். இரவு நேரத்தில் துணையாகப் படுத்துக் கொள்ளத்தான் இந்த பொம்மைகளை வாங்குகிறார்கள் தாத்தா - பாட்டிகள்!


ஜப்பானிய இளைஞர்கள் சமீப காலமாக பணிச் சவால்களைக் கருதி திருமணத்தை மறுத்து, தனி வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்களாம். ஆகவே முதியோரின் பாடு மேலும் கஷ்டமாகி வருகிறது.

இந்தியாவில், முதியோர் இல்லம் என்றாலே கெட்ட வார்த்தை என்றிருந்த காலம் சற்று மாறியிருக்கிறது. ஆனால், இன்னமும் பெரும்பான்மை மக்கள் முதியோர் இல்லங்களை எதிர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக, முதியோர்களை இல்லங்களில் சேர்ப்பதென்பது வேறு; மெய்யான அவசியம் இருப்பதனால் அவ்வில்லங்களைப் பயன்படுத்துவது வேறு.

இன்றைய குடும்ப, சமுதாயச் சூழலில் பாதுகாப்பும், சுகாதாரமும் மிகுந்த முதியோர் இல்லங்களுக்கான தேவை பெருகி வருகிறது. அவற்றை எவ்வாறு சிறப்பாகவும், உணர்வு ரீதியான ஆதரவு தரவல்ல இடங்களாகவும் அமைக்கலாம் என்பது குறித்துச் சிந்திப்பது அவசியமாகிறது. அத்தகைய இல்லங்களுக்குப் பொருளுதவியும், அர்த்தமுள்ள சேவையும் வழங்குவதும் நமது கடமையாகிறது.

கூட்டுக் குடும்பமாகத் தழைத்து வாழ்ந்து முதியோரைப் பேண முடிந்தால், அதைக் காட்டிலும் சிறந்த வாழ்க்கை முறை இல்லை. ஆனால் அது நடைமுறை சாத்தியமற்றதாகிறபோது, முதியோர் இல்லங்களையே கூட்டுக் குடும்பங்களாக மாற்றிக் காட்ட வேண்டியதுதான்!



கலாமின் கனவு; பிரதமரின் வருத்தம்!

நம் நாட்டில் எட்டாம் வகுப்பைக் கடப்பதற்கு முன்பே பள்ளிப் படிப்பை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை பயமுறுத்துகிறது. சராசரியாக 53 சதவிகிதம் குழந்தைகளின் படிப்பு இவ்வாறு ஆரம்பக் கட்டத்திலேயே தடைப்படுகிறது. இத்தனைக்கும், அனைவர்க்கும் கல்வி வழங்குவதற்கென்றே பிரத்யேகமாய் ஆரம்பிக்கப்பட்ட சர்வசிக்ஷா அபியான் என்ற திட்டத்தின் கீழ் பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் இவர்கள் - அதாவது பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள். இத்திட்டத்தின் செயல்பாட்டை அலசிய கூட்டத்தில், இந்தப் போக்கைக் குறித்து கவலை தெரிவித்துப் பேசியுள்ளார் பிரதமர் மன்மோகன் சிங். அடிப்படைக் கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்குவதில், அரசு உறுதியாக இருக்கிறது என்று வலியுறுத்தியதுடன், எஸ்.எஸ்.ஏ திட்டம் தோல்வியுற்றதற்கான காரணங்களையும் ஆய்ந்து கூறியிருக்கிறார்.

- அடிப்படை வசதிகள்கூட பள்ளிகளில் இல்லை.
- பெரும்பாலான பள்ளிகளில் ஆசிரியர்கள் முறையாகப் பணிக்கு வருவது இல்லை.
- சிறிய ஊர்களில் உள்ளாட்சி அமைப்புகளும், அரசு இயந்திரமும் கல்விப் பணியில் ஆர்வம் காட்டுவதில்லை.


பிரதமர் சொல்பவை யாவும் சரிதான். ஆனால் இவை மட்டுமே எஸ்.எஸ்.ஏ தோல்வியுறுவதற்கான காரணங்களாக இருக்க முடியாது. எத்தனையோ பள்ளிகள் முறைப்படியும் வெற்றிகரமாகவும் நடந்து



கல்கி



2005 மார்ச் 6
தாரண மாசி 22
மலர் : 63
இதழ் : 32




வருகின்றன. சென்னையில்கூட பல மாநகராட்சிப் பள்ளிகளில் நல்ல தேர்ச்சி விகிதம் காணப்படுகிறது. இது எதனால் சாத்தியமாகிறது என்பதையும் யோசிக்க வேண்டும்.

கல்வி என்பது இரு வழிப் பயணம். கற்பிப்பவர் ஆர்வம் உள்ளவராக இருந்தால் மட்டும் போதாது. கற்பவரும் ஆர்வமாக இருக்க வேண்டும். பொருளாதாரத்தில் பின் தங்கிய குழந்தைகளுக்குக் குடும்பத்தில் கல்விப் பின்னணி இருப்பதில்லை என்பதுடன், பள்ளிக்குப் போகும் நேரத்தில் நாலு காசு சம்பாதித்தால், குடும்பத்துக்கு உபயோகமாக இருக்குமே என்றுதான் பெற்றோர்கள் யோசிக்கிறார்கள்.

அந்த 'நாலு காசை' பள்ளியில் சம்பாதிக்கவோ மிச்சம் பிடிக்கவோ வழிவகை செய்து தரும்போதுதான், பள்ளிப் படிப்பை மாணவர்கள் பாதியில் விடுவது குறையும். தமிழகத்தில் மதிய உணவுத் திட்டம் அறிமுகமான பிறகு, குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது அதிகரித்தது. 'சாப்பாட்டுக்கு வழி ஆயிற்று' என்று பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப, படிப்பிலிருந்து பாதியிலேயே விலகுவது படிப்படியாகக் குறைந்தது. தற்போது தமிழகம் எழுத்தறிவில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக இருக்கிறது.

ஆனால், எழுத்தறிவு மட்டுமே கல்வி அல்ல. பள்ளியிறுதியோ அல்லது பட்டப்படிப்போ முடித்தவர்கள்கூட இன்று எந்தவொரு தொழிலுக்கோ வேலைக்கோ தகுதியில்லாதவர்களாகவே உள்ளனர். வெறும் சான்றிதழ்களை வைத்துக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ள முடியாது. நடைமுறையில் உதவக்கூடிய கைத்தொழில் அறிவு அல்லது பணிப் பயிற்சி அவசியம் தேவை.

வொகேஷனல் டிரெயினிங் எனப்படுகிற இந்தப் பணிப் பயிற்சியை ஒவ்வொரு பள்ளியிலும் ஆரம்பக் கட்டத்திலேயே அறிமுகப்படுத்தினால்தான், நமது நாட்டில் கல்வி என்பதே அர்த்தமுள்ளதாக இருக்கும். காலை நேரத்தில் எழுதப் படிக்கவும் பிற்பகலில், பணிக்குத் தகுதிப் படுத்திக் கொள்ளவும் மாணவர்களைப் பயிற்றுவித்தால், அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து, கையில் தொழிலோடு வெளியேறி வருவார்கள். தச்சுவேலை, சமையல், மெகானிக்ஸ், எலக்ட்ரானிக்ஸ் என எவ்விதத் தொழிலுக்கும் பயிற்சி தரப்படலாம். தொழிற் பயிற்சியினூடே உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு, அல்லது உழைப்புக்குச் சிறு தொகை அளித்தும்



ஊக்கப்படுத்தலாம்.

பள்ளிக்குச் சென்றால் சம்பாதிக்கலாம், அல்லது சம்பாதிக்கப் பயிற்சி பெறலாம் என்கிற நம்பிக்கை பிறக்கிறபோதுதான், ஏழைப் பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு மனமுவந்து அனுப்புவார்கள். குழந்தைகளின் எதிர்காலமும், கல்வி-கைத்தொழில் ஆகிய இரண்டும் கைகொடுக்க, பிரகாசமாக அமையும்.

இலவச உணவு அளித்துப் பழக்கப்படுத்துவதைவிட, அந்த உணவைச் சம்பாதித்துக் கொள்ளும் ஆற்றலை வழங்குவதே சிறந்தது; நிரந்தரமானது.

இத்தகைய கல்வி, உழைப்பின் மேன்மையை உணர்த்தும். சுயமரியாதையும் சுயச்சார்புமுள்ள குடிமக்களை உருவாக்கும் பண்பாடு உயரும்; பொருளாதாரமும் மேம்படும்.

ஆனால், இத்தகைய கல்வியை வழங்குவது சுலபமானதல்ல. முதலில், நாற்பது அல்லது ஐம்பது குழந்தைகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில், மாணவர் நலனில் முழுமையான ஈடுபாடு கொண்ட எட்டுக் கல்வியும், தொழிற்கல்வியும் ஒருங்கே வழங்குவதில் அசாதாரணத் திறமையுடைய ஒரு பிரம்மாண்டமான ஆசிரியர் படையை உருவாக்க வேண்டும். அவர்கள் கௌரவமாக வாழ்வதற்குரிய நல்ல சம்பளம் தரப்பட வேண்டும்.


இதை எப்படிச் செய்வது? அந்நியர் ஆக்கிரமிப்பு நடந்தால், அரசாங்கத்தின் எல்லாத் துறைகளும் போர்க்கால அடிப்படையில் இயங்கி, போரில் வெற்றி காண்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுமல்லவா...?

அப்படி அறியாமை என்ற எதிரியை வெல்ல, போர்க்கால அடிப்படையில் அடுத்த ஐந்து ஆண்டுகள் மத்திய- மாநில அரசுகள் வேறு சிந்தனையே இன்றிச் செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

அதற்குரிய உத்வேகத்தை வழங்க, இன்றைக்கு நாட்டின் பெருந்தலைவர்களாக விளங்கும் பலர் (அவர்கள் எந்தக் கட்சியினரானாலும் சரி) முன் வருவார்களேயானால், இந்தியா அடுத்த பத்து ஆண்டுகளில் வல்லரசாகி விடும்.

அப்துல் கலாம் மட்டுமே கனவு கண்டு என்ன பயன்? ○

சுமி



வீசுதே ஆரோக்கியத் தென்றல்!

நம்ம சூப்பர் மார்க்கெட் ரசிகர் மன்ற உறுப்பினர்கள்ளாம் நல்லா தூங்கிட்டாங்கப்பா! அவங்களோட தகுதியுள்ள லீடரான சுமியோ, இன்னும் நல்லாவே குறட்டை விட்டுத் தூங்கிட்டா! பின்னே... பாருங்க. அவங்கள்ளாம் செய்ய வேண்டிய வேலைகளை ராமதாஸும், வைகோவும், கலைஞரும் செய்துகிட்டிருக்காங்கன்னா...!

தெரியும்... நோ பாலிடிக்ஸ் இன் திஸ் பேஜ்... பட் பாலிடிஷியன்ஸ் நம்ம வேலையைப் பண்ணும்போது, நாம வேற என்ன



பண்ண முடியும்... ("நீ அவங்க வேலைல ஏற்கெனவே இறங்கினதை மறந்துட்டியா சுமின்னு?" நிறையப் பேர் நறநறக்கறது நல்லாவே காதுல விழுது...)

பீடிகையெல்லாம் இருக்கட்டும் விஷயத்துக்கு வருவோம்.

டாக்டர் அய்யா என்ன பண்ணிருக்காரு பாருங்க... உடல் பருமனின் அபாயத்தை உணர்த்தரத்துக்காகவே ஒரு எக்ஸிபிஷன் போட்டிருக்காரு சென்னைல. பசுமைத் தாயகம்தான் ஏற்பாடு பண்ணியிருக்குன்னாலும், பாலிடிக்ஸைத் தாண்டி ஒரு சமூகக் கண்ணோட்டம் இருக்கு இந்த முயற்சியில. இன்விடேஷன் கார்ட்ல பர்கர் கோக்கை அபாயச் சின்னமாக்கி (மண்டை ஓடு எலும்பு மாதிரி) பரிணாம வளர்ச்சி படத்தை வைச்சே ஒரு கார்ட்டூன் டெவலப் பண்ணி... குட் ஷோ!ன்னு இங்கிலீஷ்ல பாராட்டினா, ராமதாஸுக்குக் கசக்கவா போகுது!

பொங்கல் சமயத்துல ஒரு சில்ட்ரன்ஸ் ட்ரெஸ் கடைக்குப் போனேனா... அங்க வந்திருந்த பெரும்பாலான குழந்தைங்களுக்கு, அவங்க வயசுக்குரிய சைஸ் ரெடிமேட் டிரெஸ் கொள்ளவே இல்லை...! ஸோ, பசுமைத் தாயகத்தோட எக்ஸிபிஷன் டைமிங்கும் பர்ஃபெக்ட்!

நெக்ஸ்ட் வைகோ. சிடிஸன்ஸ் ஃபோரம் ஃபர் ரிஹாபிலிடேஷன் அஃப் தி பிஸிகலி ஹான்டிகாப்ட் (உடல் ஊனமுற்றோர் புனர் வாழ்வுக்கான மக்கள் மன்றம்) என்கிற அமைப்பின் தலைவரா, இவர் சிவகாசியிலே ஒரு பெரிய முகாம் நடத்தியிருக்கார். நன்கொடைகள் வாங்கி ஒரு முகாமுக்குப் பத்து லட்சம் வரை செலவு பண்ணி, இது போல மூன்று முகாம்களை நடத்திருக்காங்களாம். வர்ற குழந்தைகளுக்கு, (பெரியவங்களுக்கும் தான்) மருத்துவப் பரிசோதனை செலவோட டிரான்ஸ்போர்ட் செலவையும் தந்திருக்காங்க.

வோட்டைத் தாண்டி யோசிக்கிற ம.தி.மு.க தலைவருக்கும் ஹார்ட்டி கங்கிராட்ஸ்!

வாட் ஹாப்பென்ட் டு கலைஞர்...? "வள்ளலார் கருத்துகளைப் பின்பற்றுங்கள்"ன்றார். 'தி யோகா அஃப் தி யோகி' என்கிற, யோகாசனம் பற்றின இங்கிலீஷ் புத்தகத்தை வெளியிட்டுப் பேசியிருக்கிறார்! வள்ளலாரை அவர் எடுத்துக்காட்டறதையாவது புரிஞ்சுக்கலாம். (வள்ளலாரை ஒரு வழி பண்ணிட்டு அவர் ஜோதியில கலந்துட்டதா 'பொய் சொன்ன' ஜாதிவெறி கும்பலைச் சாடியிருக்காரே...!)


பட், யோகாவில் அவருக்கு வந்திருக்கற திடீர் இன்ட்ரஸ்ட்...? அதுக்குக் காரணம் என்னவாயிருந்தாலும் இட் இஸ் "ஹெல்தி" இன்ட்ரஸ்ட். ஸோ, கூடோஸ் டு கருணாநிதி.

அவரை இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கணும்னு கிருஷ்ணமாச்சாரி யோக மந்திரம் எப்படித் தீர்மானிச்சது? - எல்லாம் யோக சக்திதான் போலிருக்கு!

ஸ்ரீ ஷீரடி சாயிபாபாவின் உபதேச மொழிகள்

- ஷீரடி ஸ்தலத்தை எவன் மதிக்கிறானோ அவனுடைய துன்பங்கள் ஒரு முடிவையடைந்து சௌகரியத்தை அடைகிறான்.

- துவாரகமாயியை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்காளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.



- இவ்வுலகை விட்ட பிறகும் நான் சர்வசக்தியுடன் வேலை செய்வேன்.

- என்னுடைய மசூதி என் பக்தர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும் புத்திமதிகளையும் கொடுக்கும்.

- என்னுடைய பூத உடல் என் மசூதியிலிருந்தும் பேசும்.

- என்னுடைய மசூதியிலிருந்து கொண்டே நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் தீவிரமாகவும் இருப்பேன்.

- என்னிடம் வருபவர்களுக்கும், என்னைத் தஞ்சமாக அடைபவர்களுக்கும், என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்போதும் உயிருடனிருக்கிறேன்.


- நீ என்னை அடைந்தால் நான் உன்னை கடாக்ஷிக்கிறேன்.


- நீ என் பேரில் உன் பளுவைச் சுமத்தினால், நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.


- நீ என் உபதேசத்துக்காகவும் உதவிக்காகவும் என்னை அடைந்தால், அவற்றை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.

- என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது.

தொகுப்பு: முத்து







வாசன் கொடுத்த ஸ்வீட் ஷாக்!

புத்தமங்கலம் ஜெகதீச அய்யர் அறக்கட்டளை சார்பாக நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரா வளாகத்தில், அமரர் கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி நினைவு அரங்கத்தை, திறந்து வைத்தார் ஜி.கே. வாசன்.

அறக்கட்டளை சார்பாகப் பேசிய ஜெ. ரங்கநாதன், கல்கியின் எழுத்துக்கள் தமது வாழ்க்கைக்கு வழி காட்டியதை பெருமையுடன் சொன்னார்., மெக்காலே பாணி கல்வியை ஒதுக்கி, பண்பாட்டுக் கல்வியை குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பள்ளியைத் துவக்கியதாகச் சொன்னார் ரங்கநாதன்.

காமராஜ் காலத்தில் நடந்த கல்விப் புரட்சியை நினைவு கூர்ந்த ஜி.கே. வாசன், பள்ளி நிர்வாகிகள் எந்தக் கோரிக்கையும் வைக்காத நிலையிலும், தமது தொகுதி நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாயை, பள்ளியின் வளர்ச்சிக்காகத் தருவதாகச் சொன்னது ஸ்வீட் ஷாக்!

பேசியவர்கள் 'கல்கி'யைப் பற்றிய நினைவலைகளை பலமாக எழுப்பவே கொஞ்சம் உருக்கத்தோடுதான் மைக்கைப் பிடித்தார் கி. ராஜேந்திரன். ''அவர்கள் மொத்தம் மூன்று சகோதரர்கள். மூத்தவர் வெங்கட்ராமன். நடுவில் கிருஷ்ணமூர்த்தி. இளையவர் ஜெகதீசன். ஏழ்மையான குடும்பம்தான். எனவே மூத்தவரும் இளையவரும் இணைந்து, தியாகங்கள் செய்து கிருஷ்ணமூர்த்தியைப் படிக்க வைத்தார்கள். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது, பரீட்சை சமயத்தில் காந்தியின் குரலால் கவரப்பட்டு, கல்லூரியைப் புறக்கணித்து விட்டார் கிருஷ்ணமூர்த்தி. மூத்தவரும் இளையவரும் அதிர்ச்சிக்கு ஆளானார்கள். அதன்பின் கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கை சத்தியாக்கிரகம், சிறைச்சாலை, தேசப்பணி என்று தடம் மாறியது. சகோதரர்களுக்கு எப்படியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். இங்கே கிருஷ்ணமூர்த்தி, ஜெகதீச அய்யர் படங்களைத் திறந்திருக்கிறார்கள். மூத்தவர் வெங்கட்ராமன் படத்தையும் இங்கே வைக்க வேண்டும்'' என்று முடித்தபோது, கி.ராவின் பேச்சு கேட்டவர்களையும் உருக்கி விட்டது.

பலத்த கலகலப்புக்கிடையே பேச வந்த விசு "போரடிக்குதய்யா. காமராஜ் ஆட்சியை எப்போது கொண்டு வருவீங்க? எனக்கு வயசாகிக்கிட்டே போகுது'' என்றபோது, அரங்கத்தில் இலேசான சிரிப்பு. ஆனால் இது ஸீரியஸான விஷயம் என்பதை காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்ல வேண்டுமா?

- கௌசி

இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், மாரடைப்பு, இருதய வால்வு குறைபாடு, இருதய ஓட்டைகள் போன்றன வராமல் தடுக்க – தெய்வீக மூலிகை மருத்துவம்!



இதயம் என்பது பிறப்பிலிருந்து இறப்பு வரை இடைவிடாது மற்ற உறுப்புகளுக்கு இரத்தத்தை பாய்ச்சும் ஒருபம்ப் (PUMP) ஆகும். இதயம் வேலை செய்வதற்கு, அதற்கும் இரத்தம் தேவைப்படுகிறது. இவ்வாறான இதயத்தில் நம்முடைய தவறான வாழ்க்கை முறையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதய வால்வுகள், ASD, VSD என்று சொல்லக்கூடிய இதய அறைகளில் ஓட்டைகள், இரத்தக் குழாய்களில் அடைப்பு போன்றகுறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான நோய்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றி நாம் தெரிந்துக் கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல், எவ்வித பின் விளைவுகளும் இல்லாத தெய்வீக மூலிகை மருந்துகள், இயற்கை உணவுகள், வாழ்க்கை சீரமைப்பு மூலம் குணம் பெறலாம்.



இதய நோய்க்கான காரணங்கள் : கர்ப்ப காலத்தில் தாய் உட்கொள்ளும் வீரிய மிக்க இரசாயன மருந்துகள், சத்தியான உணவுகள் கிடைக்காமை, அடிக்கடி நோய் வாய்ப்படுதல், ல-தஅவ எடுத்தல் போன்றகாரணங்களால், குழந்தைகளுக்கான - பிறவி குறைபாடுகளும், புகைத்தல், மது வகைகள், B.P., SUGAR போன்றவற்றால் இதய தசைகளில் கோளாறுகளும், அதிக எடை, தொப்பை, TENSION & STRESS உள்ளவர்கள், வாழ்க்கையில் நிதானம் அற்றவர்கள், சோம்பேறிகள், அதிகம் கோபப்படுபவர்கள், கொழுப்பு சத்துள்ள உணவுகள் உட்கொள்பவர்களுக்கு மற்றும் LIPOPROTEIN 'A' என்கின்ற கொழுப்புச்சத்து ஜீன்களினால் மாரடைப்பும், எதிர்ப்பு சக்தி இல்லாத காரணத்தாலும், சத்தியான உணவுகள் கிடைக்காததாலும் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் என்னும் கிருமிகளால் இதய வால்வுகளும் - பாதிக்கப்படுகின்றன.



இதய நோய்க்கான அறிகுறிகள் : நெஞ்சுவலி, மூச்சிரைப்பு, படபடப்பு, வியர்த்தல் போன்றவை இதய நோயின் பொதுவான அறிகுறிகள் என்றாலும், அவை பாதிப்புக்குள்ளான பகுதியை பொறுத்து அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். மூச்சுத் திணறல், உடலெல்லாம் நீல நிறமாக மாறுதல் போன்றவை பிறவி குறைபாடுகளிலும், மூட்டுக்களில் வீக்கம், மூட்டுவலி, கை, கால் வலி, காய்ச்சல், வறட்டு இருமல் போன்ற அறிகுறிகள் இதய வால்வுகள் பாதிக்கப்படும் போதும், மார்பு பகுதியில் எரிச்சல், நெஞ்சுவலி, வியர்த்தல், நெஞ்சு படப்படப்பு, இடது தோள்பட்டையில் வலி, மூச்சுத் திணறல், உடல் சோர்வு, திடீர் மயக்கம், நாடி துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் குறைதல் போன்ற அறிகுறிகள் மாரடைப்பு ஏற்படும்போது காணப்படும்.

உடற்பயிற்சிகள் : இந்நோயாளிகள் தினம் காலை மாலை 20 நிமிடம் இயன்றவரை எளிய உடற்பயிற்சிகள் செய்தல் வேண்டும். நடத்தல், கை கால் விரல்களை நீட்டி மடக்குதல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், முடிந்தால் சைக்கிள் ஓட்டுதல், மூச்சுப் பயிற்சிகள் போன்றன செய்தல் வேண்டும்.

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்றநகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்றபுத்தகத்தினை பதிவுத் தபாலில் பெறரூ.100/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்றபுத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.100/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.100/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

CKM
DIVINE HERBAL CENTRE

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

தலைமை முகவரி : அஞ்சல் பெட்டி 30, எண்.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (வ.ஆ.மா.) - 635 601 ✆ : 04179-220469, 222769 Cell : 9443438670

சென்னை முகவரி : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10. ✆ : 044-26424285, 26427638 Cell : 9444161670

டெல்லி கிளை : Mrs.Valli, 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ : 011-25736220 Cell : 9868026743

மூன்று முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7

7 & 8 ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), ✆ : 24011589, 24083879	**9** ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை Hotel Ajantha, 22A, Mahatma Gandhi Road, Bangalore - 560 001. ✆ : 25584321	**20 & 21** ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ : 011 - 25736220

பவர் இளமைத் தொடர்

9

உள்ளம்

"எங்கப்பாவை உனக்கு முழுசா தெரியாது."

அழகேசன் "தெரிஞ்சுக்கறேனே"... என்றான்.

"எனக்கே முழுசா தெரியாது."

"தெரிஞ்சவரைக்கும் நல்லவர்தானே?"

"ம்."

"போதுமே."



"அவருடைய மறு பக்கத்தை இதுவரை சோதிச்சுப் பார்க்கலை நான். இப்பதான் ஊர்லருந்து வந்திருக்கார். உடம்பு சரியில்லைன்னாரு. இது தக்க சமயம் இல்லை நானே உன்னை கூட்டிட்டுப் போய் அறிமுகப்படுத்தறேன்."

"குல்ஃபி சாப்பிடலாமா?"

"இந்த வேளையிலா, பைத்தியம்!"

"நெவர் பி ப்ரெடிக்டபிள். கல்யாணம் ஆனப்புறமும் மூக்கு குத்திகிட்டுத்தான் இருப்பியளா?"

"யார் கல்யாணம்?"

"ப்ரிட்னி ஸ்பியர்ஸ் பத்தியா பேசிக்கிட்டிருக்கேன்? நம்ம கல்யாணம்தான். ஒரு ஹாட் ஏர் பலூன்ல முந்நூறு மீட்டர் மேலே போய், அழகேசன் வெட்ஸ் நந்தினின்னு."

"நந்தினியா?"

"ஓ ஸாரி, நீ மஞ்சரியில்லையா? நந்தினி 'பொன்னியின் செல்வன்'லன்னா வரா. இப்பதான் புக் ஃபேர்ல வாங்கி வந்து வீராணம் ஏரி வரைக்கும் வந்திருக்கேன், அதைவிட்டே இன்னும் வந்தியத்தேவன் குதிரை கிளம்பல."

"அழகி, நீ பேசறது பாதி உளறல், மீதி அபத்தம்."

துறந்தவன்



சுஜாதா

"என்னை நேரா கண்ணுக்குக் கண் பாரு"

"ஏன்?"

"பாரேன் சீக்கிரம் பாரு" அவளை தோளைப் பிடித்து நிறுத்தி, அவளுக்கு அப்பால் பார்த்தான்.

அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தது டி.டி.கே. சாலையின் சங்கரா ஹால் அருகே. அங்கே பூம்புகாரின் தெய்வச் சிலைகள் 'சேல்' போட்டிருந்தார்கள். ஒரு பெரிய நடராஜர் சிலையை விலை கேட்டான்.



''ஒரு லட்சம் ரூபாய்ங்க'' என்றார் அந்த அரசு அலுவலர்.

"கிரெடிட் கார்டு எடுத்துப் பீங்களா?"

"கேட்டுச் சொல்றேன். எந்த கார்ட்?"

''இன்னும் கிரெடிட் கார்டு எடுக்கலை. மஞ்சரி, கொஞ்சம் நில்லு'' என்றான். அவர்களுக்கு எதிரே ஒருவன் இருவரையும் செல் போனில் படம் பிடித்துக் கொண்டிருந்தான்.

அவனருகில் சென்று அவன் கன்னத்தில் தட்டி ''பிரதர், செல்லை கொடுக்கறிங்களா?'' என்றான்.

அவன் நழுவ, அவனை மூர்க்கத்தனமாகத் தடுத்து நிறுத்தி ''குடுரா சோமாரி, எச்சப் பொறுக்கி" என்று அதட்டி அவன் செல்போனைப் பிடுங்கி பின் மூடியை உதிர்த்து, அதன் சிம் கார்டை எடுத்துக் கொண்டு கீழே போட்டு "பொறுக்கிக்க". அவன் "சாரி ப்ரதர்" என்று வேகமாக விலகிக் கொண்டான்.

''அப்பலேந்து பார்க்கறேன். பின்னால வந்துகிட்டிருக்கான். செல்போனைக் காட்டிக் காட்டி போட்டோ எடுத்துக்கிட்டே இருக்கான்."

புரியவில்லை. "யாரு இவன்?"

''உனக்குத்தான் தெரியணும். உங்க அப்பா சாம்ராஜியத்தைச் சேர்ந்தவங்களா இருக்கலாம்."



**இறைவனின் திருநாமம்
ஆல விதைக்கு ஒப்பானது.
காலப் போக்கில்
அதிலிருந்து தெய்வீக மனநிலை,
பக்தி, அன்பு, ஆன்மிக நிறைவு
அனைத்தும் உண்டாகின்றன.**

- அன்னை சாரதாதேவி

"சேச்சே."

"ஆபீஸ்ல விசாரிச்சுப் பாரு. என்னை போட்டோ எடுக்கக் காரணம் கிடையாது. ஐ எம் எ நோபடி. உன்னைப் பாக்கற தாலயும் பேசறதாலயும் சிரச்சேதம் பண்றதா இருந்தா, தீட்டின கத்தியா பயன்படுத்தச் சொல்லு."

"அழகி, டோண்ட் பி சில்லி. என்ன நீ!"

"உங்கப்பாவைச் சந்திக்க கூட்டிட்டுப் போ பின்ன"

"சீக்ரமேப்பா"

"இப்ப?"

"இப்ப அவருக்கு உடம்பு சரியில் லைன்னேனே."

"அவரு மூக்கு சிந்தினாலே ஸ்டாக்கு விழுந்துருமாம். 'வணிகமணி'யில போட்டி ருந்தது"

"எனக்கு அதெல்லாம் புரியாது அழகி"

"புரிஞ்சுக்கணும், எக்ஸிஸ்டென் ஷியலிசத்திலிருந்து ஏ.ஆர்.ரஹ்மான் வரை! வரட்டுமா, எனக்கு ரிச்சி ஸ்ட்ரீட்ல ஒரு வேலை இருக்கு. ஒரு எம்பெக் ப்ளேயர் வாங்கணும். அவன் போனதும், அந்த செல்போன் ஆசாமி மற்றொரு செல்போனில் படம் எடுத்துக் கொண்டி ருப்பதைப் பார்த்தாள். அவனருகில் செல்ல, ஆட்டோ பிடித்து ஓடிச்சென்று விட்டான். கடக்கிறபோது மஞ்சரியைப் பார்த்து சிரித்து விட்டுப் போனான்.

மஞ்சரி ஆபீசுக்குச் சென்ற போது ராகவேந்தர் மீட்டிங்கில் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார். பரமேஸ்வரன் அவளை தன் கேபினுக்கு அழைத்தார்.

"மஞ்சும்மா, உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும். யார்ட் டயும் சொல்ல மாட்டியே"

"மாமா, நான் உங்கிட்ட ஒண்ணு சொல்லணும்"

"அழகேசன்?"

"எப்படித் தெரிஞ்சுது?"

"எனக்கு எல்லா ரிப் போர்ட்டும் வந்துருதும்மா. ஐடிஏலருந்து. அவர் மேசை மேலிருந்த கம்ப்யூட்டரில் படக் படக் என்று நான்கு இடத்தில் க்ளிக்க, அழகேசனும் மஞ்சரியும் டி.டி.கே. ரோடில் நின்றார்கள். "ஓ இதான் காரணமா? நான், அண்யாகிட்ட போட்டுக் கொடுக்கறேன் வாங்க!"

"அவர்தான் ஏற்பாடு பண்ணது. உன்னை மட்டும் இல்லை, எல்லா ஃபேமிலி மெம்பர்சையும். இது ஒரு ருட்டின் செக்."

பரமேஸ்வரனின் சிறிய காபினில் எல்லாக் கடவுள்களும் மினியேச்சர் வடி வத்தில் இருந்தனர். அவர் கொண்டு வந்தி ருந்த எலுமிச்சை சாதத்தை மஞ்சரி ஒரு ஸ்பூன் எடுத்துக் கொண்டு "அழகேசனப் பத்தி அண்யாகிட்ட நீங்கதான் சொல் லணும் மாமா" என்றாள் திரையைப் பார்த்துக் கொண்டு.

"இப்ப சொல்லக் கூடாது"

"ஏன்"

"பெரியவருக்கு உடம்பு லண்டன்ல மோசமாயிருக்கு. அவருக்கு முழுசா ஒரு ஹார்ட் அட்டாக் வந்துருக்கு. பாலா ரொம்ப ஜாக்கிதையா இருக்கச் சொன் னார். பாலாவே புறப்பட்டு வர்றார். இந்த நிலைமையில் இவர் பெரிய ஆபீஸ் மீட்டிங்ல சத்தம் போட்டுண்டிருக்கார். மஞ்சு கண்ணு, நீ என் பொண்ணு கௌசல்யா மாதிரி. அதனால சொல் றேன். உனக்கும் அந்த வெய்ட்டருக்கும் பொருத்தமே இல்லை. பையன் எவ்வளவு நல்லவனா இருந்தாலும், நீ இன்சாஃப் முதலாளி மகங்கறது அவனுக்குத் தெரியு மில்லை?"

"தெரியும். நானே சொல்லியிருக்கேன்"

"அவன் அதுக்காகத்தான்மா உன் பின்னால அலையறான்"

"மாமா நான்தான் அவன் பின்னாடி சுத்தறேன்."

"அவன் நைசா பேசி, உன்னை சுத்த வைக்கிறான். ரிகார்டிங் கூட இருக்கு டேப்ல. அமேஸிங் டெக்னாலஜி."

"மாமா, நான் உங்களை நல்லவர்னு நினைச்சேன். இந்த ஸ்பை வேலை பாக்கறவருன்னு..."

"இல்லையம்மா... இது ஒரு ருட்டீன்மா உன்னை யாராவது கிட்நாப் பண்ணிட்டாலோ, மானபங்கப்படுத்திட்டாலோ, பெரியவர் இல்லாதபோது எனக்குத் தானே பொறுப்பு?"

"ரிடிக்யுலஸ்."

"இதுக்கு மேல் அழகேசன் பேச்சை எடுக்கலை. நீ சமத்து. வலையில் விழுந்துராதே, அவ்வளவுதான் சொல்வேன். இப்ப அழகேசன் பெரிய பிரச்னை இல்லை. அவன் என்ன படிச்சிருக்கான்?"

"கேக்கலை."

"கேட்டு வச்சுக்கோ. ஒரு வேலை போட்டுக் கொடுத்துடலாம். அப்புறம் இதை அப்ரோச் பண்ணலாம். முதல்ல பெரியவர் நீ சொன்னதைக் கேக்கணும்."

"என்ன சொல்லணும்?"

"ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லும்மா ஆபீஸ் எங்கயும் போகாது."

"சொல்லிப் பார்க்கறேன். அப்ப என் மேட்டர்?"

"அப்புறம்! இப்ப முக்கியம் அதில்லைம்மா. இந்த இன்சாஃப் சாம்ராஜ்யமே சரிஞ்சு போற நிலையில் இருக்கு"

"ஏன்?"

"பாலா சொன்னதை உன்கிட்ட சொல்லிடறேம்மா. எனக்கு தலைவெடிச்சுரும். பாரம் மனசிலருந்து எறக்கணும்."

"என்ன மாமா?"

"பெரியவர் ஆறுமாசம் கூட தாங்க மாட்டாராம்."

அப்போது கதவு திறந்தது. ராகவேந்தர் "பரமேஸ்வரன், அந்த ஆடிட் ஸ்டேட்மெண்டை" என்று ஆரம்பித்தவர் மஞ்சுவைப் பார்த்து முகம் மலர்ந்தார் "மஞ்சு வந்தியா, கண்ணுக்குட்டி, என்னது சொல்லவே இல்லை" அவளை அணைத்துக் கொண்டு உச்சி முகர்ந்தார். "செல்லம் உன்னைப் பார்த்தாலே என் ஹார்ட் சரியாப் போச்சும்மா."

"அண்யா, உங்களை ஒண்ணு கேட்டுக்கணும்."

"தெரியும். ரெஸ்ட் எடுக்கணும், அதானே? தெர் இஸ் நத்திங் ராங் வித் மை டிக்கர்"

"மஞ்சு கூட இருக்கற வரை எனக்கு எந்த ஆபத்தும் வராது. உனக்காக லண்டன்ல ஒண்ணும் வாங்க முடியலை. டாக்டர்ங்க கலாட்டா பண்ணிட்டாங்களா"

"மஞ்சு சொல்றதை நீங்க கேக்கணும் முதலாளி"



''பையன் 'மூடி' டைப்னு சொன்னதன் அர்த்தம் இப்பத்தான் புரிஞ்சுது.''

''என்னாச்சுங்க?''

''தேங்காய் உடைச்சதும் ஓடிப் போய் தேங்காய் மூடியைப் பொறுக்குறாரு!''

- எம். அசோக்ராஜா

"அடாடாடா, பிடுங்கல்யா நீ!"

"பாலா ரொம்ப ஆணித்தரமா..."

"பாரு, பாலா ஒரு சர்ஜன். சர்ஜனுங்க எப்பவுமே ஆப்பரேஷன் பண்ண கத்தியைத் தீட்டிக்கிட்டு காத்திருப்பாங்க. அவங்க கிட்டிருந்து தப்பிக்கணும். ஆமா, யாரோ வெய்ட்டருக்கு வேலை போச்சுன்னியே. திருப்பி எடுத்துக்கிட்டாங்களா அரோமாவில்?"


"அது வந்து"

"என்ன, வந்து போயி. அவன் எங்க இருந்தாலும் வரவழை. மஞ்சு சொல்லியிருக்கா. வேலை தரலைன்னா எப்படி? அவன் எங்கருக்கான் தெரியுமாம்மா உனக்கு?"

மஞ்சு பரமேஸ்வரனை சங்கடமாகப் பார்த்தாள். அவர் 'சொல்லாதே' என்று வேண்டுதலாக சைகை செய்தார்.

(தொடரும்)







• ... என்ன?

• ஆதாரம்...

ஆன்மிகக் கொலையும் மறைக்கப்படுமா?

● பி.கெ. விஜயராகவன்,
சென்னை - 91

? அரசியல் கொலைகள் மறைக்கப் பட்டன; மறைக்கப்படுகின்றன, மறைக்கப் படும். ஆன்மிகக் கொலையும் மறைக்கப் படுமா?

! கொலை செய்யும் யாருமே பகிரங்கப் படுத்தமாட்டார்கள்; மறைக்கத்தான் முயல்வார்கள்! காவல்துறைதான் ஆன்மிகம், அரசியல், அரசு சார்பு என்ற பாரபட்ச மின்றி, ஆற்றலுடன் சாட்சியங்களைச் சேகரித்து, உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

● வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

? பள்ளிகளில் தேர்வு நடக்கும் நேரத்தில் கிரிக்கெட் போட்டி நடத்தாமல், இந்தோ-பாக் போட்டிகளை ஒரு மாதம் ஒத்தி வைக்க வேண்டும் என்று ராமதாஸ் கேட்கிறாரே...?

! முன்பெல்லாம் கிரிக்கெட் பந்தயம் ஆண்டுக்கு ஒரு சீரீஸ் நடக்கும். இப்போது ஆண்டு முழுவதும். அதனால், மாணவர் களுக்கும் பழகிவிட்டது. அவ்வப்போது ஸ்கோர் கேட்டுக் கொண்டே படித்தும் விடுவார்கள்.

● எஸ்.குமரேசன், திருமோகூர்

? ஒரு பொருளை உற்பத்தி செய்தால் அதன் விற்பனை விலையை நாமே நிர்ண யம் செய்கிறோம். ஆனால் நம் நாட்டு விவசாயி, தான் உற்பத்தி செய்யும் எந்தப் பொருளுக்கும் விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலை உள்ளதே? தீர்வு என்ன?

! விவசாய விளை பொருள் அதிகரிக் கும்போது விலை சரியும். விளைச்சல் பாதிக்கப்பட்டால் விலை உச்சாணிக்கு ஏறும். பதுக்கல் வியாபாரம் பெருகும். இவற்றைத் தவிர்த்து மக்களுக்கு முக்கிய மான உணவுப் பொருள்களை, ஓரளவு நிலையான விலையில் கிடைக்கச் செய்ய, அத்தியாவசிய வின்ன பொருள்களுக்கு அரசு விலை நிர்ணயம் என்பது தேவை தான்.

• எலக்ட்ரானிக் நிராகரிப்பு!



• இடுப்பு நோக...!



நீங்கள் கேட்டவை – தராசு

• ப. சிங்காரவேலு, சிவகாசி

? சமீபத்திய அயல் மாநிலத் தேர்தலில், தம்மை வேட்பாளராக அறிவித்துக் கொள்வதற்கே மூன்று கோடி ரூபாய் செலவு செய்துள்ளார் ஒருவர்... இவர் வெற்றி பெற்று அமைச்சர் பதவிக்கு வந்து விட்டால் ஜனநாயகம் என்னவாகும்?

! இனிமேல் புதிதாக என்ன ஆகிவிடப் போகிறது? எதற்கும் ஒரு விலை உண்டு என்கிற நிலை, ஏற்கெனவேதான் தோன்றி, விலை நாயகமாக இருக்கிறதே...!

• ஜி.பி.வைத்யநாத ஷர்மா, திருவண்ணாமலை

? தருமபுரி பஸ் எரிப்பு வழக்கில் தமிழக அரசுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளதே?

! வழக்கு தொடர்பான "ஆவணங்களைக் காணோம்" என்றும், பிறகு "ஆவணங்கள் கிடைத்துவிட்டன" என்றும் கூறும் அரசு, நாளைக்கு "ஹைகோர்ட்டையே காணோம்" என்று கூட சொல்லக் கூடும்! ஆட்சி அப்படி இருக்கிறது!



• தராசு காலிங்!



• ஒப்புதல்!

• க.நா.ராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? அடுத்த ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெரும்பான்மை இடங்களில் வென்றாலும், தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைக்க காங்கிரஸ் வற்புறுத்துமாமே! இளங்கோவன் சொல்கிறாரே..?

! 'முதுகுச் சவாரி அலுத்து விட்டது. இடுப்பில் தூக்கிக் கொள்ளுங்கள்' என்கிறார்! கலைஞரின் தாயுள்ளம் இறங்கினால் நடக்கும். சிக்கல் என்னவெனில், எல்லா கூட்டணிக் குழந்தைகளுமே இடுப்புச் சவாரிக்கு ஆசைப்படும். ஆட்சி அமைக்கும் அளவில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சி, கூட்டணி ஆட்சிக்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஏற்புடையதாக இல்லையே!

• ஆர். தங்கராஜ், திருப்பூர்


? திருப்பாச்சி படத்துக்குத் தடை விதிக்கப்பட்டதாமே?

! 'ஒரு பிரபல நிறுவனத்தின் பூச்சிக்கொல்லி மருந்தால் மனித உயிரையும் கொல்லலாம் என்பதாகக் காட்சி அமைத்திருந்தது தவறு' என்று நடிகர் விஜய்யே ஒப்புக் கொண்டதோடு, படத்திலிருந்து அந்தக் காட்சியையும் நீக்கியிருப்பதை வரவேற்கலாம். 'காதல்' படமும் இத்தகைய பிரச்னையில் சிக்கியிருப்பதைப் பார்க்கையில், இயக்குனர்கள் இன்னும் கவனமாகப் படமெடுப்பது அவசியமென்று தெரிகிறது.

• ஆர்.ஜி. கல்யாணி, திசையன்விளை

? பெரியாரை 'அய்யா' என்றதற்கும் ராமதாசை 'அய்யா' என்பதற்கும் உள்ள வேறுபாடு...?

! அவருக்கு ஜாதி வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும் என்பதே



• ஹய்யாவும்....



• ... அய்யாவும்!

பேச்சு. இவருக்கு ஜாதி ஆதரவே மூச்சு. அவர் நோக்கம் பொது. இவரது நோக்கம் கொஞ்சம் 'இது'. அவர் வெங்காயம், இவர் வெள்ளைப் பூண்டு. அவர் அய்யா, இவர் ஹைய்ய்ய்யா!

● அ.ரமணன், சங்கராபுரம்

? ஒரு வார இதழில் நடிகர் விவேக், 'குமரிமுத்துவைத் தவிர எல்லோரும் இரண்டு கண்களாலும் பார்த்தோம்' என எழுதியிருந்தார். இப்படி ஊனத்தைக் கிண்டல் செய்வதை விவேக் எப்போது கைவிடுவார்?

! இந்தக் கேள்வி-பதிலைப் படித்து விவேகம் பெறும் போது.

● அ. கஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? பொதுக்குழுவில் ஆங்கிலத்தில் பேசிய தமது மகனுக்கு நூறு ரூபாய் அபராதம் விதித்த ராமதாஸின் நடவடிக்கை பற்றி...?

! ராமதாஸ் கவனத்துக்கு: தமிழை வளர்ப்பது வேறு; தமிழ் ஆர்வத்தை வளர்ப்பது வேறு. தமிழில் பேசி, எழுதி எல்லாக் காரியங்களையும் நடத்திச் செல்ல ஊக்கமளிக்கலாம். அதே நேரத்தில் ஆங்கிலச் சொற்களைத் தமிழாகவே ஏற்று, தமிழை வளர்த்தால்தான் எதுவும் தமிழில் என்ற நோக்கம் நிறைவேறும்.

● இரா.சக்கரபாணி, மதுரை - 7

? மீண்டும் பழைய வாக்குச் சீட்டு முறையைப் பின்பற்றி தேர்தல் நடத்த வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுக் குழு, செயற்குழு தீர்மானம் இயற்றியிருப்பது எதைக் காட்டுகிறது?

! எலெக்ட்ரானிக் வோட்டு மெஷின்களுக்கு அமெரிக்காவில் கூட எதிர்ப்பு இருக்கிறது. அதேபோல் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்ட காலகட்டத்திலும் புகார்கள் பல பதிவானதுண்டு. இதெல்லாம் சகஜம். இன்றும் கம்ப்யூட்டர் தவறு என்று அடிக்கடி கூறப்படுவதைக் கேட்கிறோம். ஆனால் இனி கம்ப்யூட்டர் இல்லாத சமுதாயத்தை நாம் திரும்பப் பெற முடியுமா?

● அ. ராதா, பொன்னித்திட்டு. ●

? நம் கல்வி முறையில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

! அடுத்து வரும் இரண்டு கேள்விகளே உங்கள் வினாவுக்கு விடை அளிக்கும். இப்படி ஆர்வமின்மையையும் அச்சத்தையும் தூண்டும் கல்வி முறையில் எவ்வாறு உடன்பாடு கொள்வது?

● கே.வி.ராமன், சென்னை - 73

? கட்டாயக் கல்விக்கு முக்கியத்துவம் தருகிறோம்; ஆனால் பள்ளிகளிலிருந்து விலகும் மாணவர் எண்ணிக்கை 52 சதவிகிதமாமே?

● ஏ. அகிலா, ஈரோடு

? டில்லியில் தேர்வு பயத்தில் ஆறு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதும், மேலும் முந்நூறு மாணவர்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளதும் எதைக் காட்டுகிறது?

● ஆர். ஆன்டனி தமிழரசன், மும்பை - 17

? தாதா கும்பலுடன் நக்மாவுக்குத் தொடர்பாமே?

! 'நக்மாவா... மும்தாஜா?' என்று போலீசுக்கே குழப்பம். தகுந்த ஆதாரமின்றி, சாட்சியமின்றி குற்றம் சாட்டுவதும் குற்றமே. போலீஸார் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளாது போனால் சட்டத்தின் ஆட்சி அல்ல, அராஜக ஆட்சிதான் நிலவும்.

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
எஸ். குமரேசன்,
163, திருவாதவூர் ரோடு,
திருமோகூர் - 625 107

● ரூ. 50/- பரிசு பெறுபவர்:
அ. ராதா,
19B, கீழ வீதி பொன்னன்திட்டு,
608 102

உ



ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.
✆ : 04366 273900

ஏகதின ஸ்ரீ மஹாருத்ர யஞ்ஞம், நவசண்டீ ஹோமம், த்ரிதின லக்ஷார்ச்சனை, திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

தாரண வருடம் பங்குனி மாதம் 12 ஆம் தேதி வெள்ளி முதல் 15ஆம் தேதி திங்கள் முடிய (25.3.2005 - 28.3.2005)

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 12ஆம் தேதி வெள்ளி துவங்கி 15ஆம் தேதி திங்கள் முடிய (25.03.2005 - 28.03.2005) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில்** உலக நலனை முன்னிட்டு பல விசேஷ ஹோமங்கள், நவசண்டீ ஹோமம், ஸுதர்சன ஹோமம், த்ரிதின லக்ஷார்ச்சனை, ஏகதின ஸ்ரீமஹாருத்ர யஞ்ஞம், திருக்கல்யாண உற்சவம் மற்றும் ஸம்வத்ஸராபிஷேகம் முதலியன நாட்டில் மக்கள் வாழ்வு சிறக்கவும் அறநெறி ஓங்கவும் இறையருளை வேண்டி நடத்தப்பட இருக்கின்றன. இவை சிறப்பாக நடைபெற அனைவரும் தங்களால் இயன்ற ஹோம, பாராயண, ஜப, அர்ச்சனைகளுக்கான கட்டணங்களையோ அல்லது நன்கொடைகளையோ ஸபாவின் பெயருக்கு மணியார்டராகவோ, காசோலையாகவோ அல்லது வரைவுக் காசோலையாகவோ அனுப்பக் கோருகிறோம். அல்லது கீழ்கண்ட முகவரியில் யாரிடமாவது செலுத்தலாம்.

ரூபாய் 600/-ம் அதற்கு மேலும் நன்கொடை அளிப்பவர்களுக்கு பூஜையில் வைத்து அபிமந்திரிக்கப்பட்ட 10 கிராம் எடையுள்ள வெள்ளி டாலர் பிரஸாதமாக வழங்கப்படும்.

என்றும் இறைபணியில்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435-2423297 மற்றும் **கிராமவாசிகள்**

எண்	நிகழ்ச்சி	கட்டணம்
1.	ஸ்ரீமஹா கணபதி ஹோமம்	ரூ.50/-
2.	ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்	ரூ.50/-
3.	ஸர்வதேவதா ஹோமங்கள்	ரூ.50/-
4.	சிறப்பு அபிஷேகம்	ரூ.50/-
5.	லட்சார்ச்சனை	ரூ.100/-
6.	ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்	ரூ.100/-
7.	ஸ்ரீ சண்டீஹோமம் (பொது)	ரூ.200/-
8.	ஸ்ரீ சண்டீஜப ஹோம ஸங்கல்பம்	ரூ.250/-
9.	வஸ்த்ரதானம் (ஒரு நபருக்கு)	ரூ.400/-
10.	நவகன்னிகா பூஜை (ஒரு கன்னிகைக்கு)	ரூ.450/-
11.	நவஸுவாஸினி பூஜை (ஒரு ஸுவாஸினிக்கு)	ரூ.600/-
12.	தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு)	ரூ.1000/-
13.	ஸ்ரீ மஹாருத்ரம் ஸங்கல்பம் (ஒரு கணத்திற்கு)	ரூ.1000/-
14.	ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி, புடவை (**9x5-9** கஜம்)	ரூ.1000/-
15.	ஸந்தர்ப்பணை (ஒருநாள்)	ரூ.2500/-
16.	திருக்கல்யாண உற்சவம்	ரூ.2500/-
17.	அன்னதானம் (ஒருநாள்)	ரூ.5000/-
18.	ஸ்ரீ மஹாருத்ரம் பூர்ண ஸங்கல்பம்	ரூ.5000/-

குறிப்பு: அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான தொகையை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"**விற்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக் காசோலை (D.D) மூலமோ அல்லது பொருளாகவோ அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பவும்.

G. குஞ்சிதபாதம், FCA.,
G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்-612 001
போன்: 0435 2420047

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 கப்பாரெட்டித் தெரு,
எஸ்.என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை -78.
போன்: 044-24836495

R. வைத்தியநாதன், மேலாளர்,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4,
கதவு எண் 12, 29வது தெரு,
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361


குடந்தை - பூந்தோட்டம் நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அருள்மிகு ஸற்குணேஸ்வரர் ஆலயம்.

எங்க ஊர் பிள்ளையார்

சிருங்கேரி தோரண கணபதி

சிருங்கேரி மடத்தைச் சார்ந்த புகழ்பெற்ற சாரதாம்பிகை ஆலயத்தின் ஒரு நுழைவாயில் நிலைப்படியின் மேல் கணபதி உருவம் உள்ளது. அவர் பெயர் தோரண கணபதி. அவருக்கு வெள்ளிக்கவசம், பூஜைகள் முதலானவை தனியாக விமரிசையாக நடக்கும்! அவர் முன்னே நின்று வேண்டிக் கொண்டதெல்லாம் உடன் நிறைவேறும். தற்போதைய மகாசன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதி தீர்த்த மகாசுவாமிகளுக்குத் தோரண கணபதி மீது மிகுந்த ஈடுபாடு உண்டு! ஸ்ரீ மடத்தில் அன்னை சாரதாம்பாள், மகா சந்நிதானம் படங்கள் போலவே தோரண கணபதி படமும் தனியாக விற்கப்படுகிறது. சாதாரணமாக கோயில் நுழைவாயில் படியில் கஜலக்ஷ்மி உருவம் பொறிப்பது வழக்கம்! இங்கு தோரண கணபதியே வீற்றிருக்கிறார் என்பது மிகவும் வியக்கத்தக்கது. சிருங்கேரி மடம் வெளியிட்டுள்ள படத்தில் வெள்ளிக்கவசம் அணிந்து அருள் பாலிக்கிறார் பாருங்கள்.

- ரமா மோகன்,
சென்னை - 34



• ஸ்ரீ தோரண கணபதி

நலம் தரும் பால விநாயகர்

"வேதாசல நகரில் வேண்டும்
வரம் கொடுக்கும்
தாதாவாய் ஓங்கும் தனி முதலே

வெயில்,

மாதாந்தபாகன்
பாலவிநாயகனே
ஏக தந்தா எங்கட்கருள்"
(வித்வான் பூசை நமசிவாயம்)

மேற்கூறிய வேதாசலம் நகர், செங்கையில் மேல மையூருக்கு அண்மையில் உள்ளது. பால விநாயகர் கணங்களுக்கு அதிபதியானவர். மிகவும் இளமையானவர். பாலைவனத்தையும் பசுமையாக்கும் சக்தி படைத்தவர். அனைவருக்கும் அருளையும் அறிவையும் தருபவர். அவரை வழிபடுவோமாக.

- கே.சேஷாத்திரி
சென்னை - 42



• ஸ்ரீ ஆதி ஜெய பஞ்சமங்கள விநாயகர்

மழை, விநாயகர்!

மும்பெருந் தெய்வங்களும் முழு முதற் கடவுளும்

அற்புதக் காட்சிக்கு சிவனையும்
ஆனந்த வாழ்வுக்கு விஷ்ணுவையும்



தங்கம் இளகினால் அதில் ரத்தினக் கல் பதியும், அது போல் நம் உள்ளம் உருகினால், உருகிய உள்ளத்தில் இறைவன் ஒன்றி விடுவான்.

- கிருபானந்த வாரியார்

மாணிக்க விநாயகர்

மகாபாரதத்தில் தருமர் அசுவமேத யாகம் செய்த பொழுது அன்னதானம் நடந்ததாகவும், அதில் லட்சம் பேருக்கு அன்னதானம் முடிந்தவுடன் மணிச் சத்தம் கேட்க வேண்டும் என்று ஒரு மணி கட்டப்பட்டு இருந்தது. அந்த யாகத்தன்று அன்னதான மணி இடைவேளை இல்லாமல் ஒலித்துக் கொண்டே இருந்ததாகவும் கூறுவார்கள். அதேபோல் பக்தர்கள் தங்களுடைய பிரார்த்தனை நிறைவேறியவுடன், வண்டியிலும் லாரியிலும் தேங்காய்களைக் கொண்டு வந்து சிதறுகாய் போட்ட வண்ணம் இருப்பார்கள். அந்த ஒலி கோயிலின் உள்ளே கேட்டுக் கொண்டே இருக்கும். அத்தனை சக்தி வாய்ந்த எங்கள் பிள்ளையார், கீழே மாணிக்க விநாயகராகவும், மலையின் மேலே உச்சிப்பிள்ளையாராகவும் காத்து ரக்ஷிக்கின்றார்.

விபீடணன், ராமர் பட்டாபிஷேகம் முடிந்ததும், ஸ்ரீ ராமர் பூஜை செய்த ஸ்ரீரங்கநாதரை விரும்பி இலங்கைக்கு எடுத்துச் செல்கின்றான். அவ்வாறு எடுத்துச் செல்லும்பொழுது நம் மக்களை விட்டுச் செல்ல ஸ்ரீரங்கனும் விரும்பவில்லை, முழு முதற் கடவுளாம் பிள்ளையாரும் விரும்பவில்லை. தந்திரம் செய்து சிறு பிள்ளையாக உருவெடுத்து, ஸ்ரீரங்கனை காவேரித் தாயின் மடியில் தாலாட்ட வைத்துவிட்டு, விபீடணன் துரத்த ஓடி, மலை உச்சியில் அமர்ந்து காட்சி தந்தவர் எங்கள் பிள்ளையார்.

மணி மணியாக பிள்ளைகள் வேண்டுமா, மணி மணியாக மார்க்குகள் வேண்டுமா, சித்தி, புத்தி, அமைதி, மன நிம்மதி என்ன வேண்டுமோ, வேண்டியதைக் கொடுப்பவர் எங்கள் மாணிக்க விநாயகர். எங்கள் திருச்சியின் பெரிய, சிறிய வியாபாரிகள் இரவு கடையை மூடிச் செல்லும் பொழுது, சாவியை அவர் காலடியில் வைத்து வணங்கி எடுத்து செல்வதை இன்றும் காணலாம்.

- அம்மு, ஸ்ரீரங்கம்

இகத்தின் சுகம்பெற பிரம்மனையும்
ஈசனின் அருளைப் பெற
ஆதித்தனையும்
உமையின் கருணை வடிவத்தையும்
கண்டு
ஊக்கத்துடன் ஸ்ரீ ஆதிஜெப பஞ்சமங்கள சக்தி விநாயகனின் பாதம் வணங்கி வழிபடுவோம், என்றென்றும்.

- ஆர். லலிதா
சென்னை - 17

ஆலமர விநாயகர்

கும்பகோணம் வட்டம், சாக்கோட்டை கிராமம் அருகே, மலையப்ப நல்லூரின் எல்லையில் உள்ள ஆலமர விநாயகர், 'உலக அதிசயங்களில்' ஒன்றாகும். 2000ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலமரம் வரிசையாகப் பிளவுபட்டு, இயற்கையாகவே குகை போன்ற சன்னதியில் எட்டடி நீளமும் மூன்றடி அகலமும் கொண்ட இந்த மரக்குகை, கோயில் கோபுரம் போலவே அமைந்து, பிள்ளையாரை வெயிலிலிருந்தும், மழையிலிருந்தும் காக்கிறது. நின்று கொண்டே, அருள் பாலித்து வரும் விநாயகர், மிகவும் சக்தி வாய்ந்தவர். ஆதிசங்கரர், பட்டினத்தார், காஞ்சி மாமுனிவர், போன்ற பல மகான்கள் வழிபட்ட தலம் இது. கும்பகோணம் மக்களுக்கு சிறந்த சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலமாக இந்த விநாயகர் கோயில் உள்ளது.

- க.மாலா கனகசபை,
சாக்கோட்டை

திருவையாறுக்குத் தம்பி திருப்பூந்துருத்தி!

தஞ்சை மண்ணில் இராமருக்கு எப்படி ஒரு தியாகராஜரோ, அப்படி கிருஷ்ணருக்கு ஒரு நாராயண தீர்த்தர். அவர் இயற்றிய கிருஷ்ண லீலா தரங்கிணி என்ற பாடல்கள் இசை உலகில் பிரபலமானவை. ஒவ்வொரு பாட்டையும் நாராயண தீர்த்தர் பாட, அதை ஆமோதிக்கும் வகையில் சலங்கையால் கிண்கிணிச் சத்தம் செய்தாராம், கிருஷ்ணர். அப்படி அங்கீகாரம் கிடைக்காத பாடல்களை நாராயண தீர்த்தர் விட்டு விடுவாராம்!



நாராயண தீர்த்தருடைய 259வது ஆராதனை விழா- அவர் சமாதியான திருப்பூந்துருத்தியில், நான்கு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. நடத்தியவர் இந்த ஊரைச் சேர்ந்த இசைக் கலைஞர் வெங்கடேசன். தொடங்கி வைத்தவர் மாவட்ட ஆட்சியர் வீரசண்முகமணி.

நான் முழுக்க உள்ளூர் - வெளியூர் இசைக் கலைஞர்களின் இசை அஞ்சலி. சமாதிக்கு வெளியே பந்தல் போட்டு ஜோடனை. தொந்தரவு செய்யாத மைக் - செட்.

வெளியூர்க் கலைஞர்கள் தங்க, மேலே அறைகளுடன், கீழே பொது மண்டபம். அருகேயே வசதியாக அமர்ந்து உண்ண பெரிய ஹால். "அக்ரஹாரத்தில் இருந்த என் வீட்டை விற்று இதைக் கட்டினேன்!" என்கிறார் வெங்கடேசன். இந்த ஆராதனை விழாவைக் குறை இல்லாமல் நடத்த, அவர் குடும்பமே ஓடியாடி உழைக்கிறது...

உண்ணி கிருஷ்ணன், சங்கீதா சிவகுமார், மந்தா சுதாராணி என்று பிரபலங்களின் நிகழ்ச்சிகளுடன், உள்ளூர்க் கலைஞர்கள், பக்கத்து கிராமத்துப் பள்ளிக்கூட மாணவிகள் என்று, தொடர்ந்து தரங்க இசை. கிராமங்களிலிருந்து வரும் எளிய மக்கள் சமாதி மண்டபத்துக்குப் போய்ப் பூஜை செய்து, வணங்கி இசையும் கேட்க உட்காருகிறார்கள். (முஸ்லிம் பெண்மணிகள் சிலரும் இதில் உண்டு!)



இந்த ஆண்டு முதல் முறையாக, துவக்க நாள் நிகழ்ச்சியை இந்தியாவிலுள்ள ஆல் இந்தியா ரேடியோவின் 138 கேந்திரங்களும், இரவு பி.எஸ். நாராயணசாமி மற்றும் மாம்பலம் சகோதரிகளின் தரங்கிசை நிகழ்ச்சியை, தேசிய ஒலிபரப்புச் செய்தன. இதற்கு முழு முயற்சி செய்து உதவிய முன்னாள் தென்-கிழக்கு ரெயில்வே பொது மேலாளர் ராம்ஜியை, வெங்கடேசன் பாராட்டிய போது பலத்த கைத்தட்டல்.

- சித்தார்த்



கண்ணாடி பூக்கள்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குறிஞ்சி. கண்ணாடிப் பூக்கள் போன்ற படங்களும் அப்படித்தான். ஒரு குழந்தை அழுதால், அழுகைக்கான காரணத்தை அறிந்து, அதை நிறுத்த முயற்சிப்பதுதான் தாய்க்கு அழகு. மாறாக குழந்தையின் வாயைப் பொத்துவதால் அழுகையை நிறுத்த முடியாது. இந்த குழந்தை உளவியலை அடிப்படையாகக் கொண்டு, அற்புதமாகக் கதை பின்னியிருக்கிறார்கள்.

சக்திவேல் மீரா தம்பதியின் ஒரே மகன் பத்து வயது வசு. தாயை தனது பெஸ்ட் ஃபிரெண்டாக பாவிக்கும் அவனது உலகில், புதிதாகப் பிறக்கும் தம்பிக்கும் இடம் கொடுக்கிறான். ஆனால் தனக்கான முக்கியத்துவம் தம்பியின் வருகையால் பறிபோவதை உணரும்போது, கண்ணாடி போன்ற அவனது குழந்தையுள்ளம் நொறுங்குகிறது. தனது இடத்தை பறித்துக் கொண்டு விட்டதாக தம்பி மீது கோபம் கொள்ளும் அவன், ஒரு கணப்பொழுதில், தோட்டத்துச் செடிகளுக்கு பூச்சிமருந்து தூவும் கைத்தெளிப்பானைக் கொண்டு, தூளியில் உறங்கும் தம்பியின் முகத்தில் 'ஸ்பிரே' செய்து விடுகிறான். குழந்தை இறந்துவிடுகிறது. சட்டமோ பதினெட்டு மாத காலம், அவனை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறது. அறியாத வயதில், புரியாமல் செய்த தவறுக்காக வசுவை அவனது பெற்றோர் கைவிட்டார்களா? அவனை இந்தச் சமூகம் எப்படிப் பார்த்தது என்பதை பம்மாத்து எதுவுமில்லாமல், யதார்த்தமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குனர் கேஷாஜ்ஜகான்.

தம்பிக்கு 'அப்பு' எனப் பெயர் சூட்டி மகிழ்கிற வசு, கொலைக் கருவியை பதற்றத்துடன் தோட்டத்தில் புதைக்கிற வசு, சிறுவர் குற்றவியல் நீதிமன்றத்தில் மிரட்டும் வழக்கறிஞரிடம், "தெரியாமல் செஞ்சுட்டேன். மன்னிச்சுருங்க அங்கிள்" என்று கரம் கூப்பிக் கதறும் வசு, சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில், தன்னை வெறுத்த தாத்தாவை கண்ணீருடன் காண நேரும் வசு என்று, நடிப்பில் குட்டிப்புலியாக அசத்தியிருக்கிறான்.

கதையோட்டத்தை பாதிக்காத இசைச் சேர்ப்பும், படத்தொகுப்பும் கண்ணாடிப் பூக்களுக்கு பலம்.

- விஷுவல்தாசன்

• அபவ் ஆவரேஜ்

அருள்வாக்கு

இந்த உடம்புதான் 'நான்' என்று நினைத்துக் கொண்டிருப்பதால்தான் ஸதா இதற்கு ஸ்வரக்ஷணை பண்ணுவதையே கார்யமாக வைத்துக் கொண்டு, ஆத்மாவைக் கோட்டை விட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த தேஹாத்ம புத்தி போகணும். இதற்காகத்தான் சரீரத்துக்குச் சிரமத்தை தருகிற உபவாஸங்களை சாஸ்திரம் விதித்திருக்கிறது. உபவாஸங்களால் சரீரத்துக்கு ஏற்படுகிற சிரமங்களைச் சிரமமாகத் தெரியாமல் பழக்கிக் கொள்கிறோமென்றால், அப்போது தேஹத்தையே பிரதானமாக மதித்து, அதன் ஸௌகர்யத்தையே கவனிக்கும் அபிமானத்தை விடுகிறோம் என்றுதானே அர்த்தம்?



'பசி எடுத்தாலும் பட்டினி கிடந்து பழகு; வம்பும் வீணும் பேசுவதில் ஸுகமிருந்தாலும் மௌனம் அநுஷ்டி; கண்ணை இழுத்துக் கொண்டு போனாலும், தூங்குவதில்லை என்று ராத்திரி பூரா விழித்துக் கொண்டு ஈச்வர ஸம்பந்தமாக ஏதாவது பண்ணிக் கொண்டிரு. இப்படியெல்லாம் பழகப் பழக தேஹாத்ம புத்தி போகும். சரீரம் எப்படியானாலும், சித்தம் பரமாத்மாவிடம் நிற்கும். இப்போது பிடித்தே பழக்கிக் கொள்ளாவிட்டால், மரணயாதனை என்று சொல்கிறார்களே, அந்தப் பெரிய ஹிம்ஸை சரீரத்துக்கு வரும்போது மனஸை எப்படிப் பரமாத்மாவிடம் செலுத்த முடியும்?' என்றுதான் சாஸ்த்ரங்கள் வ்ரத உபவாஸங்களை வைத்திருப்பது.

ஜீவிப்பதற்கு சாப்பாடு அவசியம்தான். இல்லாவிட்டால் உயிர் போய்விடும். ஆனால் சாப்பாடு கொஞ்சம் கூட ஆகிவிட்டால்கூட உடம்புக்கு வியாதி வக்கைகள்தான். ஆரோக்கியத்துக்குக் காரணமான ஆஹாரமே லிமிட் தாண்டிவிட்டால் நோய்க்குக் காரணமாகி விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

குழந்தைப்பேறு தரும் குட்டிக் கிருஷ்ணர்!

தாமிரபரணி நதிக்கரையில், வயல்கள் நிறைந்த எழில் மிகு கிராமம் தான் மேலச்செவல். திருநெல்வேலியிலிருந்து அம்பாசமுத்திரம் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

இந்தச் செவல் கிராமத்தில் வேணுகோபாலர், நவநீதகிருஷ்ணர், மகாலிங்கேச்வரர் மூவருக்கும் தனித்தனியே கோயில்கள் அமைந்திருக்கின்றன.





இம்மூன்று கோயில்களில் மிகப் பழைமை வாய்ந்தது, நவநீத கிருஷ்ணர் ஆலயம். சுமார் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் அமையப் பெற்ற ஆலயத்தில் கர்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், மணி மண்டபம் மற்றும் உட்பிராகாரம் போன்றவற்றுடன், இராமாயண, மகாபாரத கதாபாத்திரங்களை விளக்கும் மிக அழகிய சிற்பங்கள், மண்டபத்தின் மேற்கூரையில் இருக்கின்றன. இது வைணவ ஆகமவிதிப்படி கருங்கல்லால் கட்டப்பட்ட கோயில். மூலவர், நவநீதகிருஷ்ணர் குழந்தை வடிவில், இரு கைகளிலும் வெண்ணெய் ஏந்தி நிற்கும் விக்கிரகம் சாளகிராமக் கல்லினால் செய்யப்பட்டது. வேறெங்கும் காணப்படாத கோலத்தை இங்கு கண்டு மகிழலாம்.

குழந்தைப்பேறு இல்லாதவர்கள், ஆதிசேஷ குடையின் கீழ் நவநீத கிருஷ்ணர் நின்றிருக்கும் கோலத்தில் சிலை செய்து, அதை கோயிலில் சேர்ப்பிக்க, விரைவில் மகப்பேறு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

கவனிப்பாரற்றுக் கிடந்த நவநீத கிருஷ்ணர் ஆலயத்துக்கு பாஸ்கர முதலியார், நாராயண ஐயர் மற்றும் குலதெய்வமாக வழிபாட்டோர்களும், கிராம மக்களும் சேர்ந்து குடமுழுக்கு நடத்தியுள்ளனர். வெண்ணெய் போன்ற அருளை, கையில் வைத்துக் கொண்டு, வந்தோருக்கெல்லாம் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் நவநீத கிருஷ்ணனைப் பார்க்க நீங்கள் எப்போது வரப்போகிறீர்கள்?

- எஸ்.வி. கிருஷ்ணன்

கோலிவுட் சிறுகதை

ஒரே

நெல்லை எக்ஸ்பிரஸுக்காக காத்துக் கொண்டிருந்த மோகன், எதிரே ஆறுமுகம் வருவதைப் பார்த்து பதற்றமானான். பார்த்து ஐந்து வருடங்களாகியும் மாற்றம் எதுவுமில்லாமல் அப்படியே இருந்தான். ஒரே வித்தியாசம் ரயில்வே யூனிஃபார்மில் இருந்தான். மோகனை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தான். 'போச்சு... எல்லார் முன்னிலையிலும் சட்டையைப் பிடித்து மானத்தை வாங்கப் போறான்' பதைத்தான் மோகன்.

ஆறுமுகத்தைப் பார்த்து மோகன் பயப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. இவன் சொன்ன பொய்யால், ஆறுமுகம் தர்ம அடி வாங்கியிருக்கிறான். வேலையிலிருந்து துரத்தப்பட்டிருக்கிறான்.

ஐந்து வருடங்களுக்கு முன் மோகன் இயக்குனராக ஒவ்வொரு நடிகரின் ஆபீஸ் முன்பும் நாயாக காத்துக் கிடந்த நேரம். ஆறுமுகம் பழக்கமானான். இயக்குனர் புதியவனின் ஆபீஸில், ஆபீஸ் பாய், கிளார்க், மானேஜர், எடுபிடி என சகலமும் ஆறுமுகம் தான்.



முதல் சந்திப்பிலேயே சிநேகமாகச் சிரித்தபடி பேச ஆரம்பித்தான். ஒரே ஊர் என்று தெரிந்ததும், மேலும் நெருக்கமானான். அந்தச் சமயத்தில் புதியவனுக்குக் கதை பிடித்துப் போக, அவர் ஆபீஸிலேயே, கதை விவாதத்துக்கு அமர்த்தப் பட்டான் மோகன். ஆறுமுகம் மேலும் நெருக்கமானான்.

ஒரு நாள் திடுதிப்பென்று கேட்டான்.

"என்னைப் பத்தி என்ன நெனைக்கிறீங்க சார்!"

மோகன், ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"நான் நடிகனாகணும் சார்! ஒரு வடிவேலு, விவேக் மாதிரி வரணும் சார்!"

இவன் புருவங்கள் ஆச்சர்யத்தில் உயர, ஆறுமுகம் தொடர்ந்தான்.

"நான் நல்லா மிமிக்ரி பண்ணுவேன் சார்!"

பிரபல நடிகர்கள் போல் பேசிக் காண்பித்தான். நடித்துக் காண்பித்தான்.

'இவனுள் இப்படி ஒரு திறமையா!' என மலைத்துப் போனான் மோகன்.

ஒரு பொய்

பி. மாரிமுத்து

"பெறகு ஏண்டா... ஆபீஸ் பாயா இருக்க... நடிக்க ட்ரை பண்ண வேண்டியது தானே!"

"எனக்கு யாரை சார் தெரியும்! புதியவன் சார் நடிக்க வைக்கிறேன்னிருக்காரு! அதுக்காகத்தான் இரண்டு வருசமா, சம்பளமில்லாம, நாயா இவர்கிட்ட கெடக்குறேன் சார்!"

மோகன் அவனை பரிதாபமாகப் பார்த்தான்.

"எங்கப்பா ரயில்வேல வேலை பார்த்தாரு சார்... ஒரு வருஷத்துக்கு முன்னாடி செத்துப் போயிட்டாரு சார்... அவரு வேலை, இப்ப எனக்கு வந்திருக்கு... அம்மா டெய்லி போன் பண்ணி கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க!"

"போய் வேலைல சேரவேண்டியதுதானே!"

"புதியவன் சார்ட்ட சொன்னேன். போக வேண்டாம்... உன்ன பெரிய நடிகனாக்குறேன்னிருக்காரு! சார்! உங்க படத்துல என்ன நடிக்க வைப்பீங்களா சார்!"

ஆர்வமாகக் கேட்டான்.

"கண்டிப்பாடா!" என்றான்.

சந்தோஷமாகச் சிரித்தான்.

சொன்னபடியே அவனுக்காக ஒரு கேரக்டர் தேர்வு செய்து வைத்தான்.

ஆர்டிஸ்ட் லிஸ்ட், புதியவனிடம் கொடுக்கும்போது சொன்னான்,

'சார்... அந்த வேலைக்காரன் கேரக்டர், அதை... நம்ம ஆறுமுகத்த பண்ண வைக்கலாம்னு நெனக்கிறேன் சார்!"

புதியவன் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"வேண்டாம்!"

"இல்ல சார்! ஆறுமுகத்துகிட்ட நெறைய திறமை இருக்கு!"

"அவன நடிக்க வச்சுட்டா... ஆபீஸ் வேலையிலிருந்து எனக்கு கால் புடிக்கிறது வரைக்கும் நீங்க




பார்ப்பீங்களா?"

சுள்ளென்று கோபம் வந்தது. எட்டு வருடத் தவம். ஒரு நிமிட கோபத்தில் கலைந்துவிடக் கூடாது. அடக்கிக் கொண்டான்.

"அதுக்கு வேற ஆர்டிஸ்ட் போடுங்க!"

'சரிங்க சார்!" என்று நகர்ந்தான்.

என்ன ஒரு சுயநலம். பாவம் அந்த ஆறுமுகம். கண்டிப்பாக அவனுக்கு எதுவும் செய்யப் போவது இல்லை. அவனை



"அந்த டாக்டர் போலியா இருப்பாருன்னு எப்படிச் சொல்றீங்க?"

"நோயாளிக்கு எக்ஸ்ரே படம் எடுக்கிறப்ப கூட ஸ்மைல் ப்ளீஸ்... என்கிறாரே?"

- வே. முருகேசன்

அப்படியே வைத்து இவன் சிரழித்து விடுவான். 'ஆறுமுகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும்'- நினைத்துக் கொண்டான் மோகன்.

ஷூட்டிங்குக்கு ஒரு வாரம் முன்பாக புதியவனிடம் பேசினான்.

"சார், சாப்பாட்டுக்கு நீங்க குடுக்கிற பணம் பத்தலை சார்."

"நாங்க அஞ்சு பேர் இருக்கோம் சார்!"

"அதான் டூபிஃப்ட்டி குடுக்கிறனே... ஈச் பிஃப்ட்டி... இதவிடவா வேணும்!"

"என்னது, இருநூற்று ஐம்பதா? சார் அஞ்சு மாசமா நூற்றைம்பதுதான் சார் எங் கைக்கு வருது!"

"உண்மையாவா?"

"சத்தியமா சார்!"

ஆத்திரத்துடன் பெல்லை அழுக்கினார்.

ஆறுமுகம் வந்தான்.

"டேய்!... லஞ்ச் காக இவங்களுக்கு எவ்வளவு குடுக்கற?"

"இருநூற்று ஐம்பது சார்!"

மோகனைப் பார்த்தார்.

"இல்ல நூத்தம்பதுதான் தர்றான்!"

ஆறுமுகம் அதிர்ச்சியுடன் பார்த்தான்.

"தோல உரிச்சிருவேன்! உண்மையச் சொல்லு!"

"எங்கம்மா மேல சத்தியமா... நான் பணம் எடுக்கல சார்!"

"ஆமா, உங்கம்மா..."

அசிங்கமாய் ஒரு கெட்டவார்த்தை சொல்லியபடி எட்டி உதைத்தார். சுருண்டு விழுந்தான் ஆறுமுகம்.

மோகனுக்கு அடிவயிறு சில்லிட்டது.

தடுமாறி எழுந்தபடி, "மரியாதையாப் பேசுங்க!... எங்கம்மாவப் பத்தி பேசுனா கெட்ட கோபம் வரும்!"

"பெரிய..." சரமாரியாக அடி விழுந்தது.

சட்டையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளப்பட்டான்.

கண்ணில் நீர் முட்ட, மோகனை முறைத்தபடி வெளியேறினான், ஆறுமுகம்.

"சார்!"........

எதிரே அவன் தான்.

பயம் நெஞ்சைக் கவ்வ எச்சில் விழுங்கினான்.

"சார்! என்னத் தெரியுதா... ஆறுமுகம்!"

தெரியாமல் யோசிப்பது போல் நடித்தான்.

"இயக்குநர் புதியவன் ஆபீஸ்ல..."

"ஓ!... ஞாபகம் வந்திருச்சு... எப்படி இங்க?..."

"உங்களால தான் சார்!"

சுருக்கென்று தைத்தது மோகனுக்கு. சமாளித்தபடி சிரித்தான்.

"மக்கி... மண்ணாப் போயிருப்பேன் சார்... நீங்க சொன்ன பொய்யாலதான் பொண்டாட்டி புள்ளைகளோட சந்தோசமா இருக்கேன்!"

"அதுபோதும்பா... எதுவும் உதவி தேவைப்பட்டுச்சுன்னா..." என்று கார்டை நீட்டினான்.

"வேண்டாம் சார்! உங்க அட்ரஸ் தான் ஊருக்கே தெரியுதே... உங்க படமெல்லாம் மொத ஷோவே பாத்திருவேன் சார்... ரொம்ப நல்லா எடுக்கறீங்க சார்!"

"தேங்க்ஸ்! சென்னைக்கு வா. என் படத்துல கண்டிப்பா உன்ன நடிக்க வைக்கிறேன்டா!"

"வேண்டாம் சார், இப்ப நிம்மதியா இருக்கேன்!"

டிரெயின் வேகமெடுத்துக் கிளம்பியது.

கண்கள் கலங்க, ஆறுமுகத்துக்குக் கையசைத்தான் மோகன். ○



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.1,000/-	ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
மதிய உணவு	ரூ.2,000/-	ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.1,000/-	குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.2,00,000/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.1,000/-		

சுனாமியால் பாதிக்கப்பட்ட தாய் தந்தை இழந்த 50 குழந்தைகளுக்காக காரைக்காலில் ஸ்ரீ சாரதா சக்தி பீடம் புதிய கிளையை துவக்கப்பட்டிருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்
நல்லாசியுடன்

சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா

A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,





நல்லன எல்லாம் தரும்

அந்த ஆஞ்சநேயரைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல மனசு ஆசைப்படும். அவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கும் போதே மனசு உருகி, நெகிழ்ந்து பரவசமாகிவிடும். அவ்வளவு எழில்! அத்தனை ஜீவன்! அப்படிப்பட்ட பால, வீர, கம்பீர, சுந்தர அனுமனைத் தரிசிக்க வேண்டுமானால், திருத்தணி, நல்லாட்டூர் கிராமத்துக்குப் போக வேண்டும்.

ஆஞ்சநேய ஸ்வாமியைக் கண் குளிர தரிசியுங்கள். உயிருள்ள ஜீவ கல்லில் காணப்படும் அந்த பால மாருதியின் முகத்தில்தான் எத்தனைக் கனிவு!

அனுமானின் திருப்பாதங்கள் திருப்பதியை நோக்கி நடந்து போவதாகத் தோன்றுகிறது. பலமுள்ள சிறிய இடுப்பு, தண்டைச் சிலம்பு அணிந்த பாதங்கள், வளையல் அணிந்த கரங்கள்... ராஜா வீட்டுக் குழந்தைகளுக்கே உரிய செல்வ லட்சணமல்லவா? அனுமனின் இடுப்பில் ஒரு கச்சம், அதை இறுக்கிப் பிடித்திருக்கும் சிங்கத் தலை பதக்கத்துடன் கூடிய பெல்ட் என்று, வஸ்திர அழகோ வெகு நேர்த்தி.

அந்த பெல்டுக்கு மேலே பாருங்கள்! ஒரு பிச்சுவாக் கத்தி. இடுப்பில் செருகப்பட்டு 'பளிச்' என்று மின்னுகிறது. ஹூம்! பால மாருதியானாலும் வீரத் இல் மகா புருஷரா யிற்றே!

பால வீர மங்கள ஆஞ்சநேயரின் நீண்ட ஜடை முடி நேர்த்தியாக வாரப்பட்டு, கொண்டை போல் முடியப்பட்டு, சிந்தூர வர்ண மலரும் சூட்டப்பட்டிருக்கிறது.

ஆஞ்சநேயர் கையில் வழக்கமாகக் காணப்படும் 'கதை' இல்லை. மாறாக தாமரை மொட்டு ஒன்றை நெஞ்சோடு சேர்த்து அணைத்த வண்ணம் இருக்கிறார். தாமரைச்செல்வி யார்...? திருமகள்! அந்த லக்ஷ்மி வீற்றிருக்கும் பத்மத்தை தம் நெஞ்சோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பதால், லக்ஷ்மியின் கடாட்சம் அனுமனுக்கு மட்டுமில்லை... அனுமனைத் தரிசிக்கும் அனைவருக்குமே கிடைக்கும் என்ற தத்துவத்தை அற்புதமாக எடுத்துக் காட்டுகிறது.

கோயில் வரலாறு: – ஸ்ரீ வியாச ராயரால் ஸ்தாபிக்கப்பட்ட 732 ஆஞ்சநேயர் ஆலயங்களில், குசஸ்தலை ஆற்றங்கரையோரத்தில் உள்ள ஸ்ரீ வீரமங்கள ஆஞ்சநேயர் ஆலயமும் ஒன்று. காலப்போக்கில் சிதிலமடைந்து, ஆற்றுப் படுகையில் மூழ்கிக் கிடந்த இக் கோயிலை, சென்னை அமராவதி ஹோட்டல் செயல் இயக்குநர் சக்கரவர்த்தி, நேர்த்தியாகப் புதுப்பித்துள்



• ஜானகி - சக்கரவர்த்தி



நல்லாட்டூர் அழகன்!

ளார்.

"சென்னையிலிருந்த எனக்கும், டெல்லியில் இருந்த என் கணவருக்கும் ஒரே சமயத்தில் அனுமார் கனவில் தோன்றி, ''எனக்குக் கோயில் கட்டு'' என்று உத்தரவிட்டார். உடனே மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டு, ஒன்பதே மாத காலத்தில் பணிகள் முடிவடைந்தன'' என்று பரவசத்தோடு குறிப்பிட்டார் ஜானகி சக்கரவர்த்தி.

சிறப்பு வழிபாடு: -

நல்லாட்டூர் ஆஞ்சநேய சுவாமி கோயிலில் பூஜித்துத் தரப்படும், சிவப்பு நிறக் கயிறை அணிந்து பக்தியோடு பிராத்தனை செய்ய வேண்டும். இயன்ற பொழுதெல்லாம் 'ராம் ராம்' என்று ஜபிக்க வேண்டும். உங்கள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் உடல்நலம், மனநலம், செல்வம், திருமணம், ஆயுள், மக்கட்பேறு, வியாபார விருத்தி, கல்வி என வேண்டியது நிறைவேறியதும் ஸ்ரீவீர மங்கள ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சார்த்தி அருளாசி பெற வேண்டும்.

வீரமங்கள ஆஞ்சநேயனை வணங்கினால் நல்லன அனைத்தும் தருவார் என்பதை இங்கு வரும் பக்தர் கூட்டமே உணர்த்துகிறது.

- மது

போஸ்ட்கார்ட் கதை

தங்கமே ஞானத் தங்கமே!

கே. ஜி. ஜவஹர்


அலாரம் சிணுங்கியது. காலை மணி ஐந்து. கடியாரத்தின் தலையைத் தட்டி நிறுத்தி எழுந்ததுமே, பரபரப்பு தொற்றிக் கொள்கிறது. வேகமாகக் குளித்து ஈரத் துண்டால் தலையைக் கட்டி பொட்டு வைத்து, சுறுசுறுப்பாகக் கிச்சனுக்குள் நுழைகிறேன். போகும்போது டு இன் ஒன்னை ஆன் பண்ணி சுப்ரபாதத்தை ஓடவிடவும் மறக்கவில்லை. பால் கொதிக்கும் நேரம் பெட்ரூமுக்கு வந்து கணவரைப் பார்க்கிறேன். ஹாயான தூக்கம். இந்தப் பக்கம், மூத்த பெண் திவ்யா. இடது பக்கம் இரண்டாம் செல்வம் காவ்யா. குடும்பத் தலைவனே இப்படி குறட்டை விட்டால், குழந்தைகள் எப்படி சுறுசுறுப்பாக இருக்கும்? எரிச்சலுடன் அவரை எழுப்புகிறேன். புரண்டு படுக்கிறார்.

சமையல் வேலை உட்பட அத்தனையையும் முடித்துவிட்டு ஆபீஸ் கிளம்ப வேண்டும். யாரும் எழவில்லை. இரண்டு தட்டு தட்டியதில் திவ்யா எழுந்துவிட்டாள். சிணுங்கிக் கொண்டே பல் துலக்கப் போனாள். இப்போது அடுப்பில் இட்லிக் கொப்பரை ஏறிவிட்டது. வந்து எட்டிப் பார்த்தால், அப்பாடி...! அவரும் எழுந்து விட்டார்! காவ்யா மட்டும் தூங்கிக் கொண்டிருந்தாள்.



சற்று பலமாகவே காலில் இரண்டு போடு போட்டேன். அவ்வளவு டென்ஷன்!

கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்தவள், எரிச்சலுடன் கேட்டாள். ''என்னம்மா, சாமியை மட்டும் சுப்ரபாதம் போட்டு எழுப்பறே. என்னை மட்டும் ஏன்மா அடிச்சு எழுப்பறே...?''



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா பாடசாலை
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (டோர் 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ : (0435)
Off : 2425948
Fax : 2423777
Patasala :
2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 462 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 150 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் ***ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் சுவர்ண ஸ்தானம்*** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு நன்கொடை திட்ட விபரங்கள்	நன்கொடை தொகை	*நிரந்தர வைப்பு நிதி* "Corpus Fund"
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 8,000
அமாவாஸ்யை (or) *பௌர்ணமி* (or) *க்ருஷ்ண* (or) *சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு* [Please choose one specific day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs. 25,000
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs.2 Lakhs

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D./ Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

"ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ் சார்பாக

திருக்கயிலாயம் – மானஸரோவர்

ஆறாம் ஆண்டு புனித யாத்திரை 2005–ல்

மே மாதம் முதல் செப்டம்பர் வரை, மாதா மாதம் ஒரு குழு புறப்பட இருக்கிறது.

18 நாட்கள் கொண்ட புனிதப் பயணத்திற்கு அனைத்து செலவுகளுடன் விமானக் கட்டணம் உட்பட ரூ.62,000/- மட்டுமே

12 ஆண்டுகளாக தர்மத்தை, ஞானத்தை, பக்தியை வெளிப்படுத்தி வரும் ஆன்மீகம் தெய்வீக மாத இதழ் சார்பாக திருக்கயிலை நாதனின் திருவருளால் தெய்வீக அன்பர்கள் அனைவரும் திருக்கயிலைநாதனை தரிசனம் செய்யவேண்டும் என்ற இறை சிந்தனையோடு ஆன்மீக உணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும், 10 வருடங்களாக திருக்கயிலாய மானஸரோவர் யாத்திரை சென்ற அனுபவமுள்ள ECO-Trek International,(Kathmandu) நிறுவனத்தின் உரிமையாளர் Mr.Jothy Athikari மூலம் யாத்திரை நடைபெறும். பார்வதியின் அம்சமாக கருதப்படும் மானஸரோவரில் புனித நீராடி திருக்கயிலாய பரிக்கிரமா (கிரிவலம்) செய்து வர இருக்கிறோம். இங்கு சிவபெருமானே மலை வடிவில் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். டாக்டர்களுக்கு முன்னுரிமை தரப்படும். குரூப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு. குறைந்தது 12 நபர்கள் கொண்ட குழுவாக வந்தால் தாங்கள் விரும்பும் தேதியில் திருக்கயிலாயப்பயணம் ஏற்பாடு செய்து தரப்படும். பாஸ்போர்ட் மிக அவசியம்.

திருக்கயிலாயம், மானஸரோவர், நேபாள் திருப்பயணத்தின் சிறப்பம்சங்கள்

● மானஸரோவரில் கயிலை நாதர் முன் துறவியரைக் கொண்டு சிறப்பாக பூஜை ஹோமம் செய்யப்படும். ● பிரதோஷம், பௌர்ணமி நாட்களில் திருக் கயிலை மற்றும் மானஸரோவரில் தங்குதல். ● தினசரி கூட்டு வழிபாடு நடத்தப்படும் ● துறவியர்களும் பங்கு கொள்கிறார்கள் ● திருக் கயிலை திருப்பயணம் வீடியோ எடுக்கப்படும் ● யாத்திரை காலம் முழுவதும் தென்னிந்திய உணவு வசதி ● மருத்துவ உதவி ● குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) ● உயர்ந்த அழுத்தத்திற் கேற்றபடி அதிக நாட்கள் தங்கிச் செல்லுதல் ● கயிலை நாதர் முன்பு நடைபெறும் ஹோமத்தில் வைக்கப்பட்ட கயிலைநாதர் வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும். ● சென்னையிலிருந்து, திருக்கயிலாயம் சென்று வலம் வந்து திருக்கயிலை நாதனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

முன் பதிவுக்கு அணுகவும்...




ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

(Specialist in Holy Kailash - Manasarovar & Mukthinath Yatra)

68, நடுத்தெரு, (ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை -600 004.

TEL : 5206 7068. Cell : 9282226230 (24 Hours)



32 ஒரு சந்திப்பு - ஒரு வழக்கு

மகுட

'உத்பன்னமேவ நச்யதி' - உற்பத்தியான உடனேயே நசிந்து விடும் காலக் கணக்கை 'ஒருகணம்' என்று கூறுகிறது ஒரு வடமொழி வாக்கியம்.

வாழ்வின் முக்கிய தருணங்களில் கண நேரத்தில் எடுத்துவிடும் முடிவுகள், வாழ்க்கையின் போக்கையே கூட மாற்றி விடுகின்றன. அதிலும் போர்க்காலங்களில் எடுக்கப்படும் அத்தகைய முடிவுகள் போர்களின் முடிவுகளையும், வெற்றி தோல்விகளையும்கூட நிர்ணயித்து விடுகின்றன.

எதிரில் நிற்பவன் யாரென்பது புரிந்த கணத்தில், வீரர் தலைவன் கரத்திலிருந்த வாள் பராந்தகனை நோக்கி கனவேகத்தில் இறங்கியது. "இவர்களை வெட்டி யெறியுங்கள்" என்ற உத்தரவும் இரைந்து ஒலித்தது அவனிடமிருந்து.

சில காலத்துக்கு முன்னர், வண்டாழஞ்சேரி கிராமத்து அப்பாவி வாலிபனாக வந்து சிக்கி, பலத்த காயங்களுடன், உக்ரோதயம் பதித்த பொன்னாரத்துடன் காவிரியின் பிர வாகத்தில் பாய்ந்து தப்பிச் சென்றுவிட்ட அந்த வீரனைப் பற்றி, பின்பு எத்தனையோ கேள்விப்பட்டிருந்தான் வீரர் தலைவன். ஆனால் அந்த வாலிபனை குடந்தையின் வீதியில், அதே இடத்தில், ஏறக்குறைய அதே சூழ்நிலையில் மீண்டும் சந்திப்போமென்பதை எண்ணிக்கூடப் பார்க்கவில்லை ராஷ்டிரகூட வீரர் தலைவன்.



அன்று தன்னிடம் சிக்கியபோது, மருண்ட விழிகளோடு, கரத்தில் பிடித்த துணி முடிப்போடு நின்றவன், அதே வார்த்தைகளை பதிலாகக் கூறினாலும், முகத்தில் அச்சமோ தயக்கமோ மருந்துக்குக்கூட இன்றி, பரம நிதானத்துடன், நேர்ப்பார்வையுடன் நிற்பதைக் கண்டு சற்று திகைத்துத்தான் போயிருந்தான் வீரர் தலைவன்.

"எதிரில் நிற்பது இருவர்தானே' என்ற எண்ணம் எழுந்த வேகத்தில், கரத்திலிருந்த வாளை பராந்தகன் மீது இறக்கிய வீரர் தலைவன், 'இருவரையும் வெட்டியெறியுங்கள்' என்றும் உத்தரவிட்ட இரண்டொரு கணங்களிலேயே, தான் எடுத்த முடிவு எத்தனை அனர்த்தத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதைப் புரிந்து கொண்டான்.

வெகு வேகமாக இறங்கிய வாளின் பாதையிலிருந்து கண்ணிமைக்கும் நேரத்தில் சுழன்று விலகினான் பராந்தகன். சுழன்று திரும்பியவன் கரத்தில், அவன் இடையிலிருந்த ரிஷப இலச்சினை பதித்த கனத்த வாள் தோன்றி, சுரசுரவெனச் சுழல ஆரம்பித்தது. அது சுழன்ற விதமும், முறையும், ராஷ்டிர கூடர் வீரர் தலைவனையும், அவன் வீரர்களையும் பக்க வாட்டில் நெருங்க விடாமல் அடித்ததன்றி, நேர் எதிரில் நின்று போராட வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தின. பக்கவாட்டில்

வைரம்

விஷ்வக்ஸேனன்

நெருங்க முற்பட்ட இருவர், இரண்டாவது கணத்தில் கழுத்திலும் தோள்களிலும் வெட்டுப்பட்டுச் சரிந்தனர். மற்றொருபுறம் நெருங்கியவனது வாள் பறித்து எறியப்பட்டு, அவன் கரமும் செயலற்றுத் தொங்கியது. நேர் எதிரில் நின்று வாட்களை வீசியவர்களின் நிலையும் வீரர் தலைவன் நிலையும், அத்தனை விரும்பத் தக்கதாக இல்லை. எதிரில் நிற்பவர்களின் வாட்களை அனாயாசமாகத் தடுத்துச் சுழன்ற அந்த வாள், கண்களுக்கும், கழுத்துக்கருகிலும் தோன்றி விலகுவதைக் கண்ட வீரர் தலைவனின் சித்தத்தில் திகில் பரவியது.

போதாக்குறைக்கு பராந்தகனுடன் வந்திருந்த பருத்த உருவத்துடனிருந்தவன் வெளியிட்ட அசுரச் சிரிப்பும், பெரும் விழிகளை உருட்டி விழித்த விதமும், தன் வீரர்களைத் திணறடித்து, மளமளவெனச் சரித்த வேகமும் வீரர் தலைவனின் திகிலை இன்னும் உயர்த்தின.

நிசப்தமாயிருந்த அந்த இரவில் வீதியிலிருந்து எழுந்து ஒலித்த வாட்களின் ஒலி,



அந்த வீதியின் இல்லங்களிலிருந்தவர்களை எழுப்பி விட்டதால், ஆண்களும், பெண் களுமாக வெளியில் வந்தவர்கள், இரு சோழ வீரர்கள் ராஷ்டிரகூடர்களுடன் போராடுவதைக் கண்டார்கள். இதற்கு முன்பு ராஷ்டிரகூடர்கள் செல்லும் புரவிகளின் குளம்பொலி கேட்டாலே பதுங்கி மறைந்த குடந்தை மக்களின் போக்கு, சமீபகாலமாக மாறிப் போயிருந் தது என்றால், அதற்குத் தகுந்த காரண மிருக்கவே செய்தது.

விக்கிரமவரையர் திரட்டியிருந்த வீரர்களை சில தினங்களுக்கு முன்பாகவே சாதாரண மக்களோடு மக்களாகக் கலந்து, குடந்தை நகரெங்கும் பரவிக்கிடக்கச் செய்திருந்தார். விடுதலைக்கான முதல் போர்ப்பாசறை குடந்தையில் அமையப் போவதையும் அறிவித்து, ஊர்த் தலைவர் மூலமாக மக்களிடம் தேவையான உதவிகள் செய்யவும் கேட்டுக் கொண் டிருந்தார்.

வீதியில் பராந்தகன் ராஷ்டிரகூடர் களுடன் சண்டையிட்ட இடத்தைச் சூழ்ந்து கொள்ள முற்பட்ட கூட்டத் திலிருந்து யாரோ ஒருவர் "நம் பராந்தகன், பராந்தகன்" என்று கூவ, தொடர்ந்து பல குரல்கள் ஒலித்தன. கூட்டத்திலிருந்த இளைஞர்கள் ராஷ்டிரகூடர்களைச் சூழ்ந்து தாக்கவும் தொடங்கினார்கள். ராஷ்டிரகூடர்களின் வாட்கள் பறிக்கப் பட்டு, உருட்டித் தள்ளப்பட்டு, சில கணங்களில் கயிறுகளால் பிணைக்கவும் பட்டார்கள். சண்டை நின்று கூச்சல்கள் மட்டுமே அங்கு ஒலித்தன.

வீரர் தலைவனின் நிலை சொல்லத் தரமற்றதாயிருந்தது. அதுவரை தன்னையும், தன் வீரர்களையும் கண்டு நடுங்கியும், அடங்கியும் கிடந்த குடந்தை மக்கள் தாக்கியதும், தங்களைப் பின்கட்டாகக் கட்டிப் போட்டு உருட்டியதும் அவன் அதிர்ச்சியை உயர்த்தியிருந்தது.

"இவர்களைக் கொன்று விடுங்கள் பராந்தகரே" பல குரல்கள் ஆத்திரத்துடன் ஒலித்தன.

"பராந்தகா, இவர்கள் இதுவரை செய் திருக்கும் அக்கிரமங்களுக்கு மக்களிடமே இவர்களை விட்டு விடுவோம். அவர்களே தீர்ப்பளிக்கட்டும்" என்றான் பகதத்தன்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஊர்த் தலைவர் வந்து கொண்டிருந்தார். பராந் தகனை நெருங்கி கண்களில் நீர் பொங்க அவனை அணைத்துக் கொண்டார்.

"பராந்தகா, என்னைச் சந்திக்க வந்து உனக்கு நேர்ந்ததையெல்லாம் பிறகு அறிந்தேன். நீ வீரனானதையும், இந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்ததையும், நம் படைத்தலைவர் மூலம் அறிந்தேன். உன் தந்தை கருணாகரரின் பெயரை நீ காப் பாற்றி விட்டாய். அவருக்கு எந்த விதத் திலும் குறைவில்லாத வீரனாகி, வண் டாழஞ்சேரிக்குப் புகழ் சேர்த்து விட்டாய் பராந்தகா" என்றார் குரலில் உணர்ச்சி பொங்க.

"தலைவரே, இவர்களை என்ன செய்யலாம்?" - கேட்டான் பகதத்தன்.

"பராந்தகா, ஏன் இன்னும் இவர்களை விட்டு வைத்திருக்கிறாய்?" ஊர்த் தலைவரின் குரலில் கடுமை தொனித்தது. சுற்றி நின்ற மக்கள் மீண்டும் கூச்சலிடத் தொடங்கினார்கள்.

"சற்றுப் பொறுங்கள்" - அனைவரையும் கையமர்த்திய பராந்தகன், வீரர் தலை வனை நெருங்கினான். அவனைப் பிணைத்து நின்றவர்களிடமிருந்து விடு வித்து, ஊர்த் தலைவர் முன்பாக நிறுத்தி யவன். "தலைவரே, தவறான தலைமையும், கட்டுப்பாடற்ற சந்தர்ப்பங்களும், இவர்களை கொள்ளையராக்கி விட்டன. இவர்களும் மனிதர்கள்தாம். இவர்களை காஞ்சிக்கு வந்து சேருமாறு இவர்களின் மகாராணி உத்தரவு பிறப்பித்திருக் கிறார்கள். பெரும் போரும் இவர்களுக் காகக் காத்திருக்கிறது. வீரர்களாக முன்பு இருந்தவர்கள், போர்க்களத்தில் வீர மரணம் அடையும் வாய்ப்பை நாம் பறிக்க வேண்டாம். ஆனால்..."

"ஆனால் என்ன பராந்தகா?"

"இவர்கள் இதுவரை கொள்ளையிட்ட அத்தனை பொருள்களையும், பொற்காசுகளையும், திருப்பியளிக்க வேண்டும். காவிரிக் கரையில் அத்தனையும் மூட்டைகளாகவும், பேழைகளாகவும் கொண்டு செல்லத் தயாராகக் காத்திருக்கின்றன. இதற்கு ஒப்புக் கொள்வதானால், இவர்களை உயிரோடு விட்டுவிடலாம். மறுப்பதானால், மக்கள் விரும்பும் தண்டனையை இப்போதே நிறைவேற்றி விடலாம்."

வீரர் தலைவன் சுற்றியிருந்த மக்களின் முகத்தில் தெரிந்த கொலைக் குறியைக் கண்டான். பராந்தகன் கூறுவதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியேதும் புலப்படவில்லை அவனுக்கு. எனினும்



இறுதியாகக் கேள்வியொன்றும் கேட்டான்.

"அடே பராந்தகா, எங்களுக்கு ஏதேனும் நேரிட்டால், பின்பு காஞ்சியிலிருந்து வீரர்கள் இங்கு வந்து குடந்தை நகரையே சூறையாடி விடுவார்கள். அப்போது நீயும் இந்த மூடர்களும் என்ன செய்வீர்கள்?"

சுற்றி நின்றவர்களின் உக்கிரம் அதிகரித்தது. "கொல்லுங்கள். கொல்லுங்கள்" என்ற கூச்சல் பலமாக எழுந்தது.

"வீரர் தலைவரே, உங்களை காஞ்சிக்கு அழைத்திருப்பதே அங்கிருக்கும் வீரர்களுடன் சேர்த்து ராஷ்டிரகூடத்துக்கு அனுப்பத்தான். நான் கூறியபடி அங்கு போரும் காத்திருக்கிறது உமக்கு. வீணான வாக்குவாதத்தில் ஈடுபடாமல் உயிரைக் காத்துக் கொள்ளுங்கள்" என்றான் பராந்தகன்.

திகைப்பும் அச்சமும் முகத்தில் வழிய, வீரர் தலைவன் அனைத்தையும் திருப்பியளிக்க ஒப்புக் கொண்டான்.

சுற்றி நின்ற மக்களில் இளைஞர்களைத் திரட்டிய பராந்தகன், வீரர் தலைவனை காவிரியின் இக் கரையிலேயே நிறுத்தி, அனைத்துப் பொருள்களும் வந்து சேர்ந்த பின்பு விடுவிக்கவும், எச்சரிக்கையுடன் இருக்கவும் கூறி, வீரர் தலைவனையும், மற்ற ராஷ்டிரகூடர்களையும் ஆயுதங்களின்றி அனுப்பி வைத்தான்.

அவர்கள் அகன்றதும் பராந்தகனை நெருங்கிய பகதத்தன் "ஏன் அவர்களை உயிருடன் செல்ல அனுமதித்தாய் பராந்தகா?" என்றான் வியப்புடன். ஊர்த் தலைவரின் விழிகளிலும் அதே கேள்வி தெரிந்தது.

"மாற்றம் என்பது நியதியானால் அதன் விளைவுகளும் நியதிதான் என்றாயே பகதத்தா. என்னிடம் மாற்றம் ஏற்பட ஆரம்பம் செய்து வைத்தவன் இந்த வீரர் தலைவன். அன்று இவன் கையில் நான் சிக்காதிருந்தால் இன்னும் வண்டாழஞ்சேரியின் வயல்வெளியில்தான் நான் கிடந்திருப்பேன். எனவேதான் அவனுக்கு ஒரு வாய்ப்பை அளிக்க எண்ணினேன். நடக்கப் போகும் போரில் வீரனாகப் போராடி மடியவோ, உயிர் பிழைக்கவோ அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா?"

ஊர்த் தலைவர் பராந்தகனைப் பார்த்த பார்வையில் பெருமிதம் தெரிந்தது.

"சரி, இருவரும் களைத்திருக்கிறீர்கள். வாருங்கள். நமது இல்லத்தில் உணவருந்திவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளலாம்" என்றவர், இருவரையும் அழைத்துக் கொண்டு நடந்தார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு சோழ நாட்டின் சுவையான உணவு கிடைத்ததால் சுவைத்து அருந்தினார்கள் இருவரும். பின்பு சுகமான பஞ்சணைகளும் கிடைத்ததால், நிம்மதியாகப் படுத்து உறங்கவும் தொடங்கினார்கள்.

கதிரவன் உதித்து ஒரு ஜாமம் கழித்தே மீண்டும் கண் விழித்த பராந்தகன், பக்கத்தில் பகதத்தன் இல்லாததைக் கண்டு திகைத்தான். எழுந்து சாளரத்தருகே வந்து வெளியே நோக்கியவனின் திகைப்பு இன்னும் பல மடங்கு உயர்ந்தது.

குடந்தை நகர் அடியோடு மாறிப் போய்க் கிடந்தது.

(தொடரும்)

ஆன்மிகம் என்பது...













- ஆன்மிகம் என்பது ஆன்ம சாதனை - *இளையராஜா* • இன்றைய ஆ
கொள்ளுதல் - *கமல்* • அலைபாயும் மனத்தை நெறி படுத்தும் சா
- நமக்குள்ளே இருக்கும் நல்ல விஷயம்... - *கிருஷ்*
- தன்னலம் துறத்தல், பிறர்நலம் பேணுதல் - *பெரியார் த*
நம்பிக்கை - *நக்கீரன் கோபால்* • லொள்ளு ஸ்டைல்! -
கடந்த அன்பு - *ஃபாத்திமா பாபு* • உண்மையை நே
- மனிதனை மனிதனாக - உயர்ந்த மனிதனா





ங்ம், முகமூடி! - ராஜேஷ்குமார் ● எல்லா உயிரிடத்தும் தூய அன்பு

- த்ரிஷா ● விட்டு விடுதலையாகி நின்றல் - மனுஷ்யபுத்திரன்

ஸ்வீட்ஸ் முரளி ● தன்னையே அறிதல் - ஓவியர் மருது

● ஆளை விடுங்கப்பா! - பூஜா ● மனசு சம்பந்தப்பட்ட

பாபு ● ஆக்கப்பூர்வமான சக்தி - ரமேஷ் பிரபா ● அளவு

ப தேடல் - ருத்ரன் ● மன அமைதி - தேவதர்ஷினி

தெய்வமாக வாழ உதவுவது - மைத்ரேயன்.

— அ.மு


மார்ச் 2005 இதழ்
மங்கையர் மலர்
இப்போது விற்பனையில்...
சாதனைப் பெண்கள் மலர்
இரட்டைச் சிறப்பிதழ்
வீடு முதல் கம்ப்யூட்டர் வரை...
பரிசோ பரிசு!
வெள்ளி விழா கொண்டாட்டம்
ஸ்... ஆ...! 25 வகை ஊறுகாய்
- சுவைக்க, பாதுகாக்க!
mangayarmalar@kalkiweekly.com www.mangayarmalaronline.com

உடுப்பியில் ஒரு குழப்பம்!



கர்நாடகாவின் புகழ்பெற்ற உடுப்பி கிருஷ்ணர் கோயில், தற்போது சர்ச்சையில் சிக்கி படாத பாடுபட்டு வருகிறது. இதில் அரசியல்வாதிகள் ஆதாயம் காண மூக்கை நுழைத்திருப்பதுதான், பிரச்னையில் திருப்பத்தை உண்டாக்கி இருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில், லிங்காயத்து - வொக்கலிகா என்ற இரண்டு சமூகத்தினரை அடுத்து, மூன்றாவது மிகப்பெரிய சமூகம் குருபா சமூகம். இச்சமூகத்தைச் சேர்ந்த கவிஞர், ஞானி கனகதாசர். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு உடுப்பி கிருஷ்ணரை தரிசிக்க வந்த போது, ஜாதி காரணமாக அவர் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. பின்வாசல் வழியாக, நின்ற இடத்திலிருந்தே கிருஷ்ணரை தரிசித்திருக்கிறார். அவருக்கு தரிசனம் தருவதற்காகவே கிருஷ்ணர் திரும்பி நின்றாராம். ஞானி கனகதாசர் நின்று தரிசித்த இடத்தில் ஒரு கோபுரம் கட்டியிருந்தார்கள்.

அந்த கோபுரத்தை 'கனக கோபுரம்' என்றுதான் அழைக்கிறார்கள். அது மிகவும் சிதிலமடைந்துவிட்டது என்று கருதிய உடுப்பி கிருஷ்ணர் கோயிலை நிர்வகித்து வரும் அஷ்டா மடம், இடித்துவிட்டு, புதிதாக கோபுரத்தைக் கட்டி முடித்துவிட்டது.

'இடித்தது தவறு; எங்கள் சமூகத்தினரின் உணர்ச்சிகளைப் புண்படுத்திவிட்டனர்' என்று குருபா சமூகத்தவர் பொங்கி எழுந்திருக்கின்றனர். கனக கோபுரம் கட்டி தொண்ணூறு வருடங்கள்தாம் ஆகின்றன என்றும், அதற்கும் ஞானி கனகதாசருக்கும் சம்பந்தம் ஏதுமில்லை என்றும் மடத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். மடத்தை ஆதரித்து பா.ஜ.க.வும், குருபா சமூகத்தை ஆதரித்து மதச்சார்பற்ற ஜனதா தளமும், காங்கிரசும் நிற்கின்றன. கர்நாடகாவின் துணை முதலமைச்சரான ம.ஜனதா தள சித்தராமையா இந்த அணிக்குத் தலைமை ஏற்றிருக்கிறார்!

தமது மகன்களைத் தூக்கி வைத்து, கட்சியில் தம்மை ஓரம் கட்டிக்கொண்டிருந்த தேவகௌடாவுக்கு, தமக்கு இன்னும் கர்நாடக அரசியலில் பெருத்த செல்வாக்கிருக்கிறது என்று நிரூபிக்கக் கிடைத்த வாய்ப்பாக சித்தராமய்யா இதனை நினைக்கிறார். கூடவே தம்மைக் கிள்ளுக்கீரையாக நினைத்துவிட வேண்டாம் என்று காங்கிரசுக்கும் - பா.ஜ.க.வுக்கும் ஒரு நெத்தியடி கொடுத்த மகிழ்ச்சி.

பாவம், முதல்வர் தரம்சிங்தான் தர்மசங்கடத்தில் சிக்கித் தவிக்கிறார். ஹுப்ளி ஈத்கா மைதானப் பிரச்னை போல, இதுவும் பூதாகாரமாகிவிடக் கூடாதே என்கிற கவலை அவருக்கு.

"இருக்கிற அன்றாடப் பிரச்னைகளை எல்லாம் விட்டுவிட்டு, இப்படி வேண்டாத விவகாரங்களில் ஆட்சியாளர்கள் நேரத்தைச் செலவிடுகிறார்களே" என்று உடுப்பி வாசிகள் கவலைப்படுகின்றனர்.

- சாருகேசி

அந்த நாள் ஞாபகம் - 18

திரையுலக நினைவுகள்

இராம. அரங்கண்ணல் மற்றும் இரண்டு நண்பர்களோடு சேர்ந்து நாங்கள் எடுத்த படம் 'பச்சைவிளக்கு'.

சிவாஜி, என்ஜின் டிரைவர். நாகேஷ் அவரது நண்பர் என்று ஒரு அடிப் படையை வைத்து, அதற்கேற்றபடி கதையை உருவாக்கினோம்.

படம் பாதியளவுக்கு வளர்ந்துவிட்டது. ஆனால் படத்துக்குப் பெயர் முடிவாகாமலேயே இருந்தது.

நான் வழக்கமாக ஸ்டுடியோவுக்குக் காரில் வரும்போது, தி.நகரில் கிருஷ்ண



● 'ஒளிமயமான எதிர்காலம்'

கான சபா அருகே சின்ன ரெயில்வே கேட்டைத் தாண்டிதான் வர வேண்டும். பலமுறை பார்த்த இடம்தான் அது என்றாலும், ஒருநாள் திடீரென யோசனை ஒன்று தோன்றியது. என்ஜின் டிரைவரை மையமாக வைத்து எடுக்கப் போகும் படத்துக்கு, என்ன பெயர் என்று முடிவாகாமல் இருந்த நிலையில், ரசிகர்களுக்கு 'சஜெஸ்டிவ்'வாக படம் பற்றி சொல்லலாம் என்று எனக்கு சட்டென்று தோன்றிய யோசனையைச் செயல்படுத்தினேன்.

ரெயில்வே கேட் அருகில் சுவரில் மூன்று 'பேனர்'களை வாடகைக்கு எடுத்து, அவற்றில் 'சிவாஜி நடிக்கும்' என்று போட்டு வெறுமனே ஒரு பச்சை விளக்கின் படத்தை - சிக்னலில் பச்சை விழுமே அது போல, அல்லது கார்டு கையில்

வைத்திருப்பாரே அது போன்ற விளக்கொன்றின் படத்தை வரையச் செய்து, அதன் கீழ் 'வருகிறது' என்ற வார்த்தைகளுடன் விளம்பரப் படுத்தினேன்.

அதை நிறையப் பேர் பார்த்தார்கள். 'சிவாஜி படம் ஒன்று வரப் போகிறது. அது ரயில் சம்பந்தப் பட்ட படம்' என்ற



ஷ்டு!”

அளவில், அதைப் பார்த்தவர்கள் பேசிக் கொண்டார்கள். அது அப்படியே பரவியது.

படத்துக்கான பெயர் பற்றிய விவாதத்தில் நாங்கள் ஈடுபட்டபோது, பல்வேறு பெயர்கள் அலசப்பட்டன. ஆனால் டைரக்டர் பீம்சிங் போன்றவர்கள் 'இதில் அலசுவதற்கு என்ன இருக்கிறது? அதுதான் நீங்கள் பச்சை விளக்கைப் போட்டு 'வருகிறது... வருகிறது...' என்று பேச வைத்து விட்டீர்களே. படத்தின் பெயர் பச்சை விளக்குதான். வேறென்ன?" என்று முடிவுக்கு வர 'பச்சை விளக்கு' என்ற பெயர் அப்படிதான் அந்தப் படத்துக்கு வைக்கப்பட்டது.

பலருக்குத் தெரியாத ஒரு தகவலை இங்கே சொல்ல வேண்டும். 'பச்சை விளக்கு' படம் எட்டாயிரம் அடி வரை வளர்ந்திருந்த நிலையில், அப்பச்சி அதுவரை போட்டுப் பார்த்தபோது அவருக்குத் திருப்தியாக இல்லை. "படத்தை அப்படியே ஸ்க்ராப் பண்ணிடுங்கப்பா. ஃப்ரெஷ்ஷா கதை வொர்க் பண்ணுங்க. அப்பதான் சரியா வரும்" என்றார்.

அப்படியே செய்தோம். ராஜன், புஷ்பலதா கேரக்டர்களைச் சேர்த்து ரீவொர்க் செய்தபின், முதலிலிருந்து எடுத்தோம்.

'ஒளிமயமான எதிர்காலம்', 'கேள்வி பிறந்தது அன்று' போன்ற ஹிட் பாடல்களை கண்ணதாசன் - எம்.எஸ்.வியின் காம்பினேஷன் தர, படம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

சர்வர் சுந்தரம்

'சர்வர் சுந்தரம்' நாடகத்தைப் பார்த்ததும், அதைப் படமாக எடுக்க வேண்டும் என்று அப்பச்சி விரும்பினார். ஆனால் அதற்கு முன்பாக இயக்குனர்கள் கிருஷ்ணன் பஞ்சு அந்த நாடகத்தை ஒருமுறை பார்த்து, மேடையில் போய் 'இதை நாங்கள் படமாக எடுக்கப் போகிறோம்' என்று அறிவிப்பும் செய்து, கே. பாலசந்தரிடம் ஒரு தொகையை, மேடையிலேயே அட்வான்ஸாகக் கொடுத்து விட்டார்கள். எனவே தனியாக ஏவி.எம். நிறுவனத்தில் அந்தக் கதையைப் படமாக எடுக்க முடியாமல், கிருஷ்ணன் - பஞ்சு பார்ட்னர் ஷிப்பில் எடுத்தோம்.

ஏவி.எம். சரவணன்

இந்தப் படத்தைப் பற்றி நினைக்கும்போது, சில சுவையான சம்பவங்கள் நினைவுக்கு

வருகின்றன. படத்தின் விளம்பரத்துக்காக ஒரு ஸ்டில் எடுத்தோம். அதில் நாகேஷின் வலது உள்ளங்கையின் மேல் ஆறு கப் அண்ட் சாஸர்கள் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்டிருக்கும். அதை அவர் தனக்கே உரிய முக பாவத்தோடு பாலன்ஸ் செய்து கொண்டிருப்பது போல் விளம்பர ஸ்டில் எடுதோம்.

ஆனால் படத்தில் அப்படியொரு காட்சியே எடுக்கப்படவில்லை. கப் அண்ட் சாஸர்களை அடுக்கி ஏந்தியபடி எந்தக் காட்சியும் இல்லை. இதை யாரும் கவனிக்கவும் இல்லை. படம் முடிந்து போட்டுப் பார்த்தபோது, "என்னப்பா இது... விளம்பர ஸ்டில்லில் நாகேஷ் கையில் இருப்பது போல் கப் அண்ட் சாஸர், காட்சி படத்தில் இல்லி யேப்பா'' என்றார். "முதல்ல அப்படி ஒரு ஸீன் எடுங்க'' என்று உத்தரவிட்டார். பின்னர்தான் அதுபோல எடுக்கப்பட்டு டைட்டிலின்போது சேர்க்கப்பட்டது.



* மெசேஜ் க்யூ

இப்போதெல்லாம் விளம்பர ஸ்டில்லில் இருப்பது போல் படத்தில் இருக்கிறதா என்பது பற்றி, ரசிகர்களும் கவலைப் படுவதில்லை, தயாரிப்பாளர், இயக்குநர், நடிக நடிகையர் யாருமே கவலைப்படுவதில்லை. விளம்பரம் தனி, படம் தனி போன்றதொரு எண்ணம். ஆனால் அப்பச்சி அன்றே இது போன்றவற்றில் கவனம் செலுத்தினார்.

'சர்வர் சுந்தரம்' படத்தில் சினிமாக் காட்சிகளில் மழை எப்படிப் பெய்கிறது, பிளேபேக் எப்படி ஒலிப்பதிவு செய்யப் படுகிறது, ஷூட்டிங் எப்படி நடக்கிறது, பேக் புரொஜக்ஷன் என்பது என்ன என்றெல்லாம், கதையோடு ஒட்டிய காட்சிகளாகக் காட்டப்பட்டது அப்போது பெரிய பரபரப்பாகப் பேசப்பட்டன. இப்படிக் காட்டலாம் என்று அப்பச்சிதான் யோசனை தந்தார்.

படம் பார்த்த சிலர்! 'என்ன இப்படி சினிமாவின் சில நெளிவு சுளிவுகளை அப்பட்டமாக காட்டி விட்டீர்கள். நாங்கள் ஆஹா என்று ஆச்சரியப்படும் காட்சிகள் எல்லாம் இப்படித்தான் எடுக்கப் படுகின்றன என்பது தெரிந்து விட்டால்' 'சப்'பென்று ஆகி விடாதா' என்றுகூட கேட்டு கடிதங்கள் எழுதினார்கள்.

'சர்வர் சுந்தரத்'தில் இன்னொரு முக்கியத்துவம் உண்டு. எல்லாவற்றுக்கும் 'க்யூ' நிற்பது பற்றி நகைச்சுவையும், அதே சமயம் மெஸேஜும் கலந்த ஒரு பாடல் அதில் வரும். ரொம்பவும் பாபுலரான பாட்டு அது. முக்கியமாக குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விழிப் புணர்வுச் செய்திகள் அந்தப் பாட்டில் இடம் பெற்றிருந்தன. அப்போது சென்னை மாநகராட்சியின் ஸ்பெஷல் ஆபீஸராக டி.வி. அந்தோணி இருந்தார். அவரது முயற்சியின் பேரில் 'ஃபேமிலி பிளானிங் கவுன்சில் ஆஃப் மெட்ராஸ்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. டி.வி.எஸ். ரத்தினம் தலைவராக இருந்தார். துணைத்தலைவராக நான் இருந்தேன். குடும்பக் கட்டுப்பாடு செய்தியை மக்களிடம் கொண்டு போக வேண்டும் என்று பல முயற்சிகள் மேற்கொள்ளப்

பட்டன. ஐ.நா. சபையுடன் தொடர்பு கொண்டிருந்த 'கேர்' அமைப்புடன் எங்கள் கவுன்சிலின் செயல்பாடுகளை இணைத்து, சில திட்டங்களை டிவி. அந்தோணி வகுத்துத் தந்தார். 'சர்வர் சுந்தரத்'தில் இடம் பெற்ற அந்தப் பாடல் காட்சியை ஆறு எம்.எம்.மில் பிரதியெடுத்து, பல பிரிண்ட்கள் போட்டு, அவை கிராமங்களில் திரையிடப்பட்டன. அரசு நடத்தும் குடும்பக் கட்டுப்பாடு விழிப்புணர்வுக் கூட்டங்களில் முதலில் இந்த பாடல் காட்சியைப் போட்டதால் கூட்டம் சேர்ந்தது. பின்னர் அரசின் நிகழ்ச்சிகள் நடைபெறும். சமீபத்தில்கூட அந்தப் பாடல் காட்சியின் பிரதிகளைப் போட்டுத் தந்தோம். நகைச்சுவையோடு, நல்ல முயற்சி ஒன்றுக்கு நாமும் துணையிருந்தோம் என்ற திருப்தி ஏற்பட்டது.



• 'சர்வர் சுந்தரம்'

படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவில் வழங்கப்பட்ட கேடயம், ஒரு கோப்பையின் வடிவில் அமைக்கப்பட்டது. அதில், மேலே கும்மிழ் இருக்குமிடத்தில் அதற்குப் பதிலாக ஒரு கப் அண்ட் சாஸரைக் கவிழ்த்து வைத்து வித்தியாசமாக வடிவமைத்தோம்.

'சர்வர் சுந்தரம்' படம் தமிழில் வெற்றி பெற்றதைப் போலவே, 'மை சுந்தர் ஹூம்' என்று ஹிந்தியில் வெளியாகி, அதிலும் பெரு வெற்றியைப் பெற்றது.

இடையில் நெல்லூர் காந்தாராவ் என்பவர் எங்களிடமிருந்து உரிமை பெற்று, தெலுங்கில் 'சர்வர் சுந்தர'த்தை டப் செய்து வெளியிட்டார்.

இதை 'டப்' படமாக இல்லாமல் தெலுங்கில் தனியாக எடுக்க வேண்டும். அதில் தான் நடிக்க வேண்டும் என்ற ஆசை, நடிகர் ஏ. நாகேஸ்வர ராவுக்கு இருந்தது. ஆனால் நாங்கள் தெலுங்குக்குத் தந்த டப்பிங் உரிமையால் தனியாக தெலுங்கில் எடுக்க முடியாமல் போனது.

காக்கும் கரங்கள்

1965 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் தேதி வெளியான படம். இதில் பழனிச்சாமி என்ற இளைஞரை நாங்கள் தமிழ்த் திரையுலகத்துக்கு அறிமுகப்படுத்தினோம்.

பெரிய ரோலில் அவரைப் போட்டோம். அது அவருக்கு முதல் படம். எப்படியும் தமது முதல் படத்தில் ஸ்கோர் பண்ணி, ஒரு நிலையான இடத்துக்கு வழி செய்து கொள்ள வேண்டும் என்ற நியாயமான துடிப்பு அந்த இளைஞருக்கு இருந்தது. மேலும் தமது முதல் படமே ஏவி.எம் படமாக அமைந்ததில் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

ஆனால் அவருக்கு ஜோடியாக நடித்தவரின் நடிப்பு எடுபடாமல் போனதால், கடைசி நிமிடத்தில் பழனிச்சாமியின் ரோலை ரொம்பவும் வெட்டி சிறியதாக்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டு விட்டது.

என் அறையில் என்னைச் சந்தித்த அந்த இளைஞர் கண்ணீர் விட்டு அழுதே விட்டார். "அழாதீங்க தம்பி" என்று நான் தேற்றிய அதே நடிகர், இன்று சிறந்த குணசித்திர நடிகராக, எழுத்தாளராக, ஓவியராகத் திகழ்கிறார்... அவர்...

(தொடரும்)

சித்தர்கள் சக்தி பீடம்!



மருத்துவ ரீதியில் தனிச்சிறப்புப் பெற்றது வேப்ப மரம். சிறப்பாக மாரியம்மன் போன்ற தேவதைகளின் வடிவமாக வழிபாட்டுக்குரியது வேம்பு. இதுவே தல விருட்சப் பெருமை பெற்றால், எத்தனை உயர்வாயிருக்கும்!


மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலின் எதிரில் அமைந்துள்ள ஸ்ரீசக்கர மகாமேரு பதினெண் சித்தர் சக்தி பீடத்தின் தலவிருட்சமாகத் திகழ்வது, நான்கு புறமும் வேம்பும், நடுவில் நாகலிங்க மரமும்தாம். இவை ஐந்தும் பஞ்சபூதங்களின் ஆற்றலைக் கொண்டவை. வேம்பு நிலம், நீர், காற்று நெருப்பைக் குறிக்கும். நாகலிங்க மரம் ஆகாய சக்தி என்கிறார்கள். இந்த 'பஞ்ச பூத' சக்திகளை ஒன்பது முறை வலம் வருவதே, பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று தரிசித்த பலனைத் தரும்.

இந்த மகாமேரு, பச்சைக் கருங்கல்லால் உருவானது. ஆதிசங்கரர் வகுத்துக் கொடுத்த ஸ்ரீவித்யா முறைப்படி அற்புதமாக இதனை உருவாக்கியிருக்கிறார்கள். நாலரை அடி உயரத்தில், கருங்கல்லில் மகாமேருவை வடிவமைத்திருப்பது என்பது மிகவும் அரிய செயல்.

இந்த மகாமேருவும், பதினெண் சித்தர் பீடமும், மகான் சேஷாத்ரி ஸ்வாமிகள் அருளாணைப்படி, அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய இடத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

நூற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சி மாநகரில் அவதரித்து, ஜோதித் திருத்தலமான திரு அண்ணாமலையில், நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து ஜீவ சமாதியானவர் சேஷாத்ரி சுவாமிகள். அவருக்கு இங்கே தனி சந்நிதி அமைத்திருக்கிறார்கள். மகான் ஜீவசமாதியான திருவண்ணாமலை முதல், பல திருத்தலங்களிலிருந்தும் 'பிடிமண்' எடுத்து வந்து, பதினெண் சித்தர்களின் சந்நிதிகளில் லிங்கம் பிடித்து, அதன் மேல்

* ஆலய முகப்பு





* ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்





* பதினெண் சித்தர்களுக்கு பூஜை செய்கிறார் ஸ்தாபகர் கே.வி.எல்.என். சர்மா

திருவுருவங்களை இடம் பெறச் செய்திருக்கிறார்கள். இந்தப் பதினெண் சித்தர்களின் திருமேனிகளும், தனித்தனிப் பர்ணசாலைக் கருவறைகளில் இடம் பெற்றுள்ளன.

இக் கோவிலில் நவக்கிரக சந்நிதி கிடையாது. இந்தப் பதினெண் சித்தர்களே நவக்கிரகங்களின் ஆற்றலைப் பெற்று, கிரக தோஷங்களை நீக்குவதாக ஐதீகம். ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ குருவாயூரப்பன், ஸ்ரீ நாகராஜர், ஸ்ரீ கோதண்டராமன் தவிர, ஸ்ரீ பிருந்த துளசிக்கும் சந்நிதி உண்டு.

முதலில் ஸ்ரீ ஆதி சக்தி பீட மகாகணபதிக்கு முழுத்தேங்காயை வைத்துப் பிரார்த்தனை செய்து, வள்ளி தேவஸேனா சமேத சுப்ரமண்யனை தரிசித்து, படிப்படியாக மகாமேரு, குருவாயூரப்பன், ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் என்று தரிசனம் செய்து, அதன் பிறகுதான் பதினெண் சித்தர்களை தரிசிக்க வேண்டிய ஒழுங்குமுறை இங்கே.

மனம் அமைதியடைய இந்த ஸ்ரீ சக்ர மகாமேரு பதினெண் சித்தர் பீடம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

- சுப்ர. பாலன்



* ஸ்ரீ சக்கர மகாமேரு

முத்துச்சரம்!

அரவணைத்தல் எதற்காக?


அம்மா முத்தமிடுவதையும் அரவணைப்பதையும், சாதாரணமாக நினைக்கக் கூடாது. அது மனப் புண்ணை ஆற்றி மனத்தூய்மையைத் தரும். அதன் மூலம் பிராண சக்தியின் ஆற்றலில் சிறிதளவை குழந்தைகளுக்குத் தருகிறேன். இதன்மூலம் அம்மாவின் தன்னல மற்ற தூய அன்பை குழந்தைகள் அனுபவிக்க முடிகிறது. அம்மா யாரையாவது அணைத்துக் கொண்டு அன்பை வெளிப்படுத்தினால், அதன் விளைவாக அவரிடம் உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மிக சக்தி வெளிப்படுகிறது. இது இறுதியில் அவருக்கு ஆத்மானுபூதியை அளிக்கிறது.



- மாதா அமிர்தானந்தமயி

எதற்காக 'வளமுடன் வாழ்க' என்பதைத் தாரக மந்திரமாக வைத்திருக்கிறீர்கள்?

இவை வெறும் வார்த்தைகள் அல்ல. ஒவ்வொருவரும் உச்சரிக்க வேண்டிய மகத்தான சொற்கள்.



நாம் பிறரை வாழ்த்தும்போது மனதில் அமைதி நிலவும். பொறாமை, பொய், சூது, வாது எல்லாம் பொடிப் பொடியாகிவிடும். மற்றவரை வாழ்த்துகிற மனத்தில்தான் மகிழ்ச்சி குடியிருக்கும். அதனால்தான் எல்லோரையும் எப்போதுமே 'வாழ்க வளமுடன்' என்று வாயார வாழ்த்தச் சொல்கிறேன்.

இந்த வாழ்த்தும் வார்த்தைகள், ஒருவரிடமிருந்து வெளியே வரும்போது ஒரு நல்ல அதிர்வு அலையை வெளிப்படுத்துகிறது. அந்த அலை மற்றவரிடம் செல்லும்போது, இரண்டு பேருக்குமிடையே ஓர் இனிமையான உணர்வைத் தானாகவே ஏற்படுத்திவிடும்.

உச்சரிக்கும் வார்த்தையில் மக்களுக்கு இறை நம்பிக்கையும் சேரும்போது, பயனும் அதிகமாகவே இருக்கும்.

- வேதாத்ரி மகரிஷி

எல்லோருக்குமே எழும் சில சந்தேகங்களுக்கு பதிலளிக்கிறார்கள் வாழும் வழிகாட்டிகள்...

மரணத்துக்குப் பின் சொர்க்கத்துக்குப் போவேனா? நரகத்துக்குப் போவேனா?

இப்போது கிடைத்த வாழ்க்கையைச் சந்தோஷமாக வாழத் தெரியாமல் வருத்திக் கொள்பவர்கள்தான், எப்போதோ கிடைக்கப் போகும் சொர்க்கத்துக்காகக் கவலைப்படுவார்கள்.

எல்லாம் முடிந்த பிறகு எங்கே போகிறீர்கள் என்பதா முக்கியம்? அங்கே உள்ள விதிகளைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்? ஒரு வேளை அங்கே நரகமாக இருந்தால், இங்கே கிடைத்த சொர்க்கத்தையும் அல்லவா வாழாமல் கோட்டை விட்டிருப்பீர்கள்?

இங்கு கிடைக்கும் ஒவ்வொரு கணத்தையும், அன்போடும் பிரியத்தோடும் செலவு செய்யுங்கள். ஒவ்வொரு மூச்சையும், ஒவ்வொரு செயலையும் முழுமையான ஈடுபாட்டுடன் அனுபவித்து வாழுங்கள். **- ஜக்கி வாசுதேவ்**



அவரவர் தேசத்தில் உதித்த ஞானக் கருத்துக்களே ஒருவரை உயர்த்தப் போதுமானவை அல்லவா?

“உலகிலுள்ள எல்லா வேதாந்தக் கருத்துகளையும், தொன்மையான மரபுகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். முக்கியமாக மத குருமார்கள். உலகின் பல பாகங்களின் இசையையும் உணவு வகைகளையும் எந்தத் தயக்கமுமின்றி நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களே! இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் பீட்ஸாக்களை உண்ணலாமென்பதோ, ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள்தான் பீத்தோவனை ரசிக்க வேண்டுமென்பதோ, இந்தியராக இருந்தால்தான் சிதார் இசையை விரும்ப வேண்டுமென்பதோ இல்லையே. பின் ஏன் ஞானத்தை அடைவதில் மட்டும் குறுகிய எல்லைகள்? என்று இந்த மொத்த உலகமுமே உங்கள் வீடு என்றும், ஆகாயமே உங்கள் வீட்டின் கூரை என்றும், நினைக்கிறீர்களோ, அன்றுதான் இயல்பான நிலையை அடைந்து விட்டதாகப் பொருள்!

- ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்



தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்

கலைகல தொடர்

8

மாம்

வெகு நாட்களுக்குப் பிறகு, முகம் முழுக்கச் சிரிப்பாய் வளைய வருகிறாள் ப்ரியம்வதா. இருக்காதா பின்னே?

'இந்தியாவிலிருந்து அவள் அம்மா வரப் போகிறாள்...'

எத்தனை பெரிய விஷயம்?

கிஷோர்தான் அன்றைக்கு ஊரில் இருக்க மாட்டான். வார நாட்களில் அவன்தான் 'அட்லாண்டா'வில் இருக்கிறானே... வெள்ளி இரவுதான் மாமியாரைப் பார்க்க முடியும்..

தன் அம்மாவை 'ஏர்போர்ட்'டிலிருந்து அழைத்து வர, கணவன் இல்லையே என்கிற வருத்தம் இருந்தாலும், அதை பெரிது படுத்தவில்லை ப்ரியா.

அம்மா வரப் போகிற சந்தோஷத்தில், அவள் வழக்கமாக முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிற பல விஷயங்களையும் பொருட்படுத்தாது மன்னித்திருந்தாள்...

நாத்தனார் குழந்தைகள் கார்ப்பெட்டில் பாதாம் கீரைக் கொட்டி மெழுகிய தையோ, பல்பீர்சிங் தன் மனசுக்குள் தன்னை கிஷோர் குமார் என்று நினைத்துக் கொண்டு தகரடப்பா குரலில் பாடுவதையோ, மாமியார் ராஷ்மி - பாத்திரம் கழுவும் 'டிஷ் வாஷ்'ல் மறந்துபோய் காய்கறிக் குப்பைகளைக் கொட்டி மூடியாததையோ, அவள் கணவன் கிஷோர் அட்லாண்டா கிளம்பு முன், வழக்கமாக அவளுக்குத் தரும் முத்தத்தைத் தர மறந்ததையோ எதையுமே பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. தன் அறைக்குப் பக்கத்திலேயே அம்மாவுக்கும் அறையை தயார் செய்தாள்.

அம்மாவுக்கு 'ஹோம் ஸிக்' வந்து விடாமல் இருக்க, அறையை இந்திய முறையில் அலங்கரித்திருந்தாள். சுவரில் ஒரு பக்கம் தஞ்சாவூர் படம். இன்னொரு



ஃப்ரம் இண்டியா

அனுராதா ரமணன்

பக்கம் - அப்பாவுடன் அம்மா சேர்ந்திருக்கும் போட்டோ.

ப்ரியாவின் கல்யாணத்தின் போது எடுத்ததுதான். அப்பாவையும் அம்மாவையும் மட்டும் ஃப்ளோ அப் செய்திருந்தாள். அம்மாவின் வெட்கம் கலந்த சிரிப்பு யதார்த்தமாக இருந்தது. அப்பா, சம்பந்தியை முறைக்கிற பாங்கும் படு இயல்பாக...

'என் பெண்டாட்டிய என்னடா பார்வை... எழுந்து வந்தேன்னா - முழி ரெண்டையும் தோண்டி, உப்பு காரம் போட்டு, மாவடு ஜாடியிலப் போட்டுக் குலுக்கிடுவேன்; குலுக்கி.'

- இத்தனையையும் அந்தப் பார்வை சொன்னது.

ப்ரியாவுக்கு தன் அப்பாவின் இந்த 'பொஸஸிவ்' பிடிக்கும். அடிக்கடி கிஷோரிடம் சொல்வாள்:

"பாரு, எங்கப்பா, பெண்டாட்டிய விட்டு அந்தண்டை இந்தண்டை நகர மாட்டார். அவரோட அனுமதி இல்லாம எந்த ஆம்பிளையும் அம்மாகிட்ட பேசிட முடியாது."

"இது ரொம்பக் கொடுமையில்லே? சர்வாதிகாரி உங்க அப்பா."

"தப்பு. அம்மா மேல அவ்வளவு அக்கறை. உங்க அப்பா மாதிரி, பெண்டாட்டியக் கண்டுக்காம விடற சுபாவமில்லே..."





எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்ட வேண்டும். துன்பப்படுவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். இதுவே தூய்மையான பக்தி.

- ஸ்ரீ மகாவீரர்

"எங்க அப்பாவுக்கு அம்மா மேல அத்தனை நம்பிக்கை."

"ஒண்ணும் கிடையாது. தன்னைத் தவிர - வேற யாரும் தன் பெண்டாட்டிய நெருங்கிட முடியாதுங்கற நினைப்பாகவும் இருக்கலாம்; இல்லே, 'போனாப் போகட்டும்'கற அலட்சியமாகவும் இருக்கலாம். எது எப்படியோ, எங்கப்பா, எங்கம்மாவை கவனிச்சுக்கிற மாதிரி யாரும் கவனிச்சுக்க முடியாது..."

சுகந்தாவுக்காக அந்த அறைக்குள் இன்னும் என்னவெல்லாமோ செய்திருந்தாள். தொலைக்காட்சியில் தமிழ் சேனல், பகலில் சிறு தூக்கம் போட பத்தமடைப் பாய் - தலைக்குயரக் கட்டை (சுகந்தா பகலில் படுக்கையில் படுக்க மாட்டாள். இதற்காகவே பாயும், தலை வைத்துப் படுக்க சிறு மணைப் பலகையும் பரமு ஏற்பாடு செய்திருந்தார். அந்த மணைப் பலகையைக் கூட தானே, தன் கையால் தான் செய்தார். அடிக்கொரு தரம் 'சுகீ... உசரம் போதுமா... பார்த்துச் சொல்லேன். அப்புறம் கழுத்தை வலிக்கப் போறது..' இப்படிக் கொஞ்சிக் கொஞ்சி அவர் செய்து தந்ததை ப்ரியா மறக்கவே மாட்டாள்.)

தவிர வெங்கடேச சுப்ரபாதம், கந்த சஷ்டி கவசத்திலிருந்து, கண்ணதாசன் பாடல்கள் வரையில் அம்மாவுக்குப் பிடித்த கேசட்டுகள் –

'தன்னைத் தொந்திரவு செய்யாத வரை நல்லது' என்று நினைப்பவன் கிஷோர்.

பல்பீர்சிங், மகன் ஊரில் இல்லாவிட்டால், சம்பந்தி அம்மாளை தான் போய் காரில் அழைத்து வருவதாகச் சொல்லி விட்டார்.

அதுதான் கொஞ்சம் உதைத்தது ப்ரியாவுக்கு.

"உங்க அப்பா காரை எடுத்து ஒரு மாமாங்கத்துக்கு மேல ஆறது. நானே டிரைவ் பண்ணிட்டுப் போய் அழைச்சிட்டு வந்துடறேனே..."

"நோ, நோ... அப்பா இந்த அளவுக்கு இறங்கி வந்திருக்கறது எனக்கே ஆச்சர்யமா இருக்கு. மரியாதை தெரிஞ்சு, என்னமாக கேட்கறாரு... எனக்கு புல்லரிக்குது..."

ராஷ்மியும் ரெடி.

அவளை வேண்டாமென ஒதுக்கவே முடியவில்லை. சம்பந்தி அம்மாளை வரவேற்பதற்காகவே, மூன்று நாட்களாய் மேக்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்.

பல்பீர்சிங், விடியற்காலையிலேயே உட்கார்ந்து, தனது தாடி, மீசைக்கு சிசுருஷை செய்யத் தொடங்கிவிட்டார். அது, அத்தனை சீக்கிரத்தில் முடிகிற சமாச்சாரமில்லை. ஏதேதோ எண்ணெய், வெண்ணெய், மெழுகு போன்ற வஸ்து எல்லாம் தடவி, திரிதிரியாய் முறுக்கி, பின்பு எல்லாவற்றையும் சேர்த்து, தாடையோடு சேர்த்து அமுக்கி, அதற்கு மேலே கறுப்புத் துணியால் கடிவாளம் போட்டு...

யாராவது விசேஷமான விருந்தினர் வீட்டுக்கு வருவதாக இருந்தாலோ, அல்லது பார்ட்டி, டின்னருக்குப் போவதாக இருந்தாலோ தவிர, தாடியைத் தொட மாட்டார் மனிதர். அது போலத்தான் தலைப்பாகையும்.

ப்ரியாவுக்குக் கவலையாக இருந்தது.

"இந்தத் தலைப்பாவை எப்ப கட்டி, இவர் எப்ப கிளம்பறது... அதுக்குள் ஃப்ளைட் வந்துட்டா என்ன பண்ணறது..."

இதை ஓரிரு முறை நாசூக்காகச் சொல்லியும் விட்டாள்.

ராஷ்மி அலட்சியமாய் தோள்பட்டையைக் குலுக்கிக் கொண்டு, பெருமிதமாய் சொன்னாள்.

"உஷ்... அவரை யாருன்னு நினைச்சே? ரிடையர்டு கர்னலாக்கும். அமிர்த சரஸ்லே நாங்க இருந்தப்ப, ஆர்மி ஆபீஸ் சுவர் கடியாரத்தையே, கர்னல் வர்ற நேரத்தைப் பார்த்துத்தான் கரெக்ட் பண்ணுவாங்க...."

போதாக்குறைக்கு பல்பீர் சிங் சாப்பிட உட்கார்ந்தால், அத்தனை கலபத்தில் எழுந்திருக்க மாட்டார். ரொட்டியைச் சுட்டுச் சுட்டு அவர் தட்டில் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பேசிக் கொண்டே, பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களின் தொடையில் 'சுளீர் சுளீ'ரென அறைந்து கொண்டே சாப்பிடுவார்.

இன்றைக்குப் பார்த்து, தான் எந்தக் காலத்திலோ, தன் மாமியாரை அழைத்து வர, ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ற கதையை வேறு ஆரம்பித்து விட்டார்.

"ஸ்டேஷன்லே ரொம்ப அழகா ஒரு பொம்பிளை இருந்தா... அவதான் எங்க மாமியாரா இருக்கணும்னு நினைச்சு, ஹா... ஹா... ஹா... ராஷ்மீ... கேரட் ஸாலட் போடு... அந்தப் பொம்பிளை என்னோட ஆர்மி டிரஸ்ஸைப் பார்த்து பயந்து போய்... ஹா ஹா... பேட்டீ... அந்தத் தயிர்லே ரெண்டு ஸ்பூன் ஷுகர் போட்டு கொடு..."

இப்படியாக சாப்பிட்டு, டீ குடித்து, இன்னொரு முறை மீசையை சீப்பால் ஒதுக்கி, காரிலேறி உட்கார்ந்த பிறகு, மறுபடியும் வீட்டுக்குள் போய் 'டிரைவிங் லைசென்ஸ்'ஸைத் தேடி எடுத்து...

"ஹா...ஹ்...ஹா... அதெல்லாம் பக்காவா இருக்கணும்... ஆர்மியில இருந்தவன் தப்பு செஞ்சான்னு பேரே வரக் கூடாது..."

ப்ரியா பறவாய் பறந்தாள். பல்பீர், தன் காதல் மனைவியை காரில் திணிக்க முடியாமல் திணித்து விட்டு, காரைக் கிளப்பினார்.

'அம்மாவுக்கும் பெட்டி படுக்கைகளுக்கும் இடம் இருக்குமோ...'

அவளது கவலை புரியாமல், என்னவோ பழைய இந்திப்பட ஜோடி போல குலாவியபடி, பல்பீரும் ராஷ்மியும்...

நல்ல வேளை!

அவர்கள் போய்ச் சேர்ந்த போது தான் - சுகந்தா வரும் விமானம் வந்து சேர்ந்திருந்தது...

பல்பீர் பல் குத்தும் குச்சியால் பல்லைக் குடைந்தபடி, அங்குமிங்கும் நடக்க -

ராஷ்மி அங்கிருந்த 'காபி ஷாப்' பக்கம் உடம்பு குலுங்க ஓடினாள்...

ப்ரியம்வதா - வெளிவரும் கும்பலை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அது ஆகும், இன்னும் ஒரு மணி நேரம்... பாகேஜ் வந்து, செக்கிங் முடிஞ்சு வர வேண்டாமா...?"

இதைச் சொல்லி விட்டு திரும்பிய பல்பீர், வேறொரு சிங் கிழவரைப் பார்த்ததும் ஆனந்தத்துடன் கட்டித்தழுவினார்.

பின் அவரையும் அழைத்துக் கொண்டு, ராஷ்மி சென்ற அந்த 'காபி ஷாப்' பக்கமாய் நடையைக் கட்டினார்.

"இதோ, இப்ப வந்துடறேன்..."

ப்ரியாவுக்கு எதுவும் காதில் ஏறவேயில்லை. ஐம்புலனும் 'அம்மா, அம்மா' என்றது. எம்பி எம்பி அவள் பார்த்ததில், வயிற்றுப் பிள்ளை கூட இரண்டு தரம் குட்டிக்கரணம் போட்டது...

'ஆ... அதோ அம்மா...'

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Chennai
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : K. Rajendran
   Nationality : Indian
   Address : Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
4. Name of Publisher : K. Rajendran
   Nationality : Indian
   Address : Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
5. Name of Editor : Seetha Ravi
   Nationality : Indian
   Address : 'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2005

K. Rajendran
Publisher



தீய எண்ணத்தோடு பேசினாலும், காரியம் செய்தாலும் வண்டிச் சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வது போல துக்கம் மனிதனைத் தொடர்ந்து செல்லும்.

- ஸ்ரீ புத்தபிரான்

ஏதோ ஓர் இடுக்கில், நெரிசலில் அம்மா தெரிந்தாள். ப்ரியா, கையை வீசி வீசி ஆட்டினாள்..

சுகந்தா முதலில் பார்க்கவில்லை. பார்த்த பின் உற்சாகத்தில் பறந்து போனாள்.

'செக்கிங்'கில்தான் சிறிதுநேரம் ஆயிற்று... எல்லாம் முடிந்து, டிராலியில் பெட்டிகளை வைத்துத் தள்ளிக் கொண்டு வெளியே வந்த அம்மாவை இறுகத் தழுவிக் கொண்டாள் ப்ரியா.

"சௌக்கியமாடி குழந்தை... மாப்பிள்ளை வந்திருக்காரா. இன்னும் மசக்கை படுத்தறதா...?"

சுகந்தா அடுக்கடுக்காய் கேள்விகளை வீச, ப்ரியம்வதா புன்னகை செய்தபடி கூறினாள்.

"நாங்க எல்லாரும் சௌக்கியம்மா...ஃபிளைட்லே உனக்கு சிரமம் ஒண்ணுமில்லேயில்லே?"

"ஒண்ணுமில்லே. ஃபிராங்ஃபர்ட் வரைக்கும் அப்பாவோட சிநேகிதரும் அவர் சம்சாரமும்... ரொம்ப உதவியா இருந்தா. என்ன, அந்த டாய்லெட் கதவுதான் மக்கர் பண்ணித்து... சரி, மாப்பிள்ளை எங்கே."

"மாப்பிள்ளை வரல்லே. மாமனாரும் மாமியாரும் தான் வந்திருக்கா. யாரோடவோ பேசிட்டிருந்தா.. இங்கேயே சாமானோட ஒரு நிமிஷம் நில்லும்மா... நான் போய் அவங்களைக் கூட்டிட்டு வர்றேன்..."

இப்படிச் சொல்லிவிட்டுப் போனவள் சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்...

"எங்கேன்னு தெரியலே. எங்க மாமியாருக்கு ஒரு தீனிக் கடை கண்ணுல பட்டுடக் கூடாது. அம்மா, நான் போய் காரை எடுத்துண்டு வர்றேன். அதுக்குள்ளே வந்து சேரட்டும்..."

"கோவிச்சுக்கப் போறாடி..."

"அது சரி. வந்த இடத்துல வேலையைப் பார்க்காம, எந்த, 'பிரஞ்ச் ஃபிரை' கடையிலயாவது நின்னா... கோபம் வராதா?"

ப்ரியா வரிசையாய் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு ஓடினாள்... நல்ல வேளையாய் காரை கடைசியில் அவள்தான் பூட்டினாள். ஆதலால் காரின் 'ரிமோட் கீ' (தானியங்கி சாவி' என்று தமிழில் சொல்ல வேண்டுமா?) அவளிடம்தான் இருந்தது.

வரிசையில் ஒரே மாதிரி நிற்க வைக்கப்பட்டிருந்த - கார்களின் பக்கம் ரிமோட்டை அழுத்த - அவளது கார், கண்சிமிட்டி 'பீப் பீப்' எனக் குரல் கொடுத்தது.

ஏறி அமர்ந்து, வண்டியைக் கிளப்பி, பெரிசாய் ஒரு வட்டம் போட்டு, மறுபடியும் ஏர்போர்ட் வாசலுக்கே ப்ரியா வர...

அங்கே பல்பீர்சிங், ஒரு பெரிய 'ஹாம்பெர்க்'கைக் கடித்துக் கொண்டு நிற்கிறார். பக்கத்திலேயே 'மெகா சைஸ்' ஐஸ்க்ரீமுடன் ராஷ்மி.

"அம்மா எங்கே?"

ப்ரியா கேட்க -

"அம்மாவா... வந்தாச்சா... எங்கே?" அவர்களிருவரும் 'கோரஸ்'ஸாய் குரல் கொடுக்க -

மந்திரவாதி கூடையைக் கவிழ்த்துப் போட்டு, 'சூ மந்திரகாளி' என்று சொன்னது போல...

சுகந்தாவைக் காணோம்!

(தொடரும்)

தியாகய்யரின் ஆட்டோகிராஃப்!

பொதுவாக ஒரு சித்திரம் வரைந்தால், அதை வரைந்த ஓவியரின் கையெழுத்துதான் அதில் இடம் பெறும். ஆனால் இங்குள்ள ஸ்ரீ தியாகராஜரின் ஓவியத்தைப் பாருங்கள். சாட்சாத் ஸ்ரீ தியாகய்யரின் கையெழுத்தே இடம் பெற்றிருக்கிறது. அதுவும் தமிழில்!

பிரபல நடனக் கலைஞரும் ஓவியருமான டாக்டர் சரஸ்வதியின் வீட்டில்தான் இந்த அபூர்வ ஓவியம் உள்ளது. ஏராளமான நடன நிகழ்ச்சிகளும், அறுபதுக்கும் மேற்பட்ட டான்ஸ் பாலேக்களும் நிகழ்த்தியுள்ள சரஸ்வதியின் அடுத்த மெகா படைப்பு 'ஸ்ரீ தியாகராஜா!' அதற்காக, ஸ்ரீ தியாகராஜரின் வாழ்க்கை சரிதத்தை ஆராய்ந்து, பல அரிய தகவல்களைத் திரட்டி வருகிறார். அப்படித் தேடுகிறபோது கிடைத்ததுதான் தியாகய்யரின் கையெழுத்திட்ட ஓலைச் சுவடி!

"நடனம், இசை என ஆராய்ச்சி செய்து வருபவர்களுக்கு பெரும் உதவி செய்து வருபவர் பிரபல இசை ஆராய்ச்சியாளர் பேராசிரியர் பி.எம். சுந்தரம். இவரை 'நடமாடும் இசை என்ஸைக்ளோபீடியா' என்றே சொல்லலாம். எங்கள் 'ஸ்ரீ தியாகராஜா' டான்ஸ் பாலேக்கும் அவர்தான் அரிய விஷயங்களைத் திரட்டித் தந்திருக்கிறார். அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, திருவையாற்றில் உள்ள தியாகய்யரின் வம்சாவளிகளிடம், ஒரு சொத்துப் பத்திரம் உள்ளதாகவும், அதில் தியாகய்யரின் தமிழ்க் கையெழுத்து உள்ளதாகவும் தெரிவித்தார். நான் அதில் அதிக ஆர்வம் காட்டவே, அந்த ஓலைத் துணுக்கை நகலெடுத்துத் தந்தார். தெய்வாம்சம் பொருந்திய அந்தக் கையெழுத்துப் பிரதியை, நான் ஏற்கெனவே வரைந்து வைத்திருந்த ஸ்ரீ தியாகய்யரின் ஓவியத்துக்குக் கீழே பொருத்தி விட்டேன்" என்கிறார் சரஸ்வதி.



ஸ்ரீ தியாகய்யர் வறுமையில் வாடியதாக ஒரு கருத்து நிலவுகிறதல்லவா? அதை மறுக்கிறார் டாக்டர் சரஸ்வதி. "சதா காலமும் ராமநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்த மகான் அவர்... அந்த ராமபக்தியே, அவருக்குத் தனிப்பட்ட தேஜஸைத் தந்திருக்கும். 'உஞ்சவிருத்தி' சம்பிரதாயத்தை ஒரு நெறியாகக் கடைப்பிடித்து வாழ்ந்தாரே தவிர, அவர் வறுமையில் வாடவில்லை. அதனால்தான் செல்லத் தொப்பையுடன் மிருதுவான பாதங்களுடன் 'ஜம்' என்று வரைந்திருக்கிறேன்" என்கிறார் சரஸ்வதி.



• சரஸ்வதி

இந்த ஓவியத்தின் நகல் சென்னை தியாகய்யர் சமாஜத்தில் பூஜிக்கப்பட்டு வருகிறது.

- டாலி

வட்ட மேஜை

✉ ஏவி.எம்.சரவணன் என்றதுமே அடக்கமே உருவாகக் கைகட்டி நிற்கும் சரவணன்தான் நம் கண் முன்னே தோன்றுவார். 'திரையுலக நினைவுகள்' தொடரில் கூட அடக்கம் ஆட்சி புரிகிறது. இந்த வாரம் அப்பச்சிக்குப் பின்னால் சரவணன் கைகட்டி நிற்பது போன்ற நடனத்தின் ஓவியம்... ஓர் ஓவியனின் கூர்மையான கவனிப்பை உணர்த்தியது.

சென்னை - 28,

காஞ்சனா ராதாகிருஷ்ணன்

✉ முன்பெல்லாம் 'கல்கி' கிடைத்தவுடன் முதலில் 'நீங்கள் கேட்டவை' படிப்பேன்! கடந்த சில வாரங்களாக முதலிடம் பிடித்துள்ளது சுஜாதாவின் 'உள்ளம் துறந்தவன்' என்றால், இரண்டாவது இடத்தை அனுராதா ரமணனின் 'மாம் ஃப்ரம் இண்டியா' பிடித்து விட்டது.

புதுச்சேரி - 8,

கே.எஸ்.பட்டாம்பிராமையா

✉ 'குறையொன்றுமில்லை' (20.2.05) முதல் வரியிலேயே 43,22,000 வருடங்கள் என்று அச்சாகி உள்ளதே! முக்கூராரின் முந்தைய வார (13.2.05) கூற்றுப்படி:

கலிக்கு	-	4,32,000
துவாபர	-	8,64,000
திரேதா	-	12,96,000
கிருத	-	17,28,000
மொத்தம்	-	43,20,000

வருடங்கள் என்றல்லவா இருக்க வேண்டும்?

சென்னை - 92, கிருஷ்ண ராஜ்கோபால்



பாலை வார்த்தீங்க பாஸ்!

✉ தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமை என்பது காலத்தின் கட்டாயம். டாக்டர் அம்பேத்கருக்குப் பிறகு தலித் மக்களை ஒருங்கிணைந்து வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு திருமாவளவனுக்கு மட்டுமே உள்ளது. அது மட்டுமல்லாமல் தலித் அரசியலையும் கடந்து, தமிழ் தேசியத்திற்காகப் பாடுபடும் போராட்ட குணத்தையும் பாராட்டியே ஆக வேண்டும்!

பூண்டி நீர்த்தேக்கம், மு.வ.சித்தார்த்தர்

✉ காந்தியடிகள் லண்டன் வட்டமேஜை மாநாட்டில் எதிர்த்தார் என்பதையே ஒரு குற்றமாகக் கருதி, அவர் மீது வசைமாரி பொழிந்து நோட்டீஸ் ஒட்டிய தலித்துகளை திருமாவளவன் போன்றவர்களின் வழி காட்டல்தான் இயக்குகிறதென்பது உண்மை. இரட்டை வாக்குரிமையென்பது தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் செயல். இப்போதைக்கு இது தேவையற்றது!

மதுரை - 9,

இரா. கல்யாணசுந்தரம்

✉ சூப்பர் ஸ்டார் ரஜினியை வருமான வரித்துறை சீண்டியிருப்பதால், அவர் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். போல செல்வாக்குப் பெறக் கூடும் என்று ஆருடம் கூறி, ரஜினி ரசிகர்கள் வயிற்றில் பாலை வார்த்து விட்டீங்க பாஸ்!

அயன்புரம், த. சத்திய நாராயணன்

✉ இப்பொழுதுதான் தெரிகிறது எங்களைப் போன்றவர்களின் கடிதங்கள் ஏன் பிரசுரமாவதில்லை என்று! அவரவர் இதையே தொழிலாக வைத்திருக்கிறார்களே! (கடுதாசி த்ரில்!)

சென்னை - 91, புழுதிவாக்கம் சீனு

✉ 'எங்க ஊர் பிள்ளையாரி'ல் 'கலைநிறை கணபதி சரணஞ் சரணம்' பாடல் இராமலிங்க அடிகளால் இயற்றப்பட்டது. பாடலை அனுப்பிய வாசகியின் பெயரைப் போட்டு இராமலிங்கரை ஓரங்கட்டிவிட்டீர்களே!

போரூர், கே. முத்து

Sri Ramajayam

ஸ்ரீ மீனாட்சி டிராவல்ஸ் (பதிவு)

5-A/77, W.E.A., Karol Bagh, New Delhi-110005. Phone: 25726891, 25820291 Mobile: 98102 71676

வட இந்திய சுற்றுலாக்கள்

1. தில்லி-புதுதில்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், ஜோஷிமட், பத்ரிநாத் (7 நாட்கள்) புறப்படும் தேதிகள் **15, 20, 27.5.2005; 3.6.2005** ஒரு நபருக்கான கட்டணம் ரூ. **3,500/-**
2. பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்வார், ரிஷிகேஷ்(9 நாட்கள்) **15, 20, 27.5.2005; 3.6.2005** ஒரு நபருக்கான கட்டணம் ரூ. **4,900/-**
3. சிம்லா, குல்லு-மனாலி, அம்ரித்ஸர் (6 நாட்கள்) **23, 30.4.2005; 7, 14, 23, 28.5.2005** ஒரு நபருக்கான கட்டணம் ரூ. **6,200/-**

தில்லியிலிருந்து வசதியான டீலக்ஸ் பஸ் பிரயாணம், தங்குமிடம், தமிழ்நாட்டு பிராமணர்களால் தயாரிக்கப்படும் சுவையான சைவ டிபன், சாப்பாடு, இரவு உணவு உட்பட மேற்கண்ட சுற்றுலாக்கள் அனைத்து வசதிகளுடன் கூடியவை. குரூப்பாக வருபவர்களுக்கும், தனியாக வருபவர்களுக்கும் அவரவர்களின் வசதிக்கேற்ப டயோட்டா க்வாலிஸ், இண்டிகா, 2x2 டீலக்ஸ் பஸ் மற்றும் தென்னிந்திய சைவ உணவு வகைகளும், தங்கும் வசதியும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். DLY கார்கள் கிடைக்கும். LTC வசதி உண்டு.

மேலும் விபரங்களுக்கும் முன்பதிவிற்கும் கீழ்க்கண்ட முகவரிகளிலும் தொடர்பு கொள்ளவும்:

1. திருமதி வேதவல்லி *சீனிவாசன்*, 19/6, தாச்சி அருணாசலம் தெரு, மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி எண்: 044-24950530.
2. திரு. K.R. கேசவன், 1/90, ஒத்தை தெரு, கல்யாணபுரம், தஞ்சாவூர். தொலைபேசி எண்: 04362-262686

J.C. முதியோர் இல்லம்



(A Unit of Janakiammal Trust) Regd.

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (I.T. Act 80G excemption) உண்டு.

இயற்கை சூழ்நிலை, படுக்கை வசதிகள், சுவையான சைவ உணவு, இலவச மருத்துவம், தூய்மையான பராமரிப்பு, குறைந்த கட்டணம், அன்பான கவனிப்பு, மனம் குளிரும் சேவை.

ENJOY YOUR SECOND CHILDHOOD DAYS AT :

Plot No.30 & 31, D.No.4, Murugan Kovil First Street, (Near Jain Temple)
Vivekananda Nagar, Kolathur, Chennai - 600 099.
Phone : 55171667, 26208400 E.mail : jcagedhome@yahoo.co.in


(We undertakes Bedridden Patients also)

Donations accepted for Home under Public Charitable Trust

மைக்ரோவேவ் மாமி



பப்பாளி பால் அல்வா!



என்ன... எக்ஸாம் நெருங்கிண்டே வர்றது... குழந்தேள்லாம் படிப்புல ரொம்ப பிஸியா இருந்துண்டிருப்போ... சதா அவாளை படிப்பு... படிப்புன்னு நச்சரிச்சண்டே இருக்காம, இப்போ... நான் சொல்லித் தரப் போற பப்பாளி பால் அல்வாவை செஞ்சு கொடுத்தேன்னா... அதைச் சாப்பிட்டுட்டு ரொம்ப குஷியா படிக்க ஆரம்பிச்சுடுவா... பப்பாளிப் பழத்தை பொடியா நறுக்கி 2 கப், நெய், 3 டேபிள் ஸ்பூன், பால் 4 கப், கோவா 100 கிராம், சர்க்கரை 1½ கப், வெனிலா எஸ்ஸென்ஸ் சேர்த்து, டிரை ஃப்ரூட்ஸ் ஒரு கால் கப் வர்ற மாதிரி எடுத்துக்கோங்கோ.

பொடியா நறுக்கின பப்பாளிப் பழத்தை வெந்நீர்ல விட்டு பத்து நிமிஷத்துக்கு ஊற வச்சிடுங்கோ... பத்து நிமிஷம் ஆயிடுத்துன்னா, அந்த வெந்நீரை சுத்தமா வடிச்சு எடுத்துட்டு, அதை ஒரு வாணல்ல விட்டு அஞ்சு நிமிஷம் வேக விடுங்கோ... முக்கியமான விஷயம் பப்பாளிப் பழம் முழுக்க முழுக்க நெய்லதான் வேகணும். இப்போ அதன் மேல கொஞ்சம் கொஞ்சமா பாலை சேர்த்துண்டே வரணும்... பப்பாளிப் பழம் நன்னா கரைஞ்சிடுத்துன்னா, கோவாவையும், சர்க்கரையையும் சேர்த்து, ஒண்ணா கிளறிண்டே இருக்கணும்... சில துளி வெனிலா எஸன்ஸை சேர்த்து, டிரை ஃப்ரூட்ஸைத் தூவி கிளறினா, பப்பாளி பால் அல்வா ரெடி... முக்கியமான விஷயம்... இதைச் செய்யறதுக்கு முன்னால குழந்தேள்ட்ட இதப்பத்தி மூச்சு விட்டேளோ... குழந்தேள் கிச்சனை விட்டு நகராது... ஸோ...பீ... கேர்ஃபுல்!

என் பேர்லே தப்பு இல்லே..!

தென்கச்சி சுவாமிநாதன்

அது ஒரு நீண்ட நெடுஞ்சாலை.

நள்ளிரவு நேரம்.

ஒரு கணவனும் மனைவியும் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

எதிரே கொஞ்ச தூரத்தில் ஒரு லாரி வந்து கொண்டிருக்கிறது.

அதைப் பார்த்துவிட்டு கணவன் சொல்லுகிறான்,

"அதோ பார்... எதிரே இரண்டு மோட்டார் சைக்கிள் வந்து கொண்டிருக்கிறது!"

"நாம் போவது மோட்டார் சைக்கிள் என்பதற்காக, எதிரே வருவதும் மோட்டார் சைக்கிளாகத்தான் இருக்க வேண்டுமா?"

"உனக்கு ஒன்றும் தெரியாது... பேசாமல் இரு!"

மனைவி வாயை மூடிக் கொண்டாள்.

அவளுக்குத் தெரியும்.

இவர் எப்பவும் தான் நினைப்பது தான் சரி என்று நினைக்கிறவர்.

அடுத்தவர் என்ன சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவே மாட்டார்.

அதுதான் தனக்கு 'கௌரவம்' என்று நினைக்கிறவர்.

"இப்ப... பார்... எதிரே வருகிற அந்த இரண்டு மோட்டார் சைக்கிளுக்கும் நடுவிலே புகுந்து நான் போகப் போகிறேன்!"

"நான் வேண்டாம் என்று சொன்னால் நீங்கள் அதைக் கேட்கவா போகிறீர்கள்?"

அவன் போனான். அதன் விளைவு...!

அடுத்த நாள்... ஆஸ்பத்திரியில் அடுத்தடுத்த கட்டிலில் இருவரும்....

உடல் முழுக்க கட்டுகள்.

மனைவி சொன்னாள். "இப்படிப் பண்ணிட்டீங்களே...!"

"என் பேர்லே எந்தத் தப்பும் இல்லேடி...!

"நடுவிலே வந்த மோட்டார் சைக்கிள்காரன் லைட் போடாமே வந்துட்டான்!"

இப்படிப்பட்ட மனிதர்களை அனுபவங்கள்கூட



திருத்த முடியாது!

கருத்தை மாற்றிக் கொள்ளாத மனிதர்கள், கண் மூடித்தனமாக எங்காவது போய் மோதிக் கொள்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது!

அடுத்தவர் சொல்வது சரியாக இருந்தால், உங்கள் கருத்தை உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள்.

இது இழுக்கல்ல. எதிர்கால வெற்றிக்கான முதல் படி!

(தொடரும்)

கடவுள்

அமரர் கல்கி

கடவுளைப் பற்றிய பிரச்னைகளில் மிகவும் முக்கியமானது, 'கடவுள் உண்டா, இல்லையா' என்பதுதான். மனிதன் தோன்றின காலத்திலிருந்து இந்தப் பிரச்னையும் இருந்து வருகிறது. ஒரு சாரார் 'கடவுள் உண்டு' என்கிறார்கள். இன்னொரு சாரார் 'கடவுள் இல்லை' என்கிறார்கள். ஆனால் இரு சாராரும் கடவுள் இல்லாதது போலவே காரியம் செய்கிறார்கள்!


கடவுள் இருந்தாலும் சரி, இல்லாமற் போனாலும் சரி, அவர் மனிதனுடைய காரியங்களில் தலையிடுவதாகத் தெரியவில்லை. அப்படித் தலையிட்டாலும் தம்மிஷ்டப்படி தலையிடுகிறாரேயன்றி, மனிதனுடைய வேண்டுகோளை முன்னிட்டுத் தலையிடுவதாகக் காணப்படவில்லை.

சுவாமிக்கு வேண்டுதல் செய்து கொள்வதில் எவ்வளவோ விநோதங்கள் இருக்கின்றன. "திருப்பதி வேங்கடாசலபதி! என் பிள்ளைக்கு நூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் ஆகட்டும், உன் உண்டியலில் ஒரு ரூபாய் போடுகிறேன்" என்று தாயார் வேண்டிக் கொள்கிறாள். இங்கே கடவுள் உத்தியோகத் தரகர் ஆகிறார். 1% அவருக்குக் கமிஷன். உத்தியோகஸ்தர் ஒருவர் தமக்கு வரும் 'மேல் வரும்படி'க்கெல்லாம் ரூபாய்க்குக் காலணா வீதம் உண்டியலில் சேர்ப்பிக்கிறார். இதன் மூலம் லஞ்சம் வாங்குகிற பாவத்தை முழுதும் பகவான் மேலேயே போட்டு விடுவதாக அவர் எண்ணம்!

இதனாலெல்லாம் 'கடவுள் வேண்டாம்' என்று நான் சொல்வதாகத் தயவு செய்து நினையாதீர்கள். அதற்கு மாறாக, கடவுள் மிகவும் உபயோகமானவர் என்று நினைப்பவர்களின் நான் ஒருவன்.

முதலாவதாக, கடவுள் நம்பிக்கையுள்ளவர் ஆயுள் இன்ஷியூரென்ஸ் செய்ய வேண்டியதில்லை. இது எவ்வளவு பெரிய சௌகரியம் பாருங்கள்! எத்தனையோ இன்ஷியூரென்ஸ் ஏஜண்டுகளுக்கு நான் டிமிக்கி கொடுத்து வந்திருப்பதெல்லாம், கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கையினால்தான், ஏஜண்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பிக்கும்போதே, நான் அவருடைய வாயை அடைத்து விடுவேன். "நான் நாஸ்திகனல்ல, சுவாமி! பகவானிடம் நம்பிக்கையுள்ளவன்;






பகவான் ஒருவர் இருக்கும்போதே, நான் ஏன் பெண்டாட்டி பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுகிறான்! 'இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதிவிட்ட சிவனும் செத்து விட்டானோ?' என்று பிரசங்கத்தைத் தொடங்குவேன். "தயவு செய்து இந்த மாதிரி போதனை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டாம்" என்று ஏஜண்ட் மன்றாடிவிட்டுப் போய்ச் சேருவார்.

கடவுளின் மற்றொரு பெரிய உபயோகம் என்னவென்றால், அவருடைய பெயரால் பொய்யையும் மெய்யாக்கி விடலாமென்பதே. முக்கியமாக, கோர்ட்டுகளில் பொய்சாட்சி சொல்வோருக்கு, பகவானுடைய திருநாமம் இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. உண்மையில் கடவுள் பேராலன்றித் தற்காலக் கோர்ட்டுகளில் பொய்யே சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் அது சாக்ஷியாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது!

- 'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து வானதி பதிப்பகம்



ஆன்லைனில் மாவிளக்கு!





மயிலை கற்பகாம்பாளுக்கு மெயில் அனுப்பி, நம் மனக் குறைகளைச் சொல்லும் ஆன்லைன் ஆன்மிகக் காலமிது. நீங்கள் வீட்டிலிருந்தபடியே பழனி முருகனுக்கு பாலாபிஷேகம் செய்யலாம், மதுரை மீனாட்சிக்கு மாவிளக்கு ஏற்றலாம். அதுக்கு பயபக்தியோட ஹெல்ப் பண்ணுற தளம் www.pariharam.com தமிழ்நாட்டிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களில் நீங்கள் அர்ச்சனை செய்யலாம். ஹோமங்கள் செய்யலாம். பிரசாதம் உங்கள் வீடு தேடி வரும். (ஆதாரங்களுடன்). ஆன்மிகச் சுற்றுலாவுக்கும் பேக்கேஜ்கள் வைத்திருக்கிறார்கள். (ஹலோ... பிள்ளையார் பட்டி பிள்ளையாரோட பெர்சனல் மெயில் ஐடி கிடைக்குமா?)

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் போன்ற பெரிய கோயில்கள் முதல், ஸ்ரீவைகுண்டம் அருகிலுள்ள சிறிய கிராமமான ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் கோயில் வரை, தமிழகத்திலுள்ள அனைத்துக் கோயில்களின் வரலாற்றுச் சிறப்புகளை அறிந்து கொள்ள நீங்க கும்பிட வேண்டிய தளம் templenet.com/tamilnadu. பிற மாநிலங்களிலுள்ள கோயில்கள் பற்றிய தகவல்களையும் விபூதி மாதிரி அள்ளலாம். (அதுக்காக உங்க தெரு முக்குல இருக்குற பிள்ளையாரைப் பத்தி கிடைக்குமான்னு கேட்காதீங்க!)

ஹிந்து, கிறிஸ்துவர், முஸ்லீம், சீக்கியர், யூதர்கள் என எல்லோரையும் வரவேற்கிறது hollywoodjesus.com. பாப் கல்ச்சரைப் பக்தி வியூவில் சொல்கிறது இத்தளம். தற்போதைய ஹாலிவுட் மூவி பற்றிய தகவல்கள், விமர்சனங்கள், டீ.வி நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள், விமர்சனங்கள், எல்லாம் தருகிறது. இதில் என்ன விசேஷம் என்றால், கான்ஸ்டன்டீன் (constantine) படத்திற்குள் உள்ள ஸ்பிரிட்சுவல் லிங்கை சிலாகிக்கிறார்கள் (இப்படி ஒவ்வொரு படத்துக்கும்)

(தாலி காத்த காளியம்மன் - பட விமர்சனம் - இங்க தேடினாலும் கிடைக்காதுங்கோ!)

- ப்ரௌஸர்

வலைபாயுதே

அருணகிரிநாதரும் வைரமுத்துவும்!

வியாஸமகரிஷி ஒரு சமயம் யமுனை ஆற்றங்கரையில் அமர்ந்திருந்தார்... அப்போது அங்கு வந்த கோபிகைகள் "ஐயா... இன்றைக்கு யமுனையில் வெள்ளம் அதிகமாக உள்ளது. நீங்கள்தான் பெரிய தபஸ்வி ஆயிற்றே... எங்களுக்கு உதவுங்கள்" என்று மன்றாடினார்கள்.

"சரி, உதவுகிறேன். ஆனால் அதற்குக் கூலியாக தயிர், வெண்ணெய் எல்லாம் தர வேண்டும்" என்றார் வியாஸர். கோபிகைகளும் ஒப்புக் கொண்டுதர, வியாஸர் திருப்தியாகத் தின்று ஏப்பம் விட்டார். பின்னர், "ஏ... யமுனையே! நான் உபவாஸம் இருப்பது உண்மையானால், நீ எங்களுக்கு வழிவிடு!" என்றார். யமுனையும் பிரிந்து வழிவிட்டது.

கோபிகைகளுக்கு கோபமான கோபம்!

அக்கரையை அடைந்ததும், "ஏன் சாமி... நீங்க இப்படிப் புளுகலாமா?" என்று வாய்விட்டே கேட்டு விட்டார்கள்.

"அம்மா... சர்வம் கிருஷ்ணார்ப்பணம் என்று வாழ்பவன் நான். அதனால் நான் சாப்பிட்ட வெண்ணெய் கூட அந்தக் கண்ணன் சாப்பிட்டதுதான். அதைப் புரிந்து கொண்டதால் தான் யமுனையும் வழிவிட்டது" என்றார் சிரித்துக் கொண்டே.

கோபிகைகள் நாணித் தலை குனிந்தனர்.



"இந்து மதம் வலியுறுத்தும் பற்றற்ற வாழ்வின் மகிமையை, இதைவிட ருசியாகச் சொல்ல முடியுமா?" என்று கேட்கிறார் இசைப் பேருரையாளர் கௌசல்யா சிவகுமார்.

"கண்ண பெருமானை, யார் யாரோ எப்படி எல்லாமோ வருணித்து உள்ளார்கள். ஆனால் அருணகிரிநாதர் ஒரு வார்த்தை போடுகிறார் பாருங்கள்... 'பச்சைப்புயல் மெச்சத் தகுந்த மருகோனே!' திருமால், பச்சைப் புயலாம்! அட...அட! என்ன ஒரு கற்பனை! என்று சொல்லிவிட்டு, வைரமுத்துவின் 'பச்சை நிறமே!' திரைப்பாடலின் கற்பனையையும், ஒரு வரி பாராட்டும் போது, இளைய பட்டாளமும் சேர்ந்து கை தட்டுகிறது!" என்று விவரித்தார் கௌசல்யா... இவரது குரு, வைகல் எஸ். ஞானஸ்கந்தன்.



"எங்க வீட்டுல எல்லாருமே சமஸ்கிருத பண்டிதர்கள் தாம். சிறு வயதிலிருந்தே இசையும் தமிழறிவும் ஊட்டி ஊட்டி வளர்த்தார்கள். ஒரு முறை சாஸ்திரி ஹாலில், நவாவர்ண கிருதிகளைப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்ட சரஸ்வதி சபா என்.வி. சுப்ரமணியம், அவற்றுக்கு அர்த்தமும் சொல்லி சொற்பொழிவு ஆற்றச் சொன்னார். அம்பிகையை மனத்தில் துதித்துக் கொண்ட மேடையேறினேன். "நானா பேசினேன்?" என்று நானே வியந்து போகும்படி, உணர்ச்சிகரமாகப் பிரசங்கம் செய்துவிட்டேன்" என்றார்.

அந்த நிகழ்ச்சி தந்த ஊக்கத்தினாலும் வெற்றியினாலும்தான், கிட்டத்தட்ட இருபத்தைந்து தலைப்புகளில் இசைப் பேருரைகள் நிகழ்த்தி இருக்கிறார். குறிப்பாக, 'சர்வம் சுப்ரமணியம்', 'திருப்புகழில் திருமால்' போன்றவை சூப்பர் ஹிட்!

- ஜஸ்

கொடுத்து வைச்சவங்க!



தமிழிலும், ஹிந்தியிலும் புராதன பிரசங்கங்கள் செய்து வரும் இளம் சொற்பொழிவாளர் ஹரிஜி, கிருஷ்ண பிரேமி சுவாமி களின் மகன் மற்றும் சீடர் என்று மட்டுமே சிலருக்குத் தெரிந்திருக்கும்.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி யில் எம்.ஏ ஆங்கில இலக்கியம் தேறியவர் ஹரிஜி. ஹிந்தி மொழியில் பிரவீண் படித் தவர். தமிழில் உபன்யாசங்கள் செய்வது போலவே, வடக்கே ஹிந்தியிலும் சொற்பொழி வுகள் நடத்தி வருகிறார் என் பது, பலருக்கும் தெரிந் திருக்காது.

''பள்ளிக்கூடம் போகிற நாளிலிருந்தே இந்தத் தொழி லில்தான் ஈடுபடுவது என்று தீர் மானித்து விட்டேன். தகப் பனாருடன் நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது அவரைக் கவனிப்பேன். அவரிடமிருந்து கற்றுக் கொள்வேன். படிக்கும் போதே உபந்நியாசமும் செய் திருக்கிறேன்!'' என்கிறார் ஹரிஜி.

''ஆதிசங்கரரின் பகவத் கீதை பொருளுரை, பிரம்மசூத் ரம், பொருளுரை, பத்து உப நிடதங்களின் பொருளுரை என்று கல்லூரியில் படிக்கிற போதே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டேன்!'' என் கிறார். கல்லூரியில் கருத்தரங் கங்களில் இலக்கியம் தொடர் பான சொற்பொழிவுகளில் நிறையவே பங்கு கொண்டிருக்கிறார். ஆங்கிலக் கவிஞர் மில்டனின் ரசிகர். அவருடைய 'பார டைஸ் லாஸ்ட்' இவ ரைக் கவர்ந்த காவி யம்.

இளம் மனைவி விசாகா ஹரிஜி, சார்ட்டர்டு அக் கவுன்டண்ட், Taxation துறையில் ஆல் இந்தியா நெ.1, அகில இந்திய அளவில், சார்ட்டர்டு அக்கவுன் டன்சி தேர்வில் மூன்றாவதாக இடம் பிடித்தவர். (ஆனால் பிராக் டிஸ் தொடங்கவில்லை!)

பள்ளிப்படிப்பு ரோசரி மெட் ரிக்கில்; உயர் கல்வி எதிராஜ் கல்லூரி யில். வயலின் மேதை லால்குடி ஜெய ராமனின் மாணவி. அகில இந்திய ரேடி யோவில் 'ஏ' கிரேடு இசைக் கலைஞர்.

• உபன்யாச தம்பதி



பள்ளி - கல்லூரிகளுக்கு இடையேயான இசைப் போட்டிகளில் எல்லாம் பரிசு வாங்கியவர் விசாகா. மாநில - மத்திய அரசுகளின் ஸ்காலர்ஷிப் பெற்றவர்.

"நீங்கள் கச்சேரியும் செய்கிறீர்கள். புராண - இதிகாச ஹரிகதை நிகழ்ச்சிகளும் பண்ணுகிறீர்கள். இசைக்கு லால்குடி குரு. ஹரிகதைக்கு?"

"என் கணவரும், மாமனாரும்தான்" என்கிறார். "சிறு வயதிலேயே மாமனாரின் உபன்யாசங்களுக்கு எல்லாம் போய்க் கேட்டிருக்கிறேன். பக்தவிஜயம், பகவத் கீதை, ராமாயணம், மகாபாரதம் எல்லாமே கேட்பேன். எங்கள் உறவுதான் ஸ்ரீ கிருஷ்ண பிரேமி சுவாமிகள். அதனால் அவர் மகனான ஹரிஜியைத் திருமணம் செய்து கொண்டேன். ஏப்ரல் 2001ல் திருமணம் நடந்தது... என் ஹரிகதை காசெட் எல்லாம், குரு லால்குடி சாரும் கேட்பார். திருத்தங்கள் இருந்தால் சொல்வார். அவரும் ஊக்குவிப்பார். வருகிற ஆடியன்சைப் பொறுத்து என் சொற்பொழிவை அமைத்துக் கொள்வேன். பாமர மக்கள் அதிகம் கூடியிருந்தால், கதைகளை அதிகம் சொல்லி, பாடல்களைக் குறைத்துக் கொள்வேன்!" என்கிறார் விசாகா ஹரிஜி.

"சாதாரணமாக சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் தேறுவதே கடினமான காரியம். அதிலும் முதலாவதாக வந்திருக்கிறீர்கள். அந்தத் தொழிலில் வருமானமும் அதிகம். அதை எல்லாம் ஒதுக்கித் தள்ளி உதறிவிட்டு, இப்படி ஹரிகதை நிகழ்ச்சிகள் மேற்கொண்டதில் வருத்தமே இல்லையா?"


"துளிக்கூட இல்லை. ஆனந்தமாகத்தான் இருக்கிறது. பகவத் விஷயங்களைச் சொல்லுவதற்குக் கொடுத்து வைத்திருக்கணுமே!" என்கிறார் விசாகா ஹரிஜி. அதைப் புன்னகையுடன் ஆமோதிக்கிறார் ஹரிஜி.


இந்த இளம் வயதிலேயே இப்படிச் சொல்ல மனசு எவ்வளவு பக்குவப்பட்டிருக்க வேண்டும்!

இந்த அதிசயத் தம்பதி இப்போது வசிப்பது ஸ்ரீரங்கத்தில்.

- **சாருகேசி**

படம்: **வெங்கடேஷ்**



கனி மரம்
தனது நிழலில் வந்து விளையாடும் சேதுவின் மீது மிகுந்த அன்பு கொண்டது அந்தக் கம்பீரமான மரம். தன் கனிகளையோ, மலரையோ சேது பறித்து எடுத்துச் சென்றால் பூரித்துப் போகும் அந்த மரம். வழிப் போக்கர்களுக்கும் நிழலையும் கனிகளையும் அது அன்புடன் கொடுப்பது வழக்கம்.
சேது சற்று பெரியவனானதும் அதன் கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடுவான். மரம் மகிழ்ந்து போகும்.
சேது பெரியவனானதும் நண்பர்களுடன் ஊரைச் சுற்றினான். மரத்தைப் பார்க்க வருவதில்லை. அவன் வர மாட்டானா என்று மரம் ஏங்கத் தொடங்கிற்று.
சில வருடங்களுக்குப் பிறகு சேது அந்தப் பக்கமாக வந்தான்.
என்ன சேது, என்னை மறந்து விட்டாயா?
உன்னிடம் என்ன இருக்கிறது? எனக்குப் பணம் தேவை. உன்னால் தரமுடியுமா?
ஏன் முடியாது! என் பழங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு சந்தைக்குப் போ!...
அட, ஆமா!


பழங்களை விற்ற பணத்தில் ஒரு வியாபாரம் ஆரம்பித்தான் சேது. அதன் பின் அவன் கையில் பணம் புரளத் தொடங்கியது.
சில வருடங்கள் சென்றன...
என்னை வந்து பார்க்கக் கூடாதா?
நான் வீடு கட்டப் போகிறேன். மரவிலையோ ஏறிப்போச்சு! உன்னால் என்ன செய்ய முடியும்?
அப்படிச் சொல்லாதே சேது. என் கிளைகள் எல்லாம் உனக்குத் தான்!
ஓ! சரி சரி!
கிளைகளையெல்லாம் வெட்டி எடுத்துக் கொண்டு நன்றி கூடச் சொல்லாமல் சென்றான்.
அந்த மொட்டை மரம் வெகு நாட்கள் சேதுவின் வருகைக்காகக் காத்துக் கிடந்தது.
சேது, நீ இனி எப்போது வருவாய்?
சில வருடங்கள் சென்றன...
ஆஹா! வா சேது! உனக்கு என்ன வேண்டும், கேள்!
கடல் கடந்து சென்று பக்கத்து நாடுகளில் வியாபாரம் செய்ய ஒரு படகு கட்ட வேண்டும். உன்னால் என்ன செய்ய முடியும்! நீ தான் மொட்டையாச்சே!
என்னையும் வெட்டி எடுத்துக் கொள்! இரண்டு படகு கூட கட்டலாம்!
ரொம்ப சரி!
மரத்தை வெட்டி எடுத்துக் கட்டை மரமாக்கி விட்டுச் சென்ற சேது திரும்ப வரவேயில்லை...
கொஞ்சம் அந்த மரமாக உங்கள் அம்மாவையும், சிறுவனாக உங்களையும் கற்பனை செய்து பாருங்களேன்.





புதன் அருள் பொங்கும் காரணீசுவரம்



பழமையான சிவாலயங்களில் சனிபகவானுக்குத் தனியாகக் கருவறை அமைந்திருப்பது சிறப்பு. சென்னையைப் பொறுத்தவரை சைதாப்பேட்டை காரணீசுவரர் ஆலயத்திலும், திருமயிலைக் கபாலீசுவரர் ஆலயத்திலும் தான் இப்படி, சனிபகவான் தன்னாட்சி புரிந்து கொண்டிருக்கிறார்.

வேதகிரீசுவரர் சந்நிதிக்கு நேர் எதிரில் அமைந்துள்ளது சனிபகவானின் சந்நிதி. சனிக் கிழமைகளில் எள் அன்னம் நிவேதனம் செய்து எள் தீபம் ஏற்றி, நீல நிற மலர்களால் வழிபாடு செய்வது இங்கே சிறப்பு. தனியே வழக்கப்படியான நவக்கிரக சந்நிதியும், நெய் விளக்கு வழிபாடும் உண்டு. தென்கிழக்கு என்னும் ஆக்னேய பாகத்தில் அமைந்துள்ளது நவக்கிரக சந்நிதி.

செவ்வாய்க் கிழமைகளிலும், அமாவாசை பௌர்ணமி தினங்களிலும் இங்கேயுள்ள அகோர வீரபத்ரருக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. வெற்றிலைக் காப்பு அலங்காரத்தை ஏற்றுக் கொண்டு இவர் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.


புதன் க்ஷேத்ரம் என்கிற முறையில் இங்கே அருள் பாலிப்பவர் காரணீசுவரர் தான். அம்பாள் திருநாமம் திருபுரசுந்தரி, புதன் கிழமைகளில் இந்த ஈசுவரனை தரிசித்து அர்ச்சனை செய்வது, புத பகவானைத் திருப்திப்படுத்தும் என்கிறார்கள். கல்வி சிறக்கும்.

அழகான படித்துறைகளோடு நீர்நிரம்பி நிற்கும் தெப்பக்குளம், சைதாப்பேட்டையின் 'லாண்ட் மார்க்' ஆக விளங்குகிறது.

- யெஸ்.பால்

தங்கள் 6.2.2005 தேதியிட்ட கல்கி இதழில் எல்லையைக் காக்கும் நம் படைவீரர்களைப் பற்றிய கருத்துச் (கேலி) சித்திரம் வருத்தத்தைத் தருகிறது.

எந்த அமைப்பிலும், குழுவிலும் கோடரிக் காம்புகள் இருக்கவே செய்கின்றன. ஆனாலும், நம் படை வீரர்களை ஒட்டுமொத்தமாக மனிதாபிமானம் இல்லாதவர்களாக சித்திரித்திருப்பது வேதனை.



ஜெய் ஜவான்!

வாசகர் குமுறல்

இயற்கையின் கொடூரம் நிறைந்த எல்லைப் பகுதிகளில் பணியாற்றும் படை வீரர்களின் வாழ்க்கை, அல்லல்படும் முள்படுக்கை தான். அந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் சிவிலியன்களுக்குக் காட்டும் பரிவு, நீட்டும் நேசக்கரங்கள், உதவிகள் நகர்ப்புற சொகுசு மனிதர்களிடம் பார்க்க முடியாது என்பதுதான் உண்மை.

பயணத்தின் போது, குருத்து எலும்பு வரை நடுங்கும் குளிரில் தங்கள் இருக்கைகளை பெண்டிருக்கும், சிறார்களுக்கும் கொடுத்துவிட்டு, கழிவறை பக்கம் ஒடுங்கிக் கொண்ட படையினரைப் பார்த்திருக்கிறேன். மலைச் சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களிடமிருந்த உணவைக் கொடுத்து விட்டு பட்டினி கிடந்த ஜவான்களையும் பார்த்திருக்கிறேன்.

ஒவ்வொரு ரயில் வண்டியிலும் ஒரே ஒரு கம்பார்ட்மெண்ட் மட்டும் படையினருக்கு என ஒதுக்கப்படுவதால், ப்ளாட்பாரத்தில் அகதிகளைப் போல நாள் கணக்கில் காத்துக் கிடக்கும் ராணுவத்தினரை, வடக்கு, வட கிழக்கு பிராந்தியங்களில் சகஜமாகக் காணலாம்.

ராணுவத்தினரும் பொது ஜனங்களே தான். அவர்களுக்கும் குறை நிறைகள் உண்டு. நிகழ்ந்த சம்பவத்தை நான் நியாயப்படுத்தவில்லை. குற்றம் குற்றம்தான். தவிர்க்கப்பட வேண்டியது. ஆனால் ஜவான்களைக் குற்றம் சாட்டும் இத்தகைய சம்பவங்களை மிகைப்படுத்திப் பார்க்க வேண்டாமே...!

- ரா.ச.கிருஷ்ணன், குர்கான்

'மிதிபடும் மனித நேயம்' தலையங்கம் கண்டேன்.

நான் இராணுவத்தில் 35 வருடங்கள் பணிபுரிந்து, 1988ல் ஓய்வு பெற்றேன். தங்களின் ஆதங்கம் புரிகிறது. அதே சமயம், நம் இராணுவ வீரர்களின் அவலம் உங்களுக்குத் தெரியுமா? அதுவும் கிழக்குப் பிராந்தியத்தில் என்ன நடக்கிறது என்று? தாங்கள் படும் கஷ்டங்களை, துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு ராணுவத்தினர் எல்லையைப் பாதுகாக்கிறார்கள். பனி மூடிய மலைகளிலிருந்து நம் எல்லைகளைப் பாதுகாக்கும் ஜவான்கள், எத்தனை பேர் பனியினால் கால், கைகளை இழந்து ஊனியாக வீடு திரும்பி இருக்கிறார்கள். எதற்காக இந்தத் தியாகம்? நம் நாட்டைக் காப்பாற்றத் தான். அதே சமயம் நம் இராணுவத்தை ஈராக் அமெரிக்க இராணுவங்களுடன் ஒப்பிடக் கூடாது.

இப்பொழுதும் நான் சொல்லுகிறேன். ஜவான்கள் செய்தது சரி அல்ல. இருந்தாலும் நீங்களறிந்த ஒரே ஒரு நிகழ்ச்சியால் இராணுவமே கெட்டது என்று முடிவு செய்யக் கூடாது.

- சி.ஏ. துர்காபாய், சென்னை - 33

ஏக்கமே!

அந்த போஸ்ட்கார்டை மீண்டும் ஒருமுறை தனலட்சுமி அம்மாள் படித்தாள்.

'அன்புள்ள அம்மாவுக்கு' என்று ஆரம்பித்து உண்மையான அன்பைப் பொழிந்து எழுதப்பட்டிருந்தது அந்தக் கடிதம். 'உன்னை விட்டுப் பிரிந்திருப்பது நரகமாக இருக்கிற'தென்றும், 'உன் முகத்தைக் காண ஆவலாய் இருக்கிற'தென்றும் காணப்பட்ட வரிகள், தனலட்சுமி அம்மாளின் முகத்தில் கண்ணீர் வரிகளைப் போட்டன.

இருபது ஆண்டுகளுக்கு முன் தன்னை விட்டுப் பிரிந்து படிக்கச் சென்ற இடத்திலிருந்து, தன் மகன் எழுதிய அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தாள் முதியோர் இல்லத்தில் இருந்த தனலட்சுமி அம்மாள்.

- அகிலா கார்த்திகேயன்



நடக்குமென்பார் நடக்கும்!

2.3.2005 முதல் 8.3.2005 வரை

மேஷம்: ஆன்மிகத் தேடல் ஆன்மாவுக்கு அமைதி தரும். ஆசைக்குத் தேடல் வாழ்வுக்கு வழியைத் தரும். உங்க வாழ்வும் வளமும் அமைதியா உயர்ந்து ஆனந்தம் தர்ற வாரங்க இது. மகாலக்ஷ்மி கடாட்சம் பூரணமா உங்க மேல விழறதால பண நெருக்கடியெல்லாம் தீர்ந்து சுபிட்சம் உண்டாகும். ஆபீஸ்லேயும் சாதகமான திருப்பங்கள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் கொடுக்கல் - வாங்கல் அனுகூலம் தரும். குரு பகவான் ஆசியால குடும்பத்தில் சுப மங்கள காரியங்கள் ஈடேறி மகிழ்ச்சியைத் தரும். சுபச் செலவுகள் சிலது காத்திருக்கு. சந்தோஷமா செலவு பண்ணுங்க. பெண்களுக்கு மக்களால் மகிழ்ச்சி கிடைக்கும். எண்ணம் போல எல்லாம் நடக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றமான வாரம்.

ரிஷபம்: ஆண்டவனை வணங்கவும் அவன் அருள் இருந்தாத்தான் முடியுங்க. அந்த அருள் பூரணமா உங்களுக்குக் கிடைக்கிற நேரங்க இது. தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு கூடி உங்கள் எல்லாக் காரியங்கள்லேயும், துணையா இருந்து வெற்றிகரமா முடிச்சுவைக்கும். 4, 11 தேதிக்குப்பின் ராகு, கேது சஞ்சாரங்கள் மாறி உங்களுக்கு நன்மைகளைக் கூட்டும். ஆபீஸ்ல கொஞ்சம் கடுமையான உழைப்பு தேவைப்படும். அதுக்கேற்ற பலனும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வரவேண்டியதெல்லாம் வந்து சேர்ந்து நிம்மதி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கூடும். கல்யாணத்துக்குக் காத்திருக்கிறவங்களுக்கு சுப வேளை வந்து சேரும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

மிதுனம்: சித்தத்தில் இருக்கிற பக்தி முத்திப் போற நேரங்க. கோயில், குளம்னு தெய்வபலம் கூடி உங்களை வளமாக்கிற வாரம். வி.ஐ.பிக்கள் ஆதரவும் கூடும். தேவைக்கேற்ற பண வசதி கிடைக்கும். பயணம் போகும்போது மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. ஆபீஸ்ல எதிர்பாராத திருப்பங்கள் சில ஏற்படும். பாராட்டும், பதவி உயர்வும் சிலருக்குக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டாகும். புதிய தொழிலுக்கான வாய்ப்பு நிறைவே இருக்கும். குடும்பத்தில் சிறு சலசலப்புகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கிறதால, நிதானமா எல்லாத்தையும் கையாளறது நல்லது. பொறுமை மிக அவசியம். பெண்களுக்கு நோக்கம் நிறைவேறும்.


கடகம்: அன்பு வழிதாங்க ஆன்மிக நெறி. உங்க அன்பும், ஆன்மிக பலமும் எதிரிகளே இல்லாமப் பண்ணிடும். துணிவும், நம்பிக்கையும் துணை நிக்கும். இதுவரை தாமதமாகி வந்த நல்ல காரியங்கள் இனி மளமளன்னு நடக்க ஆரம்பிக்கும். ஆபீஸ்ல இது சிறப்பான வாரம். வெற்றி மேல் வெற்றி கிடைத்து அனுகூலங்கள் கூடும். கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அனுகூலமான திருப்பங்கள் சில ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமையும், அமைதியும் நிலவும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பெண்களுக்கு தெய்வீக ஈடுபாடு கூடி பிரார்த்தனைகள் நிறைவேறும்.

சிம்மம்: ஆண்டவன் கட்டளையிட்டா அதிர்ஷ்ட தேவதை அடிச்சுப் பிடிச்சு ஓடி வந்துடுவா. அதனால உங்க அறிவும் திறமையும் அதிகமா பளிச்சிடற நேரங்க இது. எடுத்த காரியமெல்லாம் வெற்றிதான்.

அக்னிசர்மா பக்கம்



விருச்சிக ராசிக்காரரான நக்மா நிதானத்தை கடைப்பிடிப்பது அவசியம்.



இருதயத்தின் உள்ளே ஈசுவரனை உணர்பவன், புறத்திலும் அவனைக் காண்பான். தனக்குள்ளேயே ஈசுவரனைக் காணாதவன் தனக்கு வெளியேயும் அவனைக் காண மாட்டான்.

- பரம ஹம்ஸர்

தாரான பண நடமாட்டம் மட்டும் குறையுமா என்ன? ஆபீஸ்லேயும் அந்த அதிர்ஷ்ட தேவதை கை கொடுத்து பாராட்டையும், புகழையும் தேடித் தருவா. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு ஏற்றமான வாரம். புதிய தொழில் ஏதும் தொடங்கற உச்சேதமிருந்தா, ஆரம்பிக்கலாம். குடும்பத்தில் சுபமங்கள காரியங்கள் நிறைவேறி, மனநிறைவைத் தரும். பெண்களுக்கு எல்லா வகையிலும் மேன்மையான வாரம்.

கன்னி: தெய்வம்னாதாங்க அது தெய்வம். சிலைன்னா அது வெறும் சிலைதான். தெய்வம் உண்டுங்கற உங்க நம்பிக்கை ஆழமா வேர் விடற நேரங்க இது. அதனால பெரிய பிரச்னைகள் கூட ரொம்பச் சிறிசாயிடும். உங்க திறமையும் வெளிப்பட்டு முக்கியமானவங்க பாராட்டையும், ஆதரவையும் பெற்றுத்தரும். ஆபீஸ்ல உங்க நிர்வாகத்திறமை வெளிப்படும். புதிய பதவி, ஊதிய உயர்வுன்னு உற்சாகம் கூடும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான வாரம்தான். இருந்தாலும் எதிலும் நிதானமா முதலீடு செய்யுங்க. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு போயிடும்னாலும், மீண்டும் ஏற்படாமலிருக்க கொஞ்சம் பொறுமையா இருங்க. உடன் பிறந்தவர்களால சில குழப்பங்கள் ஏற்படலாம், எச்சரிக்கையா இருங்க. பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மையும், புதிய பொருள் சேர்க்கையும் ஏற்படும்.

துலாம்: மகாஞானி ஆஞ்சநேயனுக்கே அடுத்தவர் சொல்லித்தான் தன் பலம் என்னன்னு தெரிஞ்சுது. அதே மாதிரி உங்க பலம் என்னன்னு தெரிஞ்சுக்கற நேரங்க இது. நீங்க திட்டம் போட்டபடி எல்லாம் நடக்கும். எதிர்ப்புகள், எதிரிகள் எல்லாம் ஓடி ஒளிஞ்சுடுவாங்க. உங்க காரியம் எல்லாம் ஈடேறும். வெளிநாட்டுத் தொடர்புகள் சில அனுகூலமா இருக்கும். ஆபீஸ்ல இதுவரை தாமதமாகி வந்த உங்க கோரிக்கையெல்லாம் தனியா கவனிக்கப்பட்டு நிறைவேறும். புது முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். குடும்பத்தில் மக்களால் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர் ஆதரவு கை கொடுக்கும். பெண்களுக்கு பண வரவாலும், பிரிந்தவர் சேருவதாலும் மகிழ்ச்சி கூடும்.

விருச்சிகம்: நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்புன்னு சொல்வாங்க. உங்க திடமான நம்பிக்கை உங்களை சகலத்திலேருந்தும் காத்து, முன்னேற்றப் பாதையில் கொண்டு சேர்க்கப் போவுது. நண்பர்களும் உறவினர்களும் கைகொடுத்துக் காப்பாற்றுவாங்க. பேச்சிலேயும், பண விஷயத்திலேயும் மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. தொழில், வியாபாரத்தில் இருக்கிறவங்களுக்கு நிம்மதியான வாரம்னாலும், எதிலேயும் பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடிப்பது நல்லது. குடும்பத்தில் பொதுவான சுமுக சூழ்நிலையே நிலவும். குரு பலம் நிறைய இருக்கிறதால சுப வேளைகள் கூடி வரும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை, மக்களால் மகிழ்ச்சி சேரும்.

தனுசு: ஆன்மிகம் எந்தக் காலத்திலேயும் மனித அறிவுக்குக் கட்டுப்பட்டது இல்லங்க. நம்பிக்கைதான் ஆன்மிகத்தைப் புரிஞ்சுக்க ஒரே வழி. உங்க நம்பிக்கை கூடக் கூட, எல்லா நன்மைகளும் உங்களைத் தேடி வரும். காரியங்கள் எல்லாம் வெற்றிகரமா நிறைவேறும். தகுந்த பணவசதி வாரம் பூரா கை கொடுக்கும். ஆபீஸ்லயும் சிறு பிரச்னைகள் ஏற்படும். ஆனாலும் கவலைப்பட வேண்டாம். ஆண்டவன் அருள் எல்லாவற்றையும் தீர்க்கும். தொழில், வியாபாரம் என்றிருப்பவர்களுக்கும் கொஞ்சம் நெருக்கடிகள் தோன்றி நிவர்த்தியாகிவிடும். வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு பயன் தரும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். நெருக்

கடிகள் மெல்ல விலகி நிம்மதி சேரும். பெண்களுக்கு புதிய பொருள்கள் சேரும்.

மகரம்: அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்த கண்ணன் 'உன் கடமையைச் செய். பலனை எனக்கு அர்ப்பணித்து விடு' என்றான். தளர்ந்து போன அர்ச்சுனன் வேகமும் துணிவும் கொண்டது போல், நீங்கள் துணிவும் நம்பிக்கையும் கொள்ள வேண்டிய வாரங்க இது. அந்த வேகத்தில் எதிர்ப்புகள் மறையும், வெற்றி தேடி வரும். பண வரவும் கூடி மகிழ்ச்சி தரும். ஆபிஸில் உற்சாகச் சூழ்நிலை நிலவும் நிர்வாகத் துறையிலிருப்பவர்கள் மேன்மை பெறுவார்கள். தொழில், வியாபாரத்தில் சில நெருக்கடிகள் தோன்றி மறையும். குடும்பத்தில் குதூகலம் கூடி ஒற்றுமையும் திருப்தியும் உண்டாகும். திருமணம், மக்கட்பேறுன்னு காத்திருக்கிறவங்களுக்கு, சுப வேளை கூடி வந்துவிடும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

கும்பம்: ஆண்டவன் மனித ரூபத்தில் தான் வந்து உதவுவான்னு சொல்வாங்க. புதிய அறிமுகங்கள் சிலதும், பிரபு தனவான்களும் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவாங்க. உங்கள் திறமை பளிச்சிடும். ஆபீஸ்லயும் எல்லோர் ஆதரவும் உங்க பக்கம்தான். சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம்னு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இதுவரை இருந்த சிரமங்கள் குறையும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். குடும்பத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். பேச்சில் நிதானமும், செயலில் பொறுமையும் சுபகாரிய முயற்சிகளை அழகா நடத்தி வைக்கும். பெண்களுக்கு வெளிநாட்டிலிருந்து மக்கள் வருகை, புதிய பொருள் சேர்க்கை சேர்ந்து மகிழ்ச்சி தரும்.

மீனம்: பிரார்த்தனை எந்நாளும் வீண் போறதில்லைங்க. உங்க பிரார்த்தனை எல்லாம் ஆண்டவன் காதுக்கு எட்டி, வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படற வாரங்க இது. உங்க திறமையும், அறிவும் கூடி முன்னேற்றம் அதிகமாகும். பொருளாதாரமும் மேம்படும். ஆபீஸ்லயும் சிறப்பான வாரம். போட்டிகள் விலகி அனுகூலம் கூடும். தொழில், வியாபாரத்தில் நெருக்கடியான காலம் போயே போச். எதிர்பார்த்த உதவிகள் வந்து சேர்ந்துடும். குடும்பத்தில் இதுவரை இருந்த பண நெருக்கடி, மனக் கஷ்டம் எல்லாம் விலகி சந்தோஷம் கூடும். திருமணத்துக்குக் காத்திருக்கிறவங்க முகூர்த்த நாள் பார்க்கலாம். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.



ஐஸ் ராசியான ஜோடி அல்ல!

இந்தியப் பத்திரிகைகளில் தீயாய் எரிந்து கொண்டிருக்கும் சுனாமி நாயகன் விவேக் ஓபராய் - உலக அழகி ஐஸ்வர்யா ராய் காதல் பற்றி இத்தனை நாட்களாகக் கருத்து தெரிவிக்காதிருந்தவர், தற்பொழுது ஓர் ஆங்கில இதழுக்கு சூசகமாக மனம் திறந்திருக்கிறார். அதன் தொகுப்பு இதோ:

"தான் செய்யாத ஒரு காரியத்துக்காக ஒவ்வொரு முறையும் பதிலளிப்பது கடினமான விஷயம். யாராவது என்னை வேற்றுக்கிரகவாசி என்றால், நான் பிரயத்தனப்பட்டு அதை முறியடிக்க வேண்டியுள்ளது. பதினைந்து நாட்களுக்குப் பிறகு நான் சந்திக்கும் நிருபரிடம் எதிர்கொள்ளும் கேள்வி அதைப் பற்றியே இருக்கும்.

ஐஸ்வர்யாவுடனான எனது உறவு பற்றி, அவர் பேசும்பொழுது நான் அமைதியாகிறேன். நான் மௌனியாக இருக்கும்போது அவர் பேசுகிறார்.

எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி பேசுவது ஒன்றும் பெரிய சாதனையான குதூகலிக்கக் கூடிய விஷயமாக நினைக்கவில்லை. இரு உறவுகளுக்கு இடையே எடுக்கப்படும் முடிவுகளில் யாரும் நுழையக் கூடாது. இதைப் பற்றி என் வீட்டுக் கூரையேறி முழங்க வேண்டாமென நினைக்கிறேன்.

- விவேக் ஓபராய்

நாங்கள் இருவரும் ராசியான ஜோடியா என்றால், அதுவும் கிடையாது. நாங்கள் இருவரும் சேர்ந்து நடித்த படம் ஃப்ளாப் ஆகும்போது, இயல்பாக எங்களது கூட்டணியும் தோற்றுப் போகிறது. தியா மிர்ஸாவுடன் நடித்த 'தம்' தோற்றபோது ஆன நிலைமைதான் ஐஸ்வர்யா ராயுடன் நடிக்கும்போதும். இதனால் ஐஸ்வர்யா ராயுடன் தொடர்ந்து நடிக்க நான் வலுக்கட்டாயமாக முயற்சி ஏதும் எடுப்பதில்லை."

(திருஷ்டி கழியட்டும் என்று இப்படியெல்லாம் பேட்டி கொடுக்கறாரோ!)

- ச.ந. கண்ணன்





சிஸ்டம் தாதா!

கல்லூரி கம்ப்யூட்டர் லேப்-பில் உங்களை பெரிய தாதாவாகக் காட்டிக் கொள்ள சில 'shortcut' யோசனைகளைச் சொல்கிறார்கள் இந்த லேடி பில்கேட்ஸ்கள்:

- ஏதாவது ஒரு புரோகிராம் பிராசஸில் இருக்கும்போது, கண்களை மூடிக் கொண்டு, கைகளைக் கூப்பி, முடிந்தவரை சத்தமாக, 'ப்ளீஸ் வந்திரு... ப்ளீஸ் வந்திரு...'ன்னு வெட்கமில்லாமக் கத்தணும். ரிசல்ட் வந்தப்புறம், மானிட்டரைக் கட்டிப்பிடிச்சி 'இச்'கா ஒரு கிஸ் அடிக்கலாம்.
- மானிட்டர் ஸ்கிரீன்ல படபடன்னு ஒரு மார்க்கரை வைச்சு எழுத ஆரம்பிக்கணும். கேட்டா, 'ஹிஹி... கீ போர்டு ஒர்க் பண்ணலை'ன்னு இனிக்கணும்.
- சிஸ்டத்துல ஏதாவது 'Error' வர்றப்போ, 'நான் உனக்கு என்ன துரோகம் பண்ணினேன்'னு மெகா சீரியல் ரேஞ்சுக்குக் கண்ணீர் விடலாம்.
- லேப்புக்கு யாரும் வர்றதுக்கு முன்னாடி நுழைஞ்சு, மானிட்டர் கனெக்‌ஷனையெல்லாம் கோக்கு - மாக்கா மாத்தி விட்டுடணும். அப்புறமென்ன, நீங்க டைப் பண்றது, வேற ஒரு மானிட்டர்ல 'டிஸ்பிளே' வரும். ஒரு 'ஹைடெக் - கலவரமே' உருவாகும்.
- உங்க சிஸ்டத்தை கம்பளிப் போர்வையால போர்த்தணும். கீ போர்டுல தெர்மா மீட்டரை சொருகணும். சிஸ்டத்தை சுத்தி மாத்திரை, மருந்தெல்லாம் பரப்பணும். கேட்டா, சிஸ்டத்துக்கு 'வைரஸ் ஃபீவர்'னு பினாத்தணும்.





- சிஸ்டத்தை 'ஷட்-டௌன்' பண்ணிட்டு வர்றப்போ, பிரிவு தாங்காம தேம்பித் தேம்பி அழுதுட்டே வரலாம். உங்களோட பாசத்தைப் பார்த்து மேலும் சிலர் அழ வாய்ப்புண்டு.

(ஹலோ! தைரியம் இருந்தா டெஸ்ட் பண்ணுங்க! நல்ல பலன் கிடைக்கும்.)

\- முகில்



தமிழக இளைஞர் காங்கிரஸில் குழப்பங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் அதன் தலைமை விரைவில் மாற்றப்படக் கூடும் என்றும் அந்தப் பதவிக்கு இளம் தொழிலதிபரான நிதியின் வாரிசு நியமிக்கப்படலாம் என்ற பேச்சு காங்கிரஸ் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

- பாலிடிக்ஸ் பாப்பு

"நம்பிக்கையை உருவாக்கணும்"

இப்போதெல்லாம் கட்சிப் பதவிகளை இளைஞர்கள்... குறிப்பாக, படித்த இளைஞர்கள் கைப்பற்றத் துவங்கி விட்டனர். இது ஓர் ஆரோக்யமான சூழ்நிலைதான். அந்த வகையில் இந்த வாரம் ஓர் இளைஞர் தம்மை அறிமுகம் செய்து கொள்கிறார்.

"என் பேரு நவீன். நான் கடந்த நாலு வருஷமா தமிழ்நாடு மாணவர் காங்கிரஸின் தலைவராக இருக்கேன். ஸ்கூல்ல படிக்கும்போதே எனக்கு அரசியல் ஆர்வம் அதிகம். எங்கக் குடும்பமே அரசியல் குடும்பம்தான். நான் எம்.ஏ.படிச்சிருக்கேன். சட்டப்படிப்பும் படிச்சிருக்கேன். மாவட்ட அளவில் இருந்து படிப்படியா முன்னேறி, இப்போ இந்த மாநிலத் தலைவர் பதவிக்கு வந்திருக்கேன்.

"மாணவர் அணி எதுக்குன்னு நிறையப் பேர் கேட்கறாங்க. வருங்காலத் தூண்களோட நேரடித் தொடர்பு வைத்திருக்கும் ஒரே அமைப்பு மாணவர் அணிதான். அது அவங்களோட பிரச்னைகளைத் தீர்க்க குரல் கொடுக்கறதா இருந்தாலும் சரி... அவங்க சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கறதா இருந்தாலும் சரி... இப்போ மாணவர் காங்கிரஸின் பணி என்னன்னா, காங்கிரஸ் கட்சியோட கொள்கைகளை மாணவ-மாணவிகளுக்கு விளக்கி, அவங்களுக்கு காங்கிரஸ் மீது நம்பிக்கையை உருவாக்கி, அதன் மூலம் அவங்களைக் கட்சிக்குக் கொண்டு வர்றது. அதைத்தான் இப்போ முழுமூச்சா செய்துட்டு இருக்கோம்" என்று சொல்லும் இவருக்கு, வரும் தேர்தலில் போட்டியிட ஆர்வம் அதிகம். அதற்கு இப்பொழுதே தொகுதியையும் தேர்வு செய்து விட்டார்... அந்தத் தொகுதி, இவரது சொந்தத் தொகுதியான ராதாபுரம்!

- முராரி

படம்: ராஜன்



இளமை கல்கி

ஈ-மெயில், ஹீ-மெயில் ஷீ-மெயில்



அப்பப்பா...வர வர இந்த ஈ-மெயில் தொல்லை தாங்க முடியலைப்பா. காலையில எழுந்து ஈ-கண்ணை முழுச்சி ஈ-பல் தேச்சி, ஈ-காபி குடிச்சி, ஈ-டிபன் சாப்பிட்டுட்டு, ஈவினிங் வரைக்கும் ஈ-சாட் பண்ணிட்டு... ஓ நோ...லைஃப்பே ஈ மயமா மாறிப்போச்சு.

இப்ப இருக்கிற லவ்வர்ஸ் எல்லாருமே ஈ-லவ்வர்ஸ்தான். 'ஹீ' ஒரு ஈ-மெயில் அனுப்பினா, பதிலுக்கு 'ஷீ' ஒரு ஈ-ஸ்மைல் அனுப்புவாங்க. இவரு என்னவோ அர்ஜன்டினாவுல இருக்கிற மாதிரியும், அந்த அம்மா அல்ஜீரியால இருக்கிற மாதிரியும் 'அங்க க்ளைமேட் எப்படி இருக்கு?', 'இப்ப உங்க இடத்தில எதாவது போர் நடந்துக்கிட்டிருக்கா?', 'ரீசன்டா ஏதாவது பூகம்பம் வந்துதா?' 'டாடி ஆபீஸ் போயிட்டாரா?'ன்னு ஈ-மெய் மறந்து இரண்டு பேரும் ஈ-சாட் பண்ணிட்டிருப்பாங்க. 'ஹீ' தி.நகர்ல இருப்பாரு. 'ஷீ' மாம்பலத்துல இருப்பாங்க. ஹவ் ஈஸ் இட்?

ச்சோ ஸேட். இப்ப ப்ரெண்ட்ஸ் கூட நேர்ல மீட் பண்றது கிடையாதாம். ஈ-சாட்டிங்தான். அதுமட்டுமில்லை. ஈ-ஷாப்பிங், ஈ-ப்ரெண்ட்ஷிப், ஈ-க்ரீட்டிங், ஈ-காமர்ஸ், ஈ-பாங்கிங், ஈ-பார்க்கிங்னு ஒரே 'ஈ' மயம்தான். 'வாட் இஸ் யுவர் ஈ-நேம்?', 'வாட் இஸ் யுவர் ஈ-சன்ஸ் ஈ-நேம்?', 'வேர் இஸ் யுவர் ஈ-ஹோம்?'னு எல்லாரும் ஈயைப் பத்திதான் ரொம்ப அக்கறையா பேசிக்கிறாங்க. ஈ கேட்டா ரொம்ப சந்தோஷப்படும். சொல்ல முடியாது, ஈ கூட ஜீமெயில்ல ஈ-மெயில் அக்கவுண்ட் வச்சிருந்தாலும் வச்சிருக்கும். ஹூ நோஸ்? ஒன்லி ஈ நோஸ்.

ஆங்... அப்புறம் பஜ்ஜி சொஜ்ஜி கொடுத்து, பாட்டு, டான்ஸ், ஏராபிக்ஸ் எல்லாம் செய்யச் சொல்லி பொண்ணு பார்க்கற பழக்கம் போயே போச்சு. மானிட்டர்ல சிங்கிள் க்ளிக், டபுள் க்ளிக் செஞ்சாப் போதும். ஆன்லைன் ஈ-லைஃப் பார்ட்னர்ஸ் ரெடிலி அவெய்லபிள்.

வாவ்.... ஈ-டெக்னாலஜி எப்படி எல்லாரையும் கனெக்ட் பண்ணிருச்சு பாத்திங்களா? 'அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் அடுத்த வீடு மாதிரி ஆயிடிச்சு தெரியுமா'ன்னு சில ஈ-ஆளுங்க பீத்திக்கிறாங்க. இட்ஸ் ட்ரு. அமெரிக்கா பக்கத்துல வந்திருச்சு. ஆனா, அடுத்த வீடுதான் அமெரிக்கா மாதிரி எங்கேயோ போயிடுச்சு.

சரி சரி, இப்ப ஒரு முக்கியமான ஈ-விஷயம் பத்திப் பேச என் ஈ-ப்ரெண்ட்ஸ் எல்லாரும் ஈ-மெயில்ல ஈ மாதிரி என் கம்ப்யூட்டர்ல லாண்ட ஆகப் போறாங்க. ஓகே, ஸோ ஈ-பை சாரி பை... பை...

ஷீ-மெயில் லஜ்ஜாவதி

டி.வி.சிறுகதை

கேபிள்

அம்மன் கோவில் உச்சிக்கால பூஜைக்குப் போய்விட்டு வந்த தெய்வானை அம்மாள், வாசலில் குழாய்த் தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தாள். பதறி அடித்துக் கொண்டு ஓடிப் போய் குழாயை மூடினாள்.

தெய்வானை அம்மாள் வீட்டைத் திறந்து தண்ணீரால் நிரப்பினாள். பெருமை பிடிபடவில்லை. மருமகள் இருந்தால் மெச்சிக் கொள்வாள்.

வேலையைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு, டாண் என்று டீவியின் முன் உட்கார்ந்தாள். 'அடடா - ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்த மாமியாரைப் பார்க்க; மருமகள் நேற்று காரில் புறப்பட்டுப் போனவள், போய்ச் சேர்ந்தாளா, சேரவில்லையா? சீன் போய்விட்டதே...'

அம்மன் கோயில் பூசாரிகூட ரொம்ப நல்லவர். மளமளவென்று, அதிக நேரம் தீபாராதனை காட்டாமல் முடித்துக் கொண்டார். விவரம் தெரிந்த மனிதர்.

டீவி சீரியல் கதையில் மாமியார், நேற்று மாடிப்படியிலிருந்து விழுந்து விட்டாள். தலையில் பலமான அடி. மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறாள். அவளிடமிருந்த சாவிக் கொத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பதுதான் கதை, மருமகளின் உலக மகா வருத்தம். அலுவலகத்திலிருந்து வந்தவள், அதைக் கேள்விப்பட்டு, ஆஸ்பத்திரிக்கு காரில் விரைகிறாள். போய்ச் சேருமுன் ஆவி பிரிந்து விட்டால் - ஒரே பதற்றம்!


நிஜ மாமியாரான தெய்வானை அம்மாளும், மருமகள் மாலினியும் அப்படி இல்லை. நல்ல சிநேகம், தாயும் மகளும் போல. மகன் ரமேஷ் ஓர் அப்பாவி. எல்லாருக்கும் இருக்கும் குடும்பத் தலைவலி அவனுக்கில்லை.

நான்கு மணிக்கே, அலுவலகத்திலிருந்து புறப்பட்டு விட்டாள் மாலினி. தண்ணீர் பிடிக்க வேண்டும், பாவம் மாமியார்!

போனவாரம் 'பாளையத்து அம்மன்' சினிமாவுக்குப் போய் படம் நடக்கும் போது, அருள் வந்து ஆட ஆரம்பித்து விட்டாள். அதைப் பார்த்து பக்கத்திலிருந்த இரண்டு பேரும் சேர்ந்து ஆட, திரை அரங்கே பக்தி வெள்ளத்தில் மூழ்கியது. குலவைச் சத்தம் கூரையைத் தகர்த்தது.

அப்படிப்பட்ட பக்திப் பழமான அத்தையை நோகாமல் வைத்துக் கொள்ள வேண்டும். ஆர்வத்துடன் கிளம்பினாள் மாலினி.

வீட்டுக்கு வந்து பார்த்தபோது, எல்லா பக்கெட்டுகளிலும், தொட்டியிலும் தண்ணீர் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. கொடியில் உலர்ந்து கொண்டிருந்த



குடுமிப்பிடி!

ஒண்டிப்புதூர் தேவமணி

துணிகள் அப்படியே இருந்தன. பாத்திரங்களை விளக்கவில்லை. எல்லாம் போட்டது போட்டபடி இறைந்து கிடந்தது.


டீ.வி முன்பாக அத்தையைக் காண வில்லை. அறை இருட்டாக இருந்தது. விளக்கைப் போட்டாள். மரவட்டை போல கட்டிலில் சுருண்டு படுத்திருந்தாள், தெய்வானை அம்மாள்.

"அத்தை, அத்தை, ஏன் படுத் துட்டீங்க? உடம்புக்கு என்ன?" நெற்றி யைத் தொட்டுப் பார்த்தாள்.

"ஏன், ஏதாவது சீக்கு வந்து படுத் துட்டேன்னு பாக்கறியா... தொடாதே என்னை. எப்படா தொலைவான்னு நினைக்கிற மருமகள் ஜாதிதானே நீ?" வார்த் தையில் சீற்றம், கண்களில் சிவப்பு. சாமியாடினாள் மாமியார்.

சினிமாவைப் பார்த்து சாமி ஆடி யவள், டீ.வி தொடரை தினம் தினம் பார்த்து, அந்தப் பாத்திரங்களோடு அப்படியே ஒன்றிவிட்டாள் எனப் புரியாத மாலினி, அழுகையில் உறைந்து நின்றாள்.

அந்நேரம் டீ.வியில் தொடர் தெரியவில்லை. லைவ்வாக வீட்டில் தெரிந்தது.



பங்குச்சந்தை

வி. கோபாலன்

பறக்குது...சிறக்குது...!

பிப்ரவரி 28ம் தேதி வெளி வர இருக்கிற மத்திய அரசின் அடுத்த நிதி ஆண்டுக்கான வரவு செலவு கணக்கு விபரங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற எல்லோருடைய மன நிலையும், பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மாணவனின் மனநிலையை ஒத்தே இருக்கிறது.

மத்திய பட்ஜெட் தங்களை தாக்கப் போகிறதா, அல்லது தூக்கி விடப் போகிறதா என்று பலதரப்பட்ட மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பங்கு மார்க்கெட்டும் இந்த எதிர் பார்ப்புகளுக்கு விதிவிலக்கல்ல! வெகு வேகமாக ஏறிய பங்கு மார்க்கெட், மத்திய பட்ஜெட் வரும் நாள் நெருங்க, நெருங்க ஓரளவுக்கு மந்தமாகிக் கொண்டு வருகிறது.

மத்திய பட்ஜெட்டின் அம்சங்கள் பங்கு மார்க்கெட்டில் எப்படி பிரதிபலிக்கிறது என்பது விரைவில் தெரிந்து விடும். இதைப் பற்றி விரிவாக அடுத்த வாரம் பார்க்கலாம்.

இந்த வாரம் ஒரு சுவையான செய்தி. Jet Airways தன் பங்குகளை விற்பனைக்குக் கொண்டு வருவதைப் பற்றி ஏற்கெனவே எழுதி இருந்தோம். இந்தப் பங்குகளின் விற்பனை பிப்ரவரி 18ம் தேதி ஆரம்பித்து பிப்ரவரி 24ம் தேதி முடிவடைவதாக Jet Aiways தெரிவித்திருந்தது. ஆனால் விற்பனை ஆரம்பமான முதல் நாள் அன்றே, அதாவது பிப்ரவரி 18ம் தேதி முதல் சில மணி நேரங்களிலேயே பங் குகள் முழுவதற்கும் விண்ணப்பங்களும் பணமும் வந்துவிட்டதாகத் தெரிவிக்கிறது. அதாவது சுமார் 2000 கோடி ரூபாய். விற்பனை முடியும் தேதிக்குள், பல மடங்கு விண்ணப்பங்களும் அதற்குரிய பணமும் வந்திருக்கும்.



சமீபத்தில் இந்திய ஸ்டேட் வங்கி (State Bank of India) வரும் நிதி ஆண்டில் 3000 கோடி ரூபாய்க்கு புதிய மூலதனம் திரட்டப் போவதாக அறிவித்திருக்கிறது. அதற்கான பங்குகள் விற்பனைக்கு வரும்போது விண்ணப்பிக்கலாம்.

பட்ஜெட்டினால் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய துறை வங்கித் துறை. இந்த வங்கித் துறையில், தனியார் வங்கி HDFC Bank நன்றாகச் செயல்பட்டு வருகிறது. வீடு கட்ட முதன் முதலாக கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்த Housing Development Finance Corporation என்ற HDFCயால் ஆரம்பிக்கப்பட்டது, HDFC வங்கி. இந்த HDFC வங்கியின் பங்குகளை வாங்கலாம். எதிர்காலத்தில் விலை ஏற வாய்ப்புண்டு.



உள்ளம் உயரட்டும்!

சென்னை ஆழ்வார்பேட்டையிலிருக்கும் ஆஸ்திக சமாஜத்துக்கு இப்போது 38 வயது. ஆரம்பத்திலிருந்தே அதன் செயலர்களில் ஒருவராக இருந்து வரும் டி.கணேசன், "இதற்கு முன்னால், சுவாமி சிவானந்தரின் 'டிவைன் லைஃப் சொசைட்டி' என்று தான் சாய் சமாஜத்தில் நடத்திக் கொண்டிருந்தோம். பிறகுதான் இங்கே வீனஸ் காலனியில் கொட்டகை போட்டோம்!"என்கிறார்.

1968ல் வீனஸ் பிக்சர்ஸ் ரத்தினம் ஐயர் (ஜி.வி-மணிரத்னம் இவர்களின் தகப்பனார்) தலைவராகவும், நல்லி ரங்கசாமி செட்டியார் துணைத்தலைவராகவும், நாராயணய்யர் பொருளாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர். ஆர். ராமமூர்த்தியும், டி.கணேசனும் செயலர்களாக இருந்தார்கள். 70ல் ஆரம்பித்து 72ல் கட்டடம் முடிந்தது.

"திருமுருக கிருபானந்தவாரியாரை வைத்துத்தான் முதல் சொற்பொழிவுத் தொடரைத் தொடங்கினோம். பாலகிருஷ்ண சாஸ்திரிகளின் மகாபாரதம், ராமாயணச் சொற்பொழிவுகள் என்றால், ஹவுஸ் ஃபுல் ஆகிவிடும்."

முக்கூர் சுவாமிகளின் சொற்பொழிவுகளுக்கும், தூப்புல் லக்ஷ்மிநரசிம்மனின் சொற்பொழிவுகளுக்கும் எப்போதும் நல்ல கூட்டம் இருக்கும். ஸ்ரீவத்ச ஜெயராம சர்மாவும் பக்தர்களை நிறைய ஈர்த்தவர்.

"இப்போது ஆஸ்திக சமாஜ சொற்பொழிவாளர்கள் யார் யார்?"

"கல்யாணபுரம் ஆராவமுதாச்சாரியார், கலி சிவம், சுதா சேஷய்யன், வேளுக்குடி கிருஷ்ணன், கிருஷ்ணபிரேமி சுவாமிகள், தாமோதர தீட்சிதர், சுந்தர் குமார், ராம தீட்சிதர், சங்கர விஜயம் சொல்வதில் தேர்ந்த சுந்தரேச தீட்சிதர், நாகை முகுந்தன், மணிவண்ணன் என்று நிறையப் பேர் இருக்கிறார்கள். சந்தான கோபாலாச் சாரியாரும் நிறைய நிகழ்ச்சிகள் வழங்கியிருக்கிறார். ஜேசுதாஸ் ரெகுலர். இவர்கள் யாருமே 'சன்மானம் இத்தனை வேண்டும்' என்று கேட்டதே இல்லை. காரைக்குடி மணி இங்கே மிருதங்கம் வாசித்தால் பணமே வாங்க மாட்டார்!" என்கிறார் கணேசன்.

தற்போது சீனியர் அட்வகேட் கோபாலரத்தினம் தலைவராகவும், ஆர்.கிருஷ்ணஸ்வாமி - காசி நாதன் துணைத் தலைவர்களாகவும், கணேசனும், வி. நாராயணனும் செயலர்களாகவும், ஜி. சீதாராமன் பொருளாளராகவும் பொறுப்பு வகிக்கிறார்கள். நன்கொடைகள் மூலமே எல்லா நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. "எஸ்.வி.எஸ்.ராகவன், ஒபுல் ரெட்டி, நல்லி குப்புசாமி செட்டியார், காசி நாதன் என நன்கொடையாளர்கள் ஆஸ்திக சமாஜத்தை ஆதரித்து வருகிறார்கள்!"

"ஆஸ்திக சமாஜத்துக்காக டைரக்டர் பீம்சிங் ஆறு கிரவுண்டு நிலத்தை ரூ.1,20,000க்குப் பேசி முடித்து, தன் பங்கான நன்கொடை ரூ.20,000ம் கையில் கொடுத்தார். ரத்தினம் ஐயர், அவர் சகோதரர் கிருஷ்ணமூர்த்தி, எம். நீலகண்டய்யர் என்று பிறகு நிதி கொடுக்க, ஆஸ்திக சமாஜத்துக்கு தனி இடம் கிடைத்தது! இதை மறக்காமல் குறிப்பிடுங்கள்" என்கிறார் கணேசன்.

- எஸ்.வி.என்.

படம் : வெங்கடேஷ்

17

குறையொன்ற


"என்னைச் சேர்ந்தவை எல்லாம் உன்னைச் சேர்ந்தவை; என்னுடையவை அல்ல. யானும் என் உடைமையும் என்னுடையவையல்ல" என்கிறார் ஆழ்வார். அப்படி, சமஸ்தமும் அவன்தான், அவனைச் சேர்ந்தது இது அத்தனையும், அவனுடைய ஆதீனத்திலே இருக்கக் கூடியது. 'அவன் பொருட்டு' என்று இது மொத்தத்தையும் எவனொருவன் அர்ப்பணம் பண்ணுகிறானோ, அவன் மேன்மையுறுகிறான். அப்படி இல்லாமல் அவஸ்தைப்படக் கூடியவன், பகவத் ஞானம் என்கிற இருபத்தாறாவது தத்துவத்தை உணராதவன். அப்படிப்பட்டவன் பலவிதமான அவஸ்தைகளுக்கு ஆளாகிறான்.

ஆகையினால் நாம் வேறு, பிரக்ருதி தத்வம் வேறு என்பதை உணர வேண்டும். பஞ்ச பூதங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறான் பரமாத்மா. பஞ்ச பூதங்கள் ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருத்வி.

உபநிஷத்தானது இவை எப்படி ஒன்றிலிருந்து ஒன்று தோன்றின என்பதைக் கூறுகிறது.


முதலில் ஆகாசம் - அதற்கு ஒரே ஒரு குணம்தான் - சப்தம் என்கிற குணம். ஆகாசத்திலிருந்து வாயு தோன்றியது. அதற்கு சப்தம், ஸ்பரிசம் என்று இரண்டு குணங்கள். 'ஹோ'வென்று வருகிறபோதே சப்தத்தோடு வருகிறது. காற்று வீசுகிறது என்பதை ஸ்பரிச ஞானத்தினாலே நாம் உணர்கிறோம்.

வாயுவிலிருந்து தோன்றிய அக்னிக்கு மூன்று குணங்கள். சப்தம், ஸ்பரிசம், ரூபம். வாயுவைப் பார்க்க முடியாது; ஆனால்



...ல்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



அக்னியை நாம் பார்க்கிறோம். ஏழு நாக்குகளுடன் ஜொலிக்கக் கூடிய அக்னியை நாம் பார்க்கிறோம்.

அக்னி என்கிற பெயர் எதனால் ஏற்பட்டது என்றால்,


'அக்ரம் நயதி' - நம்மை முன்னுக்கு அழைத்துச் செல்லக் கூடியவன் அக்னி. இப்போது இருக்கிற நிலையிலிருந்து உயர்த்தி, மேலுக்கு அழைத்துச் செல்பவன்.


கர்ம காண்டத்திலேயும், ஞான காண்டத்திலேயும் அக்னிக்குப் பிரத்யேகமாக ஒரு மந்திரம் வருகிறது. ஞான காண்டத்தில் ஈசாவஸ்ய உபநிஷத்தில், பதினெட்டாவது மந்திரமாக, கடைசி மந்திரமாக - சரணாகதி மந்திரமாக அது வருகிறது. கீதையிலே இதை விவரித்துத்தான் பரமாத்மா பேசினார். இந்தப் பதினெட்டு மந்திரங்களும் பதினெட்டு அத்தியாயங்களாக பகவத் கீதையில் மாறியிருக்கின்றன. அதனை ஆசார்யர்கள் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

'நம:' என்பது சரணாகதி மந்திரம். அதை விவரிக்கத்தான் பரமாத்மா, கடைசியிலே சரம சுலோகத்திலே எடுத்துக் காட்டினான்.

'ஹே அக்னே! நல்ல மார்கத்தில் என்னை அழைத்துக் கொண்டு போ. கோணலான மார்கத்தைத் தடுத்து, எது சன்மார்கமோ, உயர்ந்த மார்கமோ, அதிலே நீ அழைத்துச் செல்ல வேண்டும்.'

மார்க ஸகாயனான அக்னிக்கு நல்லது எது, கெட்டது எது என்பது தெரியும் என்





நம் வாழ்நாள் பனிக்கட்டி போல உருகிக் கொண்டே போகிறது. பிறவி எடுத்ததன் நோக்கமே, இறைவனை அறிவதுதான். தூய சிந்தனையாக, மிக உயர்ந்த மனசாட்சியாக உன் இதயத்தில் இருப்பதே இறைவன்தான். அந்த இறைவனை வேறெங்கும் தேடாதீர்கள்.

- ஸ்ரீ சத்திய சாயிபாபா

கிறது வேதம். வித்வான் அவன்! வித்வான் என்கிற சப்தத்துக்கு 'நன்கு உணர்ந்தவன்' என்று அர்த்தம். கசடறக் கற்றுத் தேர்ந்தவன். நல்ல ஞானம் உடையவன் அக்னி!

பாபக் குவியல் நம்மிடம் உள்ளது. சஞ்சிதம், ஆகாமி, பிராரப்தம் - இந்த மூன்றையும் சேர்த்து ஒரே பதத்தில் சொல்ல வேண்டுமானால், 'ஏன:' என்கிறது வேதம். ஏன: - பாபக்குவியல்.

சஞ்சிதம் என்பது நாம் நிறைய மூட்டை கட்டி வைத்திருக்கிற பாவம். ஏற்கெனவே செய்த வினைகளால் ஏற்பட்டது. அது ஏகமாக இருக்கிறது. இன்னும் அவிழ்க்கவேயில்லை... மூட்டை மூட்டையாக இருக்கிறது! 'பாபமே செய்து பாவியானேன்' என்றது போல, ஒரே பாவ மூட்டை!

மேற்கொண்டு ஆகாமி... அதாவது, வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில் நாம் பல பாபங்களை, பாபங்கள் என்று தெரிந்தும் பண்ணுகிறோம்; தெரியாமலும் பண்ணுகிறோம். தெரிந்தாலும் பண்ணுகிறோம், அதை விட முடியவில்லை என்ற நிலை. பாபம் என்பது நன்றாகத் தெரிகிறது. அதற்கான முன்னேற்பாடெல்லாம் கூட பலமாக இருக்கிறது. 'பண்ணக் கூடாது பண்ணக் கூடாது' என்று நினைத்துக் கொள்வோம்; ஆனால், பண்ணிக் கொண்டே இருப்போம்!

'புராணாம்தே, ஸ்மசானாம்தே' என்று சாஸ்திரம் அழகாகச் சொல்கிறது. புராணம் முடிகிறபோது - அதாவது, இப்போது உபன்யாஸம் கேட்கிறோமே, அந்த மாதிரி கேட்கிறபோது - சொல்கிறவர்களுக்கும் சரி, கேட்கிறவர்களுக்கும் சரி, ஏற்படுகிற வைராக்கியம் இருக்கிறது பாருங்கள்... அது என்றென்றைக்கும் அப்படியே இருந்து விட்டதானால், மறுபடியும் ஏன் நாம் பிறவியை அடைகிறோம்!

ஆனால் இங்கே உபன்யாஸம் முடிந்த அடுத்த க்ஷணம் நாம் என்ன பண்ணுகிறோம்? போய்த் தூங்குகிறோம். தூங்கினால், இங்கே ஏற்பட்ட இந்த வைராக்கியத்துக்கும் சேர்த்துத் தூக்கமாகப் போய்விடுகிறது. பிராதஹ் காலம் எழுந்து கொள்கிறபோது, முந்தைய தினம் கேட்டதற்கும், வாழ்வதற்கும் சம்பந்தமில்லாதிருக்கிறோம்.

அதேமாதிரிதான் ஸ்மசானாம்தே - ஸ்மசானத்தில் ஒரு மகானுக்கு அந்திம க்ரியை. 'இவர் எப்பேர்ப்பட்ட மகான்! எப்படி இருந்தார், இப்படி ஆகிவிட்டதே...' என்று அவரைப் பார்க்கிறபோது நாம் எண்ணுகிறோம். 'இவருக்கே இந்த நிலை என்றால், நாளைக்கு நமக்கெல்லாம் என்ன கதி!' என்று தோன்றும்.

ஆனால் ஸ்மசானத்திலிருந்து நேரே வீட்டுக்கு வருவதில்லையே... நதியிலே ஸ்நானம் பண்ணிவிட்டு வரவேண்டும். அப்படி நாம் நதியிலே முழுக்குப் போடுகிறபோது, ஸ்மசானத்திலே தோன்றிய வைராக்கியத்துக்கும் சேர்த்து ஒரே முழுக்காகப் போய்விடுகிறது!

மறுபடியும் வீட்டுக்கு வருகிற வரையிலே வைராக்கியம் நிலைப்பதில்லை நமக்கு! ஆனால் முன்னேற்பாடு மட்டும் பலமாக இருக்கிறது!

அதனால், அக்னியைப் பார்த்து, "ஏன:"- 'எத்தனையோ பாபக் குவியல், பாபங்கள் மூட்டைக் கட்டி வைத்திருக்கிறோம்- நிறைய ஆகாமி, நிறைய பிராரப்தம்... ('அவர் ஏன் இப்படி இருக்கிறார்?' என்று க்ஷீண தசையில் உள்ள ஒருத்தரைப் பார்த்துக் கேட்டால், 'எல்லாம் பிராரப்தம்' என்று சொல்வது உண்டு.) பிராரப்தம் என்பது அவிழ்த்து வைக்கப்பட்ட பாப மூட்டை. அதைத் தான் தக்க்ஷணம் அனுபவித்துக் கொண்

டிருக்கிறோம் நாம். மனுஷ்ய ஜன்மாவை அடைந்ததன் மூலமே அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

புண்யம் - பாபம் - இரண்டும் சேர்ந்து பலனைக் கொடுக்க ஆரம்பிக்கிற போதுதான், மனுஷ்ய ஜன்மா உண்டா கிறது. புண்யமே பலனைக் கொடுத்தது என்றால், உயர்ந்த தேவதா ஜன்மா நமக்கு ஏற்படும். பாபம் பலனைக் கொடுக்க ஆரம்பித்தது என்றால், தாவர வர்க்கம் அல்லது பிராணி வர்கமாக நாம் பிறப்போம்.

புண்யத்துக்கும் பாபத்துக்கும் இடையே ஒரே சண்டை! 'நான் முன்னே, நீ முன்னே!' என்று ஏகமாகச் சண்டை வருகிறது. ஒன்று பிடித்து மற்றதைக் கீழே தள்ளுகிறது. இரண்டினுள் எது அதிக பலம் பொருந்தியதோ, அதற்கு ஏற்ற மாதிரி ஜன்மா ஏற்படுகிறது. பாபத்தை அடித்து, புண்ணியம் முன்னே வந்தால், அதற்கான பலன். பாபமும் புண்ணியமும் சில சமயம் சமமாகப் போய்விடுகிறது. நாம் மனிதர்களாகப் பிறந்திருக்கிறோம் என்றால், அதிலிருந்தே தெரிந்து கொள்ள வேண்டும் - புண்ணியமும் பண்ணியிருக் கிறோம்; பாவமும் பண்ணியிருக்கிறோம். அவ்வாறு இல்லையானால், மனுஷ்ய ஜன்மா நமக்குக் கிடைத்திருக்காது!

அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது. மனுஷ்ய ஜன்மம் ரொம்ப துர் லபம்.

ஆதி சங்கர பகவத் பாதாள், விவேக சூடாமணி என்ற சுலோகத்திலே சொல் கிறார்:

'ஜந்துக்களிலேயே நர ஜன்மா என்பது ரொம்ப துர்லபம்!' என்கிறார்.

மனித ஜன்மாவையும் கூட ஜந்துக் களோடு சேர்க்கிறார் பகவத் பாதாள். நமக்கு ஜந்து என்று பெயர் வைத்தார்!

ஏன்...? ஜந்துக்கள் எல்லாம் சாமான்ய மானவை. அந்த சாமான்ய உயிர்களைப் போல்தான் மனிதனும். ஆனால், மனு ஷன் என்றால், அவனுக்கு அறிவு அதிக மாக இருக்கிறது. நரஜன்மா கிடைத் திருந்தால், அதை சத்வினியோகம் பண்ணிக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் பகவத்பாதாள்.

இப்படி, புண்யமும் - பாபமும் பலனைக் கொடுக்க ஆரம்பித்து, மனுஷ்ய ஜன்மாவை நாம் அடைந்திருக்கிறோம்.

அந்த மாதிரி, 'பிராரப்தம் - அதாவது பலனைக் கொடுக்க ஆரம்பித்திருக்கும் கர்ம வினை மொத்தத்தையும் நீயே போக்க வேண்டும்' என்று அக்னியிடம் வேண்டுகிறோம்.

அக்னியில் ஹோமம் பண்ணுகிற போது, சகல பாபங்களும் போகங்க வேண்டும் என்று கேட்கிறோம்.

'ஹே அக்னே! நீ பண்ணுகிற இந்த உபகாரத்துக்குப் பிரத்யுபகாரம் பண்ண முடியுமா? வேறு எங்களால் என்ன பண்ண முடியும்?'

" 'அக்னயே நம: ஜாதவேதயே நம: ஸஹோஜயே நம:' என்று அக்னியைப் பலவாறு 'நம: நம:' என்று ஸேவிப்போம். கைகூப்பி ஸேவிப்போம்'' என்கிறது வேதம்.

'விழுந்து ஸேவி' என்று கூட சொல்லவில்லை. 'நம:' சொல்லி கையைக் கூப்பினால் போதும்!

'நம:' என்று சொல்லுவோம். நிறைய 'நம: நம:' என்று சொல்லுவோம்.

– இதை ஆசார்யர்கள் வியாக்யானம் பண்ணுகிறபோது, 'நாம் கொஞ்சமாக நம: சொன்னாலே அக்னி ரூபியின் பகவான் அதை அதிகப்படியாக எடுத்துக் கொண்டு விடுவான்' என்கிறார்கள்.

'அடாடா! நம: என்பது இவன் வாயில் வந்துவிட்டதே!' என்று மகிழ்ச்சியோடு எடுத்துக் கொண்டு விடுவானாம்.

(வளரும்)



''நாளைக்கு துக்க விழாவுக்கு மறக்காம வந்துடுங்கன்னு சொல்லிட்டுப் போறாரே... உள்ளூரா, வெளியூரா?''

''லோக்கல்லதான். அவனுக்குக் கல்யாணமாம்!''

-எம்.ஆர். மூர்த்தி

நன்மை பயக்கும்...

'கல்கி'யின் வெள்ளிவிழா ஆண்டு கொண்டாட்டத்தின் போது அறிவிக்கப்பட்ட போட்டியில் 'முள்ளும் மலரும்' என்ற நாவலை எழுதி, முதல் பரிசாக பத்தாயிரம் ரூபாயை வென்றார் எனது தந்தை உமா சந்திரன். அவருக்கு இப்பரிசு மிகப் பெரிய அங்கீகாரம் அளித்தது. அது மிகப் பெரிய பரிசுத் தொகை. அது குடும்பத்துக்குப் பெரிதும் உதவியதோடு, எங்களிடையே மிகப் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது.

என் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த கல்கியை நினைத்தாலே, சிறு வயதில் ஆர்வத்துடன் படித்த வீர விஜயன் என்கிற கார்ட்டூன் தொடர் ஞாபகத்துக்கு வரும்.

தனது லட்சியம், கோட்பாடு எதையும் சிறிதும் தளர்த்தாது, நன்மை பயக்கும் பத்திரிகையாக 'கல்கி' விளங்குவது பத்திரிகை உலகுக்கே ஆரோக்கியமான விஷயம்.

- ஆர். நடராஜ்,
சென்னை போலீஸ் கமிஷனர்




படம்: ஸ்ரீஹரி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

Happiness Starts at SIXTY

Earn upto 1% additional Interest

Special benefit for Senior Citizens. Earn upto one percent more interest on our deposit schemes



DOMESTIC TERM DEPOSITS

Period	For Deposits of less than Rs. 25 lakhs	For Senior Citizens Deposits of less than Rs. 25 lakhs
7 - 14 days (*)	4.50 %	5.50 %
15 - 45 days	4.50 %	5.50 %
46 - 90 days	5.50 %	6.50 %
91-179 days	5.75 %	6.75 %
180 days to less than 12 months	6.00 %	7.00 %
12 months to less than 2 years	6.50 %	7.50 %
2 - 3 years	7.00 %	7.50 %
Above 3 years and upto 5 years	6.75 %	7.50 %
Above 5 years	6.75 %	6.75 %

(*) For deposits of Rs.1 Lac and above (Rate % p.a.)

Note : 1) Additional rate of 0.25% is payable for a single deposit of Rs. 25 lacs & above and less than Rs.5 crores with a maturity period of 7 days and above and upto and inclusive of 179 days.

2) Avail 6.75% on a single deposit of Rs.5 crore and above for 91 days to 364 days maturity.

High Interest Deposit Schemes

- TMB Visa
- Pearl Deposit
- Muthukuvial Deposit
- Cash Certificate
- Fixed Deposit
- Recurring Deposit
- Navarathnamala Deposit

TAMILNAD MERCANTILE BANK LTD.

Regd. Office : 57, V. E. Road, Thoothukudi - 628 002
Contact our nearest branch or Visit us at www.tnmbonline.com